BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 10 ♦ ISSUE - 208 ♦ FRIDAY 20 DECEMBER 2013

IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119, Tooting High street, London, SW17 0SY

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck, Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free: 0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




Krishna Fancy & Video
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்காட்
- பேக்ஸ் – ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு
- ஆடியோ – வீடியோ
- (தமிழ் – மலையாளம்)
- செய்தித்தாள்கள் (தமிழ் – மலையாளம்)




Tel: 0208 684 9835
307, London Road, Croydon, CR0 3PA
Fax: 0208 683 0852 | Mob: 07712704302

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முழுந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

A CAMBRIDGE TUTOR
CHEMISTRY & BIOLOGY
KS3, GCSE, A/S & A LEVELS
(All ExamBoards) 1-2-1 and Small Group
Few Places Available
Contact:
Dr. K. Tharani (BmedSci, MBBS)
K. Pragash (BA, Cambridge Medic)
(Ex. Tiffinians)
Tel: 07940499852
Email: pragash.cambridge@gmail.com
New Malden & Surrey Areas
Upon request can also provide medical school interview preparation

கடை விற்பனைக்கு




Birmingham பகுதியில் உள்ள New Shop, Lease Hold / Rent க்கு கொடுக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு - ஆனந்தன்
Mobile - 07545269464

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.



We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail: info@hsfc.org.uk | Web: www.hsfc.org.uk




ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, and Profit & Loss Account & VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants. • You will get the chance to learn how to model practical case scenarios.

**AIKON ACCOUNTANTS LTD**
CHARTERED MANAGEMENT ACCOUNTANTS
Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331
Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com

## We may have herbal solutions for your problems

உங்கள் தாம்பத்திய
வாழ்க்கையில் சிக்கல்களா?

காலத்தை வீணடிக்காமல்
தொடர்பு கொள்ளுங்கள்.



ஆண்மைக் குறைவுக்கான
சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு

சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**Herbal Aid Health Centre**
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
Tel: 020 8843 0330
Email : herbalaid@hotmail.co.uk
web : www.herbalaidhealthcentre.co.uk

*Merry Christmas & Best Wishes for a Happy New Year*

*Fushia Restaurant and Banqueting Hall*

BAR - RESTAURANT - BANQUETING



*Taking order for christmas party*

Celebrate christmas at Fushia



Please contact Srinivasan
Mob : 07958 424 222

Tel : 020 86808833
W : www.fushiauk.com | E-mail:info@fushiauk.com
3 Brighton Road, South Croydon, CR2 6EA
Plenty of free parking available nearby during our opening hours

FUSHIA

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING
**UK COOL**
AND SHOPFITTING Ltd.
168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார்
புதுவருட நல் வாழ்த்துக்கள்

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

## GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக
தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்

நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார்,
புதுவருட நல்வாழ்த்துக்கள்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
07983 589 993
07723 467 012




## வாழ்த்துகள்!

புதுவருடம் பிறப்பதும், புது எண்ணங்கள் தோன்றுவதும் நல்ல திட்டங்கள் தீட்டுவதும் வழமையான சம்பிரதாயம், புத்தாண்டில் ஈழத்தமிழ் மக்களைப் பீடித்துள்ள இடர்கள் நீங்கி, அமைதியும், சமாதானமும், சாந்தியும் நிலவ இறைவனை வேண்டுகிறோம். '***ஒரு பேப்பர்***' வெளிவர உழைக்கும் ***ஒரு பேப்பர்*** காரன்களுக்கும், காரிகளுக்கும் நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.

*- அன்புடன் உமா மகாலிங்கம்*

## கதைக்கிறது வீண் வேலை

கல்முனைப் பிரதேசத்தில் தமிழர்களுக்கென்று தனிப் பிரதேச சபை உருவாக்கப்பட்டால் அது முஸ்லீம் காங்கிரஸின் கோரிக்கையா அம்பாறை மாவட்டக் கரையோர தனி முஸ்லீம் மாகாண சபைக் கோரிக்கைக்கு இடைஞ்சலாகி விடுமென்பதாலேயே ரவூப் ஹக்கீம் போன்றோர் தமிழர் பிரதேச சபையை எதிர்க்கின்றனர். பொதுபலசேனா போன்ற இவ்விடயத்தில் தமிழர்களின் நிலைப் பாட்டை ஆதரிக்கக்கூடிய சக்திகளிடம் முஸ்லீம் காங்கிரஸின் உள்நோக்கத்தைத் தெளிவுபடுத்தி தமிழர்கள் தங்கள் பிரதேச சபைக்கான ஆதரவை வலுப்படுத்த வேண்டும். மற்றும்படி முஸ்லீம் காங்கிரசுடன் இது தொடர்பாகக் கலந்துரையாட வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

*- கரு*

## யாழ்ப்பாணத்தில் போதைப் பொருட்கள்

தமிழீழத்தில் யுத்தத்திற்குப் பின்னர் தமிழினம் பல்வேறு வழிகளில் அழிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களைக் குறிவைத்து போதைப் பொருட்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம், தமிழினத்திடமிருந்து எத்தகைய அசாதாரண சூழல்களிலும் கூட அழிக்க முடியாத கல்வியையும் கலாச்சாரத்தையும் அழித்தொழிக்கும் திரைமறைவு முயற்சியே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் மாணவர்களின் புத்தகப்பைகளில் போதைப் பொருட்களோடு பாடசாலைகளுக்குச் சென்றாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

*- பா. கஜதீபன்*

## தேசபக்தின்னா சும்மாவா?

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றிய இந்திய இராஜதந்திரி தேவயானி கோப்ரகடேவுக்கு விழுந்த அடி ஒவ்வொரு இந்தியன் முதுகிலும் விழுந்த அடி.... இதை எவரும் அனுமதிக்க முடியாது.... எனவே மை லோர்ட்.... இந்தியா இப்போதே அமெரிக்கா மீது போர் தொடுக்க வேண்டும்.... அல்லது குறைந்தபட்சம் அமைதிப் படையை யாவது உடனே அனுப்பி அமெரிக்காவுக்குப் பாடம் புகட்ட வேண்டும்.... அமெரிக்காவில் உள்ள தேச பக்த இந்தியர்கள் அனைவரையும் உடனே தாய்நாட்டுக்கு திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்....

*- பாமரன்*

## திரும்பவும் பிரசுரியுங்கள்

கடந்த இதழின் பிரதிகள் களவாடப்பட்டதாக இணையதளங்களில் வந்த செய்திகள் படித்தேன். இவ்வாறான ஈனச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கண்டிக்கிறேன். அதே சமயம் 'மலிவு விலையில் தொலைபேசி அட்டையும் இனப்படுகொலை அரசுடனான தொடர்புகளும்' கட்டுரையை திரும்பவும் ஒரு முறை பிரசுரித்தால் என்ன?

*- மல்லிகா இரவீந்திரன்*

## மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சருக்கு மட்டுமா?

சிறிலங்காப் பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்று மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சருக்கும் முன்னால் போராட்டம் நடாத்துகிற அக்ட் நவ் போன்ற அமைப்புகள். சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதியுதவி செய்யும் லைக்கா மொபைலை ஏன் புறக்கணிக்கிறதில்லை?

*- அரசபாலன்*

## ஊருக்கு அழைத்துச் செல்லும் பாவை.ஜெயபாலன்

***ஒரு பேப்பர்*** ஐத் தேடிப் பிடித்து பல ஆண்டுகளாக நான் வாசித்து வருகின்றேன். எனக்கு விருப்பமான பகுதிகள் தகவல் களஞ்சியம், வாழ்ந்தறியும் பாடங்கள், ஊரின் வாசம் என்பன. ஊரின் வாசத்தில் பாவை. ஜெயபாலன் எழுதும் விடயங்கள் எனக்கு ஊருக்கே எம்மை அழைத்துச் செல்வது போல இருக்கின்றது. வானொலி, தொலைக்காட்சி, விழாக்கள், பேச்சு, கவிதை என்று பலவற்றிலும் பார்க்கும் அவரை நல்ல கட்டுரையாளனாகப் பார்க்கின்றேன். பாராட்டுக்கள். இவர்களின் எழுத்துக்கள் ***ஒரு பேப்பர்*** ல் கூடுதலாக இடம்பெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*- சிவதுர்க்கை சிவசுப்ரமணியம், ஈஸ்ட்கம்*

## ஆற்றையப்பா தீபம்?

தீபம் தொலைக்காட்சியை நோர்வே மக்களவைவாங்கியிருப்பதாக முந்திக் கதை அடிபட்டது. ஒரு தமிழ்த் தேசிய அமைப்பிடம் இருப்பது நல்லது என்று சந்தோசப்பட்டோம். ஆனால் அதிலை வாற நிகழ்ச்சியளுக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் உள்ள தொடர்பு, அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள தொடர்பு போலை கிடக்குது. சரி கொமர்சியலாக இருந்து தொலைக்கட்டும் என்று பார்த்தால், அதை இப்ப கேப்பியின்ரை ஆட்கள் நடாத்திறதாக கதை அடிபடுகுது. 'கண்ணீர் வெள்ளம்' டாக்குத்தரும் பங்குதாரராகச் சேர்ந்திருக்கிறாராம். அனஸ் அண்ணை இருந்தாலும் மொள்ள மாறிகளுக்கு வெளிப்படையாகவே மேடை போட்டுக் கொடுப்பார். இது உள்ளாலை எல்லோ எல்லாம் நடக்குது.

*- இணுவை இரங்கன்*

## இவர்களா எங்களுக்கு உதவப்போகிறார்கள்?

இறுதிக் கட்ட யுத்தம் வரை ஆயுதங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி தமிழர்களைக் கொன்றொழிக்கத் துணை நின்ற நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்று. அது தவிர தற்போதும் கூட போர்க் குற்றங்களைப் பற்றிப் பேசினாலும், அரசியல் தீர்வு தொடர்பில் மறந்தும் கூட மூச்சு விடாத பிரித்தானியாவின் பிரதமர் தமிழர்களுக்குத் தனிநாட்டைப் பெற்றுத் தந்து விடுவார் போன்றும், மகிந்த குழுமத்தைத் தூக்குக் கயிற்றில் போட்டு விடுவார் போன்றும் ஒரு தோற்றப் பட்டைக் காட்டிவிடுவதில் தமிழர்கள் சிலர் முண்டியடித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

*- சண் தவராசா*

## @ ஊழியம்

சுஜித்ஜீ நடித்து இயக்கியிருக்கும் 'அட்டூளியம்' குறும்படம் கிறிஸ்தவ உபதேசியார்களின் பொருள் மோகத்தையும், ஏமாற்று வேலைகளையும் வெளிப்படுத்துகிறது. இது 'ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி மகளே' என்ற உபதேசியாரை நினைவு படுத்துகிறது. இதுபோல் கோல்மால் காட்டும் சாமிமார், சாத்திரிமார், ஐயர்மார் பற்றியும் ஒரு படத்தை அவர் தயாரிக்க வேண்டும்.

*- ஆழகானந்தன்*

*கருத்துக்களுக்கு* : **Tel : 020 7043 4314**

# ஆசிரியர்களை மந்தைகள் என குற்றம் சொல்வது சரியா ?

கடந்த நொவெம்பர் 16ம் திகதி சனிக்கிழமை கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலையில் கலைவிழா நடைபெற்றது. அவ்விழாவிற்கு சட்டத்தரணி திரு. சிறீகந்தராசா பிரதம விருந்தினராகவும் தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையின் பிரித்தானிய பொறுப்பாளர் திரு. இராஜ்குமார் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் பாடசாலை நிர்வாகத்தினர் அழைத்திருந்தனர். விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. பிரதம விருந்தினரை பேச அழைத்தனர். அவர் பேசும் போது, நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றியோ பாடசாலை பற்றியோ எதுவும் சொல்லாமல், கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டவர் சார்ந்திருந்த தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையைப் பற்றி தவறாகப் பேசினார். தான் எங்கு வந்திருக்கிறேன்? எதற்காக வந்திருக்கிறேன்? என்பதை மறந்து தனது சொந்த விருப்பு வெறுப்புகளை வெளியிடுவதற்கான மேடையாக அதைப் பயன் படுத்திக் கொண்டார்.

இன்னொரு தமிழ் அமைப்பைப் பற்றி குற்றம் சொல்வதற்கு தகுதியான ஒரு தமிழ் அறிஞரோ தமிழ் ஆசிரியரோ இல்லை. கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டவர் சார்ந்திருக்கும் தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவை பாட நூல்களை எவரும் தன்னிச்சையாக எழுதவில்லை. அவை பல நாடுகளிலுள்ள தமிழ் அறிஞர்கள் கூடி ஆராய்ந்து அவர்களின் ஆலோசனைப்படியே எழுதப் பட்டன. காலத்துக்குக் காலம் பலரது ஆலோசனைப்படி மாற்றங்களும் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றையெல்லாம் அறியாமல் அல்லது அரைகுறையாகத் தெரிந்து கொண்டு அந்தப் பாடநூலைப் பற்றி குறை கூறுவதற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட திரு. சிறிகந்தராசாவிற்கு என்ன தகுதி இருக்கிறது? தமிழ் தெரிந்த எல்லாரும் விமர்சிக்கலாமா? சரி, நாம் சனநாயக நாட்டில் வாழ்கிறோம் விமர்சிப்பதற்கு உரிமை உண்டு என்று கொண்டாலும் அதற்கு இடமும் தகுதியும் பொருத்தமானதாக அமைய வேண்டாமா?

இலண்டனில் வாழும் தமிழ்ப் பெற்றோர் பல்வேறு இடர்களுக்கு இடையில், தங்கள் பிள்ளைகள் முழுமையாக தமிழ் படிக்காவிட்டாலும் முடிந்தளவுக்காவது படிக்கட்டும் என்று தமிழ்ப் பள்ளிகளுக்குத் தமிழ் படிப்பதற்காக அனுப்புகிறார்கள். ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கனடா போன்ற நாடுகளிலும் லண்டனிலும் இப்பாடநூல் கற்பிக்கப்படுகிறது. லண்டனில் மட்டும் எண்பதுக்கும் அதிகமான பாடசாலைகளில் கற்பிக்கப்படும் குறிப்பட்ட அமைப்பினருடைய பாடத்திட்டத்தைப் பற்றி குறை கூறுவது மட்டுமன்றி, அதை கற்பிக்கும் ஆசிரியர்களை மந்தைகள் என குற்றம் சொல்வது சரியா? அது மட்டுமல்ல. இது தமிழ் படிக்கும் மாணவர்களையும் பெற்றோரையும் குழப்பும் செயல் அல்லவா?

இவர்களைப் போன்றோரை எண்ணும் போது 'வைக்கோற் பட்டறை நாய்' என்ற பழமொழி தான் ஞாபகத்துக்கு வருகிறது. தாமும் செய்யாமல் மற்றவர்களையும் செய்ய விடாமல், மற்றவர்கள் செய்வதை குறை கூறுவதை விடுத்து இவரைப் போல, தாம் தான் தமிழ் அதிகம் தெரிந்தவர்கள் என்று கூறுபவர்கள் பல தசாப்தங்களாக இங்கு வாழ்கின்றனர்.

குறை கூறுவதற்கென்று இவர்களை தெரிவு செய்தவர்கள் யார்? வியாபாரத்துக்காக புத்தகம் எழுதும் இவரைப்போன்றோர் தமது லாபத்துக்காக அடுத்தவர்களை குறை கூறுவதை தமது பொழுது போக்காகக் கொண்டிருக்கிறார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. எதையும் சரியாக தெரிந்து கொள்ளாமல் அரை குறையாகத் தெரிந்து கொண்டு பேசுவதை இனியாவது இவர் கைவிட வேண்டும். நான் சொல்வது தான் சரி என்று சொல்வதற்கு இவர் தன்னை தானே தமிழின் தலைவர் என்று தீர்மானித்துக் கொண்டாரோ?

இவரைப் பற்றி பேசுவதை நிறுத்தி விட்டு குறிப்பிட்ட அந்த விழாவில் என்ன நடந்தது என்பதை கூறினால் யார் படித்தவர் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். திரு. சிறிகந்தராசாவைத் தொடர்ந்து பேசிய கௌரவ விருந்தினர் திரு. இராஜ்குமார் முதலில் பேசியவர் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களுக்கான பதில் அவரிடம் இருந்திருந்தும் 'காய்க்கிற மரத்துக்குத் தான் கல் எறி விழும்' என்பதை அறிந்ததால் அவர் தான் எதற்காக வந்திருக்கிறார் என்பதை மறக்காமல் உரையாற்றினார். அவரது பெருந்தன்மைக்கு இதைவிட சிறந்த எடுத்துக் காட்டு வேறேதும் உண்டா? ஒரு பெற்றோராக நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இனியாவது தமிழ்ப் பாடசாலைகள் இந்த மெத்தப் படித்த சட்டவாளர் என்று சொல்லிக் கொள்ளும் திரு. சிறிகந்தராசா போன்றோரை தங்கள் விழாக்களுக்கு அழைத்து உங்கள் முகங்களில் கரியைப் பூசிக்கொள்ளாதீர்கள் என்பதே ஆகும்.

***- சண்முகலிங்கம், கிங்ஸ்ரன்***

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400
➡ Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
➡ IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test



New rules applicable from October 28th
OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, DECEMBER 20, 2013, ISSUE 208

## மக்களின் பங்களிப்பில்லாத அரசியலமைப்புகள்

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இமானுவல் அடிகளார் அண்மையில் தமிழ்த் தொலைக்காட்சிக்கு ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், தமது அமைப்பின் செயற்பாடுகளுக்கான நிதித் தேவைக்கு தாம் Berghof Foundation போன்ற வெளி அமைப்புகளிலும், நண்பர்களிலும் தங்கியிருப்பதாகவும், பொதுமக்கள் தமக்கு நிதியுதவி வழங்க முன்வருவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். முன்னர் போராட்டத்திற்கென மக்கள் வழங்கிய நிதியினை சிலர் கையகப்படுத்தியுள்ளதால், பொது விடயங்களுக்கு நிதி சேர்ப்பவர்கள் விடயத்தில் மக்கள் அவநம்பிக்கை கொண்டிருப்பதே இந்நிலைக்கான காரணம் என்ற விளக்கத்தையும் அவர் அந்நேர்காணலில் கொடுத்திருக்கிறார்.

அடிகளாரைப் போன்று வேறும் சில தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இத்தகைய கருத்துகளைத் தெரிவித்து வருகிறார்கள். மேலோட்டமாகப் பார்க்கையில், இவர்களது கருத்துகள் சரியானதாகத் தோன்றலாம். மக்கள் பொது விடயங்களுக்கு நிதி வழங்கத் தயங்குவதற்கு இவர்கள் குறிப்பிடும் விடயமும் ஒரு முதன்மையான காரணி உள்ளது என்பதனையும் மறுப்பதற்கில்லை. இருப்பினும், அவசியமானது எனத் தமக்குத் தென்படும் பொதுச் செயற்பாடுகளுக்கு மக்கள் தொடர்ந்து பங்களித்து வருவதனை அவதானிக்க முடிகிறது. ஆகவே, இவ்வமைமப் புகள் தாம் பிரதிநிதித்துப்படுத்துவதாகக் கூறிவரும் மக்கள் தொகையினரில் ஒரு சிறு பங்கினராவது மாதாந்தம் ஒரு ஈரோ/டொலர்/பவுண்ஸ் வழங்குவார்களேயானால் இவ்வமைப்புகள் இயங்குவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதில் சிரமமிருக்க முடியாது. ஆனால் தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் மக்களுடன் இவ் வமைப்புகள் எத்தகைய தொடர்பாடல்களைப் பேணிவருகின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உதாரணத்திற்கு தமிழ் அலைந்துழல்வுச் சமூகத்தில் அடிமட்ட மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் கூட்டமைப்பு எனப்படும் உலகத் தமிழர் பேரவையை எடுத்துக் கொண்டால், இவ்வமைப்பு தனது அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும்போது தாம் பிரதிநிதிப்படுத்துவதாகக் குறிப்பிடும் மக்களின் கருத்தறிய எதுவித முயற்சிகளையும் எடுப்பதில்லை. பெருமளவில் தமிழர்கள் வாழும் ஐரோப்பாவில் இயங்கும் எந்தவொரு தமிழரமைப்புடனும் அது இணைந்து பணியாற்றுவதில்லை. இந்நிலையில் கேள்விகள் எதுவுமின்றி மக்கள் பணத்தை வழங்க வேண்டும் என இவ்வமைப்புகள் எதிர்பார்க்க முடியாது. மறுபுறத்தில் மக்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியாத அல்லது விரும்பாத இவ்வமைப்புகளின் இருப்பு மக்களுக்கு அவசியமற்றதாகத் தோன்று கிறது என்பதனை கவனத்தில் கொள்வார்களா?

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*2013 ம் ஆண்டின் கடைசியிலை நிண்டு கொண்டு, இந்த வருசத்தை திரும்பிப்பார்க்கிறம். ஒரு சவால் நிறைந்த வருசமாகத்தான் இது இருந்தது. வருசத்தின் ஆரம்பத்திலை, பெப்பிரவரி மாசம் நடந்த கூட்டம் ஒன்றில் எங்கட பொறுப்பாசிரியர், செந்தில்நாதன் கந்தையா எண்ட நபரால் மிரட்டப்பட்டார். போன கிழமை லண்டனில் சில கடையளிலை* ***ஒரு பேப்பர்*** *ன் 207வது இதழின் பிரதிகள் களவாடப்பட்டன. இப்பிடியான சம்பவங்கள் முந்தி நடைபெறவில்லை இப்பத்தான் இவை நடைபெறத் தொடங்கியிருக்கு. அப்பிடியெண்டால் ஊர் இப்ப கெட்டுப் போயிடுச்சுதோ?*

*அப்பிடியொண்டும் இல்லை. சில வியாபாரியளைப் பற்றின செய்தியளை நாங்கள் போடுகிறபோது அதை அவர்களால் பொறுக்க ஏலாமல் இருக்குது. நாங்கள் போடுற விசயம் ஏற்கனவே ஆங்கில ஊடகங்களில் வந்த சங்கதியள்தான். எண்டாலும், தங்கடை பொட்டுக்கேடுகள் எங்கடை மக்களுக்கு தெரிய வராமல் இவை மறைக்க விரும்பியினம்.*

*போன கிழமை நடந்த விசயம் இதுதான் தமிழரல்லாத சிலர் லூசியம், ஈஸ்ட்ஹாம், நியுமோல்டன் பகுதியளிலை இருக்கிற தமிழ்க் கடையளுக்கு போய், கோயிலுக்கு எடுக்கிறம் எண்டு சொல்லி பேப்பரை அள்ளிக் கொண்டு போயிருக்கினம். விசயம் தெரிந்த சில கடைக்காரர் பேப்பரைக் குடுக்கேல்லை. எங்களுக்கு விசயத்தைச் சொன்னார்கள். விசயமறிந்த எங்கடை வாசகர்களும், அபிமானிகளும் எங்களுக்கு உடனடியாக எங்களுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார்கள். எங்களுக்கு கிடைச்ச தகவல்களின்படி இவையள் 'சீப்பாக மட்டை' விக்கிற ஆட்கள் எனத் தெரியவருகிறது. இருந்தாலும் அதற்குரிய ஆதாரங்கள் இன்னமும் உறுதிப்படுத்தவில்லை எண்டதாலை இந்த 'சீப் பேர்வழிகள்' ஆர் எண்டதை உங்களுக்கு அறிவிக்கேலாமல் இருக்குது.*

*மக்களுக்கு செய்தி தெரிய வராமல் தடுக்கிற இவையளின் அத்துமீறிய செயலை சக ஊடகங்களும் மக்களும் கண்டித்திருக்கிறார்கள் எண்டதிலை நாங்கள் திருப்தி அடைகிறோம். இந்த சலசலப்புகளுக்கு அச்சப்பட்டு '**ஒரு பேப்பர்**' தனது பாதையை மாற்றிக்கொள்ளாது எண்டதை எல்லாருக்கும் அறியத்தருகிறோம்.*

***ஒரு பேப்பர்*** *ன் பிரதிகள் அபகரிக்கப்பட்ட செய்தியை உடனடியாகவே வெளியிட்டு தமது ஆதரவினை வெளிப்படுத்தியமைக்காக, 'இனியொரு', 'சங்கதி'. 'பதிவு', 'பொங்கு தமிழ்' ஆகிய இணைய தளங்களுக்கும், பிரான்ஸ் ஊடக இல்லம், Corporate Watch போன்ற அமைப்புகளுக்கும் எங்கடை நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*புது வருசத்திலை இன்னும் சிறப்பாக* ***ஒரு பேப்பர்*** *ஐ கொண்டு வருவதற்கு திட்டமிட்டுள்ளோம் அதற்கு உங்கடை ஆதரவு தொடரந்து கிடைக்கும் என நம்பிறம்.*

*பண்டிகை கால விடுமுறைகளை மகிழ்ச்சியுடன் கழியுங்கள் என உங்களை வாழ்த்தி நிற்கிறோம்.*

*சந்திப்பம்!*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Sri Lanka guilty of genocide



The Peoples' Tribunal on Sri Lanka

*Following is the full statement issued by General Secretary of the PPT Gianni Tognoni:*

Panel of Judges presents verdict finding Sri Lanka guilty of the crime of genocide against the Eelam Tamil people; the UK and USA were found to be guilty of complicity, while the Judges withheld their decision on India's complicity pending examination of further evidence.

The Second Session of the Peoples' Tribunal on Sri Lanka concluded today in Bremen, Germany, with the presentation of its verdict. The panel of eleven judges unanimously found Sri Lanka guilty of the crime of genocide against the Eelam Tamil people, and that this crime continues today.

The Tribunal found that genocide against the Eelam Tamil group has not yet achieved the total destruction of their identity. The genocidal coordinated plan of actions reached its climax on May 2009, but it is clear that the Sri Lanka Government project to erase the Eelam Tamil identity, corroborated by the above mentioned conduct, shows that genocide is a process and that process is ongoing. The genocidal strategy changed once the perpetrators gained control of the territory. The killings are being transformed into other forms of conduct, but the intention to destroy the group and its identity remains and continues, through causing serious bodily or mental harm to members of the Eelam Tamil group.

The Tribunal considers that the proofs established, beyond any reasonable doubt that the following acts were committed by the Government of Sri Lanka

(a) Killing members of the group, which includes massacres, indiscriminate shelling, the strategy of herding civilians into so-called "No Fire Zones" for the purpose of massive killings, targeted assassinations of outspoken Eelam Tamil civil leaders who were capable of articulating the Sri Lankan genocide project to the outside world.

(b) Causing serious bodily or mental harm to members of the group, including acts of torture, inhumane or degrading treatment, sexual violence including rape, interrogations combined with beatings, threats of death, and harm that damages health or causes disfigurement or injury.

(c) Deliberately inflicting on the group conditions of life calculated to bring about its physical destruction in whole or in part, including expulsions of the victims from their homes, * seizures of private lands, * declaring vast areas as military High Security Zone (HSZ) to facilitate the military acquisition of Tamil land.

Further, the Tribunal considered evidence related to

(d) Imposing measures intended to prevent births within the group including forced sterilization and coerced contraception of Eelam Tamil women. Further investigation is required on the extent of this practice in other regions before a determination is made on whether these could be considered genocidal acts.

The UK and USA were found to be guilty of complicity in the crime of genocide, including

- complicity by procuring means, such as weapons, instruments or any other means, used to commit genocide, with the accomplice knowing that such means would be used for such a purpose;

- complicity by knowingly aiding or abetting a perpetrator of a genocide in the planning or enabling acts thereof;

Recognizing that the Sri Lankan state alone did not have the capacity to achieve their genocidal ambitions, and given the evidence presented, the Tribunal believes that the UK, the USA and India are guilty of complicity in genocide. However, given time constraints the Tribunal decided to withhold its decision pending the consideration of additional evidence as to the possibility that India, as well as other States, are indeed guilty of complicity in the crime of genocide against the Eelam Tamils.

More than 30 direct eye-witnesses and experts testified in support of the Prosecution's case, providing evidence on various alleged crimes that could be determined to constitute the crime of genocide, as well as on the legal and historical background and the charges of complicity.

This Second Session in Bremen was convened in response to the determination by the First Session, held in January 2010 in Dublin, Ireland, that War Crimes and Crimes against Humanity had taken place on the Tamil population during the final months of the war in Sri Lanka in early 2009, and that further investigation be undertaken regarding the question of genocide.

> UK and USA were found to be guilty of complicity, while the Judges withheld their decision on India's complicity pending examination of further evidence.

These two sessions of the Permanent Peoples' Tribunal on Sri Lanka have been established in response to a submission made by the International Human Rights Association Bremen (IMRV) and the Irish Forum for Peace in Sri Lanka (IFPSL). As in the First Session, here in Bremen a panel of judges consisting of experts in genocide studies, former UN officials, experts in international law and renowned peace and human rights activists.

# Mullivahikaal has Brought a Historic Task on to World Tamils



*- Pulithevan and his team in Johannesburg, South Africa (2003)*

**By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)**

"Sometimes it falls upon a generation to be great. You can be that great generation. Let your greatness blossom"

This is what the great Nelson Mandela and the ANC told the Eelam Tamils in general and the LTTE in particular. Mandela has been a symbol of the liberation struggle and its sentiments. He stands as testimony to the triumph of peoples' struggles.

When Nelson became president in 1994 he stopped the export of arms to Sri Lanka to be used against Tamil freedom fighters in their homeland. The famous South African Buffalo land-mine resistant armoured vehicle with the "V" shaped mono-hull chaise were a terror to the common people of Eelam and a challenge to the LTTE guerrilla fighters who used mines to their advantage during that period.

Mandela criticized the "War on Terror" and the labelling of individuals as terrorists, even Osama Bin Laden, without due process. On the U.S. terrorist watch list until 2008 himself, Mandela was an outspoken critic of President George W. Bush's war on terror. The US included Mandela and his political party, ANC as a terrorist organization in 1988 and removed the status only in 2008

Guerrilla wars are primarily fought on the field of morale and defaming a guerrilla movement as "terrorists" is a useful way of discrediting them After the 9/11 twin tower attack, US declared the 'War on Terror' against Al-Qaeda.

Western powers were alarmed by the innovative methods, used by the Tigers. One of them was the use of suicide bombers. They did not want the LTTE technology to be transferred to the terrorist. That was why they banned the LTTE to cut off their source of finance

Nelson Mandela and the ANC appreciated and gave moral support to our freedom struggle. No worthy human being would tolerate the suffering and pain of others, wherever they are, worst still, those of us who have fought heroic struggles against apartheid, colonialism, oppression and occupation immediately feel it however far they are.

## Distant dawn!

On 17th October 2003 as I landed at Johannesburg airport, I was met by Mr. Reddy who drove me all the way to Durban only because he wanted to be in time, for me to address a gathering of more than thousand enthusiasts. After a beautiful Tamil cultural dancing program I was guided to the stage and introduced as one from Tamil Eelam, senior activist and an amateur journalist.

I began my speech saying, "Whenever we are in the dark, stunned and not knowing what to do we see quite often, a distant dawn That is you, the great Tamil people of the Republic of South Africa" There was full standing ovation.

"I have come here with a message of 'Gratitude and Love' from our Leader Prabhakaran" Again there was standing ovation, loud applause with cheering and whistling. After my unexpected, unprepared and very well received speech there was a rush of participants to personally meet me. I consider that as one of my great moments of my life.

. There is no doubt that we always have the sympathy, understanding and support of the South African Tamils. Mahveerar Nahal or Heroes' Day is remembered by the Tamils of South Africans as a day of commemoration every year. I happened to be the key note speaker on the 27th November 2003 Mahveerar remembrance.

I had to follow the two very young ladies who sang beautifully the popular song, "Mahveerar Yahroo….". I paid my tribute to them for their brilliant singing and asked, "Who these Mahveerars are?" I followed in Tamil, "Vilunthavan nahan entralum, vahladdum em Thamil Ennam, entru tham ooierai eentha peru makkhal than entha Mahveerar."

They gave their life voluntarily, with the conviction and faith that, "Let me be the fallen one, but let our Tamil people live." All got up, stood in silence for about three minutes as a mark of respect.

There were more speeches and TRO flyers were distributed. The message was, "TRO South Africa is joining hands with the international sister organizations to raise funds for urgently needed rehabilitation projects. We humbly appeal for your general support. TRO South Africa Branch –Reg. No: IT 1687-98"

On the same day our Pulithevan with two senior women cadres and four men cadres happened to be in South Africa and joined the Mahveerer Nahal remembrance in Cape Town

It is also noteworthy to mention that Pulithaven and two others as representative of the de-facto state of Eelam, joined three other governments to form the South African General Election monitoring team.

Mr. Reddy who drove me to Durban was one of the team of seven South Africans, including a great couple, who came as tourist visitors to Vanni. They were there for about 10 days and I had the privilege of keeping company with them. We spent a day in Jaffna and visited the Navali St.Peters church which was bombed by the Sri Lankan air-force on 9th of July 1995. The other places we visited included our Leader Prabhakaran's home at Valvettithurai, Jaffna Mahveerars Thuvil Illum, Captain Miller's Statue at Nelliady and other important places they wanted to see and make photographs and notes.

The most memorable event was the two hour discussion followed by a grand dinner with our Leader Prabhakaran and the other senior leaders, including Thamil Selvan and Castro. The visitors were extremely happy and very enthusiastic and took photographs and notes.

As soon as all took their seats after the customary greetings, our Leader Prabhakaran thanked them for their kind visit and the support the people of South Africa and ANC gave for our struggle for freedom. He continued, " I have been following your struggle carefully and in my opinion the so called freedom of Black South Africans is an understanding and an acceptance of both Blacks and Whites, apparently Blacks because of their right and majority are in power and the Whites are invisibly have full control of everything."

Suddenly all got up and in one voice said, "Sir, You are absolutely right." The discussion continued with mutual understanding of views and facts, in a very fruitful manner.

The fall of the Soviet Union and the Eastern bloc who were ANC's major backers, is an important contributory factor. This reality served the white minority rulers to quickly galvanize a means to continue its hold of South Africa through a different strategy and thus handing over power to Mandela and the ANC in exchange for its continuance became the winning recipe. The discussion naturally went to the assassination of Chris Hani in April 1993 for in getting rid of him, the threat to Blacks developing a real hero was nullified.

Chris Hani, (28 June 1942 – 10 April 1993) was the leader of the South African Communist Party and chief of staff of Umkhonto we Sizwe, the armed wing of the African National Congress (ANC).

At age 15 Hani joined the ANC Youth League. He received military training in the Soviet Union and served in campaigns in the Rhodesian Bush War in what is now Zimbabwe. They were joint operations between Umkhonto we Sizwe (MK) and the Zimbabwe People's Revolutionary Army in the late 1960s.The Luthuli Detachment operation consolidated Hani's reputation as a brave soldier of the first black army to take the field against apartheid. His role as a fighter from the earliest days of MK's exile (following the arrest of Nelson Mandela and the other internal MK leaders at Rivonia) was an important part in the fierce loyalty

Chris Hani was assassinated on 10 April 1993 outside his home in Dawn Park, a racially mixed suburb of Boksburg. A Polish far-right immigrant named Janusz Waluś, shot him in the head and at the back as he stepped out of his car. Waluś fled the scene, but was arrested soon afterwards after Hani's neighbour, a white Afrikaner woman, called the police.

## Nelson Mandela and the ANC appreciated and gave moral support to our freedom struggle.

Serious tensions followed the assassination, with fears that the country would erupt in violence. Nelson Mandela addressed the nation appealing for calm.

"Tonight I am reaching out to every single South African, black and white, from the very depths of my being. A white man, full of prejudice and hate, came to our country and committed a deed so foul that our whole nation now teeters on the brink of disaster. A white woman, of Afrikaner origin, risked her life so that we may know, and bring to justice, this assassin. The cold-blooded murder of Chris Hani has sent shock waves throughout the country and the world. ... Now is the time for all South Africans to stand together against those who, from any quarter, wish to destroy what Chris Hani gave his life for – the freedom of all of us."

## Durban unique in South Africa

The Indian and colonial influences in this South African coastal city make Durban simply great, and the blend of cultures and architecture makes Durban unique in South Africa. Durban is in the province of KwaZulu-Natal. There are about one million Tamils of Indian origin in Durban alone.

Those great Tamils were very keen to host me for at least one or two days. To make them happy I spent nights with different families and thoroughly enjoyed their splendid hospitality care and company. In every house I spent a day or two during my three months stay in Durban, I saw a picture of our Leader of Prabhakaran on the wall and a miniature Eelam national flag on the central table in their sitting room.

South African Tamils are one of us!


ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**



*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*மக்கள் தொடர்பு*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*விளம்பரம்*
**சோபனா - அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூ - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**சோபனா அருந்தவச்செல்வம்**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**



**உங்கள் தொடர்புகட்கு:**

*தொலைபேசி* (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

*தொலைநகல்* **(Fax)**
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**
*இணையம்:*
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# தீர்ப்பு
# வழிமுறைத் தெளிவுகளை அளித்திருக்கிறது

**ஜெர்மனியில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயம் பற்றி திருமுருகன் காந்தி**

ஒரு இனப்படுகொலையை மறைத்து அதை போர்க்குற்றம் என்று மட்டும் சுருக்கிப் பேசி வரும் சர்வதேசம், அறிவுசீவி வர்க்கத்தினை புறந்தள்ளி இருக்கிறது. இது 2009க்கு பின்பு நமக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றி.

போர்க்குற்றம் என்பதாக மட்டுமே சுருக்கினால் நமது விடுதலை என்பது எட்டாக்கனியாக மாறும் என்பதை 2011இல் ஐ.நா அறிக்கை வெளியான உடனேயே முன்வைத்தோம். போர்க்குற்றம் என்கிற பதத்தினை ஏற்க முடியாது என்று பேசிய பொழுது மே17 இயக்கத்தினை தனிமைப்படுத்தும் செயல் வெகுவேகமாகவே நடந்தது. ஆனால் இரண்டு வருடங்களுக்கு பின்னர் உலகின் மிக முக்கிய மனித உரிமையாளார்கள், சிந்தனையாளார்கள், செயல்பாட்டாளர்கள் என பல்வேறு நாடுகளில் இருந்து நீதிபதிகளாக வந்தவர்கள் ஆழமாக ஆராய்ந்த பின்னர் இதை 'இனப்படுகொலை' என அறிவித்திருக்கிறார்கள். இது முக்கியமானது. வரலாற்று சிறப்பு மிக்கது. அரசாங்கத்திடம் இருந்து உரிமைகளை மக்களிடத்தில் சேர்க்கவேண்டும் என்று இந்த வாதங்களை வைத்து அவர்கள் பேசியது மறக்க இயலாதது.

இத்தாலி, ஜெர்மனி, ஆர்ஜண்டீனா, துருக்கி, ஆர்மீனியா, பர்மா எனப் பல்வேறு நாடுகளில் இருந்து வந்தவர்களும், சிங்கள தோழர்களும், இங்கிலாந்தில் இருந்து வந்த பேராசிரியர்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், தமிழீழ அறிஞர்களும், தனிப்பட்ட செயல்பாட்டாளர்களும், தமிழீழத்தில் இருந்து வந்திருந்த களமுனையில் செயல்பட்டவர்களுமாக ஆதாரங்களையும், வாதங்களையும் அடுக்கினார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியாவின் மீதான குற்றச்சாட்டுகளும், வரலாற்று-பொருளாதார-அரசியல் ரீதியான பின்னனிகளும் விரிவாக அலசப்பட்டன.

இனப்படுகொலைக்கான சட்டங்கள், அளவுகோள்கள் என அனைத்து தரப்பிலும் விசாரணை சென்றது. ஆதாரங்கள்-சாட்சியங்கள் என பல்வேறு தகவல்களை மூன்று நாட்களும் இரவு பகல் என ஆராய்ந்தார்கள். தீர்ப்பு வழங்கப்படுவதற்கான முன் தினம் ஆரம்பித்த விவாதம் அதிகாலை 5 மணிவரை நீடித்தது. பின்னர் ஏகமனதாக இனப்படுகொலை என்கிற முடிவிற்கு சந்தேகத்திற்கு இடமில்லாமல் வந்து சேர்ந்தார்கள்.. அமெரிக்க -இங்கிலாந்தின் பங்களிப்பினை எளிதாக புரிந்து கொள்ள முடிந்தவர்கள், இந்தியாவின் பங்களிப்பு பற்றி சற்று வியப்பாகவும், அதிர்ச்சியாகவும் கவனித்தார்கள்.

நேரடி சாட்சியங்கள், மற்றும் ஆதாரங்களை இனப்படுகொலைக்காகவும், இங்கிலாந்து, அமெரிக்காவிற்காகவும் ஆய்வினை செய்த கால அளவு இந்தியாவினைப் பற்றிய விவாதத்திற்கு முழுமையாக நீதிபதிகளுக்கு கிடைக்காமல் போயிற்று. ஆதாரங்களை வரலாற்று ரீதியான பின்னனியில் இருந்து சமீப கால நிகழ்வு வரையில் ஆவணமாக அளித்திருந்தோம்,. இந்திய அரசின் தமிழின எதிர்ப்பு என்பதும், இனப்படுகொலைக்கான ஆதரவு என்பதுவும், அதன் இன ரீதியான பின்னனியில் இருந்து, சாதிய ரீதியான அர்த்தங்களையும், தனது பிராந்திய நலனுக்கு ஆதரவானதாகவும், தமிழீழ அரசு 2002இல் இருந்து கட்டி எழுப்பிய அரசு வழிமுறை தமக்கு பெரிதும் ஆபத்தானது என்றும் பல்வேறு வாதங்களின் அடிப்படையில் இந்தியாவின் பங்களிப்பு ஆவணங்கள் முன்வைத்தோம்.

இந்த அடிப்படையும் பங்கேற்பிற்கான ஆதாரங்களையும் பல்வேறு ஆவணங்கள் அடிப்படையில் முன்வைத்திருந்தோம். இதனை முழுமையாக ஆராய்வதற்கும், அறிவதற்கும், விவாதிக்கவும் நேரம் போதாமையாக இருந்ததால் உடனடியாக முடிவிற்கு வர இயலாமல் போனது. ஆனால் இந்தியா இனப்படுகொலையில் துணை செய்ததற்கான குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை பதிவு செய்தார்கள்.

இந்தியாவின் பங்களிப்பு என்பது ஒரு அதிர்ச்சியாகவே சர்வதேச அறிஞர்களுக்கு இருந்தது என்பது எங்களுக்கும் ஒரு அதிர்ச்சியே. இந்தியா தனது கோர முகத்தினை மறைத்து செய்து வரும் பிரச்சாரம் உடைபடும் இடமாக தேசிய இனசிக்கலே இருக்கிறது. நீதிபதிகளில் ஒரு சிலரால் இந்தியாவின் சாதிய பிரச்சனையின் பின்புலத்தினை எளிதாக புரிந்து கொள்ள முடிந்தது. இந்திய ஆளும் வர்க்கத்தின் சாதிய பின்புலம், ஊடகம்-அதிகாரவர்க்கம்-நீதித்துறையின் சாதிய பின்புலம் இந்தியாவின் கொள்கை முடிவுகளில் தாக்கம் செலுத்துகிறது என்பதை ஏற்றுக்கொள்ளவே செய்தார்கள். ஆனால் பிறருக்கு இது சென்று சேராத விடயமாக இருந்தது. நவநீதம் பிள்ளையின் சாதியத்திற்கு எதிரான ஐ.நா செயல்பாட்டு அறிக்கை அதன் முக்கியத்துவத்தினை புரிந்து கொள்ள வைத்தது. சாதிய ரீதியாக தமிழீழப்படுகொலையில் இந்திய ஆளும் வர்க்கத்தின் பங்கினை எடுத்து முன்வைத்திருந்தோம். இதனை இந்தியாவின் ராணுவ உதவிகள், களமுனை உதவிகள், ராஜ தந்திர ரீதியான உதவிகள், செயல்பாடுகள், ஆயுத உதவிகள், சர்வதேச நிருவனங்களை திசை திருப்புதல்கள், நேரடி பங்களிப்புகள் என பல்வேறு ஆதாரங்களை விரிவாக, ஆழமாக பதிவு செய்திருந்தோம்.

## சிங்கள தோழர்களின் ஆழமான அர்பணிப்பும், உழைப்பும் ஆச்சரியப்படவும், வெட்கப்படவும் வைத்தது. அவர்களுடைய இதே உழைப்பினை எங்களால் ஏன் மூன்று ஆண்டுகளாக செய்யமுடியவில்லை என்பதே வெட்கப்பட வைக்கிறது.

விசாரணைக்குழுவின் தலைவர் திரு. டெனிஸ் ஹாலிடே, ஐ.நாவின் துணை பொதுச்செயலாளார் பொறுப்பில் இருந்தவர். ஈராக்கின் மீது பொருளாதாரத் தடை விதித்தபொழுது அதைக் கண்டித்து பதவியை ராஜினாமா செய்தவர். எங்களிடம் இவர் நீண்ட நேரம் இந்தியாவின் பங்களிப்பினைப் பற்றி விரிவாக பேசிக்கொண்டிருந்தார். எளிமையானவராகவும், மனித நேயம் மிக்கவராகவும், மக்கள் உரிமையை புரிந்து கொள்பவராகவும் நல்ல தோழனாக பழகினார். இந்தியா சென்றதற்கு பின்னரான பாதுகாப்பு பற்றி பேசினார். அதை தாம் கவனிக்கவும் செய்வோம் என்றார். விசாரணை நாட்களில் ஆவணத்தினை ஆராய்ந்தும், சரிபார்த்தும், பிற வழிகளில் தகவல்களை சரிபார்த்தும் நிலைப்பாடு எடுக்கும் பொழுது போராடும் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாத முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள் ஆகச்சிறந்த மனித உரிமை செயல்பாட்டாளார்களே.

சிங்கள தோழர்களின் ஆழமான அர்ப்பணிப்பும், உழைப்பும் ஆச்சரியப்படவும், வெட்கப்படவும் வைத்தது. அவர்களுடைய இதே உழைப்பினை எங்களால் ஏன் மூன்று ஆண்டுகளாக செய்யமுடியவில்லை என்பதே வெட்கப்பட வைக்கிறது.

மூன்று வருட உழைப்பு வீண்போகவில்லை என்றாலும் இன்னும் அதிகமாக உழைத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது... இந்த ஆவணப்படுத்தலில் உழைத்த பல்வேறு தோழர்களுக்கு நன்றிகளும், வாழ்த்துக்களும்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## ஒழுக்கம் அவசியமா ?

ஒழுக்கம் என்ற சொல்லே பல இளைஞர்களுக்கு கசப்பான சொல்லாகத் தெரிகிறது. வாழ்க்கையை வாழத் துடிக்கும் வயதில் வாழ்ந்து முடித்த கிழடுகள் தங்களுக்குப் போடும் அனாவசியக் கடிவாளமாக பல இளைஞர்கள் நினைக்கிறார்கள். வாழ்வது ஒரு முறை அதில் அத்தனை அனுபவங்களையும் சகித்து விட வேண்டாமா என்று நினைக்கிறார்கள். உண்மையில் வள்ளுவர் காலத்திலிருந்துஇன்றையகாலம்வரை ஒழுக்கத்திற்கு தேவைக்கும் அதிகமாக முக்கியத்துவம் தந்து விடுகிறோமா?

திருவள்ளுவர் ஒழுக்கத்தின் அவசியத்தை ரத்தினச் சுருக்கமாக பல குறள்களில் கூறியுள்ளார். அவற்றுள் சில -

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்.*

(ஒழுக்கமே எல்லோருக்கும் மேன்மையைத் தருவதால் அந்த ஒழுக்கம் உயிரையும் விடச் சிறந்ததாகப் போற்றப்படும்)

*நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்*
*தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்.*

(நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைத் தரும்)

*பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்*
*தேரினும் அஃதே துணை.*

(ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெரிந்தாலும் உண்மையில் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக நிற்கும்)

இந்தக் குறள்களின் கருத்துகளுக்கு எத்தனையோ உயிருள்ள உதாரணங்களை இன்றும் நம்மால் பார்க்க முடியும். எத்தனையோ அறிவாளிகள், புத்திசாலிகள் கூட ஒழுக்கம் என்ற ஒரு விஷயத்தில் தவறி விட்டு தீய பழக்கங்களுக்கு அடிமையாகி வாழ்க்கையையே கோட்டை விட்டு நிற்பதை நம்மால் காண முடியும். அவர்களை விடக் குறைந்த அறிவிருந்தாலும், குறைந்த கல்வியே பெற்றிருந்தாலும் ஒழுக்கமாக இருப்பவர்கள் எத்தனையோ நிம்மதியாகவும், நிறைவாகவும் வாழ்வதையும் நாம் காணலாம்.

ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இருப்பது ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் முடிவில் அது பெரிய பாதுகாப்பு வளையமாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அதே போல் ஒழுக்கமின்மை ஆரம்பத்தில் கிளர்ச்சிகளைத் தரலாம். கடைசியில் அது எத்தனையோ பிரச்சனைகளுக்கு வேராக நின்று துன்புறுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.

ஒழுக்கமான வாழ்க்கை ஏதோ உப்புசப்பில்லாத வாழ்க்கை என்பது போல் சிலர் உருவகப்படுத்தி விடுகிறார்கள். அதில் சிறிதும் உண்மை இல்லை. ஒழுக்கமான வாழ்க்கையில் உண்மையான ஆனந்தத்திற்குக் குறைவில்லை. நல்ல வழியிலேயே இங்கு ஆனந்தம் ஏராளமாக இருக்கிறது. நல்ல இசையிலும், நல்ல புத்தகத்திலும், நல்ல வாழ்க்கைத் துணையிலும் கிடைக்காத ஆனந்தமா புகையிலும், மதுவிலும், தவறான உடலுறவிலும் கிடைத்து விடப்போகிறது? அழகான இயற்கைக் காட்சிகளிலும், மழலைகளின் பேச்சுகளிலும் கிடைக்காத மகிழ்ச்சியா போதையில் கிடைத்து விடப்போகிறது?

## நம்மையும் உயர்த்தி, நம்மைச் சார்ந்தவர்களையும் நிம்மதியாக இருக்க விடும் ஒழுக்கம் மேன்மையா? இல்லை நம்மை சீரழித்து, நம்மைச் சேர்ந்தவர்களைத் துயரத்தில் ஆழ்த்தும் ஒழுக்கமில்லாத வாழ்க்கை தேவையா?

மேலும் நல்ல வழிகளில் கிடைக்கும் ஆனந்தம் முடிவில் மனிதனை உயர்த்தி விடுகிறது. தீய வழிகளில் கிடைக்கும் கிளர்ச்சிகள் கடைசியில் மனிதனின் தரத்தை தாழ்த்தி விடுகிறது. இன்னொரு உண்மை என்னவென்றால் ஒழுக்கமாக வாழ்பவன் தான் மட்டுமல்லாமல் தன் குடும்பத்தாரையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் கூட நிறைவாக இருக்க விடுகிறான். அதே சமயம் ஒழுக்கமில்லாதவன் தன் குடும்பத்தினருக்கும், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும், தீராத மன உளைச்சலை ஏற்படுத்தி விடுகிறான்.

நம்மையும் உயர்த்தி, நம்மைச் சார்ந்தவர்களையும் நிம்மதியாக இருக்க விடும் ஒழுக்கம் மேன்மையா? இல்லை நம்மை சீரழித்து, நம்மைச் சேர்ந்தவர்களைத் துயரத்தில் ஆழ்த்தும் ஒழுக்கமில்லாத வாழ்க்கை தேவையா?

*- என்.கணேசன்*

# எட்டாக் கனியாகும் அதிகாரப் பகிர்வு..

## சர்வதேசப் பொறிமுறையைக் கேட்கிறார் விக்கினேஸ்வரன்



**கோபி**
*ஒரு பேப்பர்*

கடந்த பத்தாம் திகதி வடமாகாண சபைக்கான கன்னிப் பாதீட்டை (maiden budget) சமர்ப்பித்து வைத்து முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆற்றிய உரை, வடமாகாணசபை எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சனைகளையும், அதிகாரமற்ற முதலமைச்சரின் இயலாமையையும் சர்வதேச சமூகத்திடம் முறையிடுவதாக அமைந்திருந்தது. அனைத்துலக மனிதவுரிமைகள் தினமான டிசம்பர் 10திகதி இவ்வுரை நிகழ்த்தப்பட்டமை ஏதேச்சையானதாக அமைந்திருக்கலாம், ஆனால் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள மனிதவுரிமைச் சபையின் அமர்வுகளில், சிறிலங்கா விவகாரம் பேசப்படும்போது, வடமாகாண சபையையிட்டான அவரது கருத்துகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விக்னேஸ்வரனின் உரையில் வெளிப்பட்டது.

### நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் அதிகாரத்தை மென்மேலும் பலப்படுத்துவதாகவும் விரிவுபடுத்துவதாகவுமே அமைந்துள்ளது

கணவன்-மனைவி உறவு போன்ற தமது உள்நாட்டு விடயங்களில் வெளித்தரப்பினர் தலையிடக்கூடாது எனக் கருத்து வெளியிட்டு வந்த விக்னேஸ்வரன் இப்போது முழுக்க முழுக்க சர்வதேச சமூகத்தை நம்பியிருப்பது (அவர் வேறேதும் கடவுள்களை நம்பியிருக்கிறாரோ தெரியவில்லை), வரவேற்கத்தக்க ஒரு மாற்றம். இத்தனை குறுகிய காலத்தில் அவர் பெற்ற பட்டறிவு அவரை இவ்வாறு பேச வைத்திருக்கிறது. ஆனால் புலம் பெயர் புலி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அவர் பேசத் தலைப்பட்டிருப்பதாக சிங்களத் தேசியவாதிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அனுபவம்மிக்க முன்னாள் அரச அதிகாரியான (நீதிபதி) விக்னேஸ்வரன் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டமையிட்டு மகிழ்வுற்றிருந்த சிங்களத் தேசியவாதிகளும், கொழும்பு மேட்டுக்குடி தாராண்மை வாதிகளும், விக்னேஸ்வரன் தனது உரையில் வெளியிட்ட கருத்துகள், ‘கொசோவோ’ மாதிரியைப் பயன்படுத்தி சர்வதேச தலையீட்டை உருவாக்கும் முயற்சி எனக் கண்டித்திருக்கிறார்கள். அவரது உரையில் ஒரு இடத்தில் `the G word' எனப்படும் இனப்படுகொலை என்ற சொல்லும் பாவிக்கப்பட்டுள்ளமை அவர்களை மேலும் சீற்றப்படுத்தியுள்ளது. பிரதமர் கம்ரனைப் பின்பற்றி இப்போது வெளிநாட்டு இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கு சென்று விக்னேஸ்வனைச் சந்திப்பது, இலங்கைத் தீவில் இன்னொரு அதிகார மையம் இருப்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதாகவும், இது சிறிலங்கா அரசை சமஸ்டியை நோக்கி நகர்த்தும் ஏற்பாடு என அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இருப்பினும், இதனை முன்னாள் இராணுவத் தளபதியான வடமாகாண ஆளுனருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சருக்குமான அதிகார மோதலாகக் காட்டுவதற்கும் அவர்கள் முற்படுகின்றனர். சந்திர சிறியும் தன்பங்கிற்கு, விக்னேஸ்வரன் சமர்ப்பித்த பாதீட்டை ஏற்க மறுத்துள்ளார்.

‘எமது ஜனாதிபதியுடன்’ பேசி உரிமைகளைப் பெற்றுக்கொள்வோம் என இணக்க அரசியலில் ஈடுபட முனைந்த விக்னேஸ்வரனுக்கு முன்னால் ஒரே ஒரு பாதைதான் இருந்தது, அதாவது, மாதாந்த சம்பளத்தை பெற்றுக்கொண்டு, எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு, ஒரு சம்பிரதாயபூர்வமான பொம்மை முதலமைச்சராக காலத்தை கடத்துவது. (பிளாஸ்டிக் கிரீடம், அம்பு, வேலுடன் இராசா மந்திரி விளையாட்டு விளையாடுவது.) ஆனால் அவர் அப்பாதையில் செல்ல மறுத்ததன் மூலம் தனது அரசியல் நேர்மையை வெளிப்படுத்தியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ அல்லது அக்கூட்டில் உள்ள வேறெந்த தலைவர்களோ இவ்வாறான முடிவினை எடுத்திருக்க மாட்டார்கள் என்பதனால், தமிழ்மக்கள் விக்னேஸ்வரனின் அணுகுமுறையை எச்சரிக்கையுடன் வரவேற்க முடியும்.

மாகாண சபை பற்றி விக்கினேஸ்வரன் தனதுரையில் கூறியவை இவைதான்,

“மாகாண சபை முறையானது அதிகாரப் பகிர்விற்கான ஒருதிட்டம் என எல்லோராலும் அடையாளப்படுத்தப்பட்டு வந்த போதிலும் அது உண்மையில் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் அதிகாரத்தை மென்மேலும் பலப்படுத்துவதாகவும் விரிவுபடுத்துவதாகவுமே அமைந்துள்ளது”

“அண்மையில் வந்த வெளிநாட்டுத் தலைவர்கள் அனைவரும் வடகிழக்கு மாகா-ணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்ற விதத்தில் கருத்துக்கள் வெளியிட்டுள்ளார்கள். ஆனால் இப்பேற்பட்ட அதிகாரப் பரவலாக்கத்திற்கு தற்போது இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் போதியதாக இருக்கமாட்டாது என்பது வெள்ளிடைமலை. வேண்டுமெனில் மாகாண சபையை இடைக்கால மாற்று நிர்வாகமாக அமைத்து அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகலாம்.”

“விரைவாக வடகிழக்கில் இப்போதிருக்கும் தமிழ்பேசும் மக்களிடையே அவர்களின் கருத்துக்களை அறிய சர்வதேச பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். மேலும் சர்வதேச சமூகம் தொடர்ந்து அசட்டையாக இருந்து வந்தால் தமிழ் பேசும் மக்களின் நிலைமையை மாற்றி அமைக்க முடியாத அளவிற்கு மோசமானதாக இருக்கும் என்பதை எம்மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் கூறிவைக்க விரும்புகின்றேன்.”

விக்னேஸ்வரன் கூறியவற்றை படிக்கும் ஒருவர், இவ்வுரையை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுதிக் கொடுத்தாரா ? என எண்ணக்கூடும். ஏனெனில் பதின்மூன்றாம் திருத்தத்தை அரசியற் தீர்விற்கான ஆரம்பப்புள்ளியாகக்கூட ஏற்றுக்கொள்ள மறுக்கும் கஜேந்திரகுமார், சிறிலங்கா அரசியலமைப்புக்கு வெளியில் சர்வதேச கண்காணிப்புடனான ஒரு நிலைமாற்றுகால நிர்வாகத்தை (transitional administration) அனைத்துலக சமூகம் உருவாக்கித் தரவேண்டும் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டு சில மாதங்களேயான நிலையில் (மார்ச் 1988), சட்ட அறிஞரும், தமிழ்த் தேசியவாதிகளின் பெருமதிப்பிற்குரியவருமான நடேசன் சத்தியேந்திரா அவர்கள் ‘Thirteenth Amendment to Sri Lanka Constitution - Devolution or Comic Opera’ என்ற தலைப்பில் விரிவான ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். இணையதளங்களில் படிக்கக்கூடியதாகவுள்ள அக்கட்டுரை, பதின்மூன்றாம் திருத்தம் பற்றியும், மாகாண சபைகளுக்கான அதிகாரம் பற்றியும் எடுத்துரைக்கிறது.

இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தின் 154 F(1) என்ற சரத்து பின்வருமாறு அமைந்துள்ளது.

> மாகாண ஆளுனர் தனது கருமங்களை ஆற்றுவதற்கு **உதவியும் ஆலோசனையும்** வழங்குவதற்காக முதலமைச்சர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டு மேலும் நான்கிற்கு அதிகப்படாத அமைச்சர்களை உள்ளடக்கியதான ஒரு மந்திரிகள் சபை (board of ministers) அமையப்பெறும். இவ்வாலோசனைகள் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் அமையும் பட்சத்தில் அதனையேற்று, ஆளுனர் **தற்துணிவுடன்** கருமமாற்றுவார்.

மாகாண சபைகளில் அங்கம் வகிப்பவர்களின் அதிகாரம் பற்றி விளக்கும் மேற்படி சரத்து பற்றி அவருக்கே உரிய எள்ளலுடன் கருத்து வெளியிட்ட சத்தியேந்திரா, தங்களுடைய ஆட்சியாளர்களுக்கு ‘உதவியும் ஆலோசனையும்’ வழங்குவதற்கு அனுமதித்தமைக்காக அவர்களுக்கு தமிழ் மக்கள் நன்றியுடைவர்களாக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் தன்னலமற்ற நணபர்களான இந்திய அரசாங்கம் தமது உலகின் நான்காவது பெரிய இராணுவத்தின் துணையுடன் இவ்விடயத்தில் சிறிலங்கா அரசாங்கத்தினை உடன்பட வைத்திருக்கிறது, எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் நன்கு விளங்கிக் கொண்ட சட்டவாளர்களைக் கொண்ட கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை பதின்மூன்றாம் திருத்தத்தையும், மாகாணசபைகளையும் அரசியல் தீர்வின் ஆரம்பப்புள்ளியாக ஏன் ஏற்றுக் கொண்டது? இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தத் தவறிவிட்டோம் என விடுதலைப்புலிகளை ஏன் சாடி வருகிறது?

### கணவன் - மனைவி உறவு போன்ற தமது உள்நாட்டு விடயங்களில் வெளித்தரப்பினர் தலையிடக்கூடாது எனக் கருத்து வெளியிட்டு வந்த விக்னேஸ்வரன் இப்போது முழுக்க முழுக்க சர்வதேச சமூகத்தை நம்பியிருப்பது, வரவேற்கத்தக்க ஒரு மாற்றம்.

இக்கேள்விகளுக்கு விடையளிப்பதுபோன்று, “வெறுமனே பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் போதுமானதல்ல என்று கூறுவதிலும் பார்க்க நாளாந்தம் எவ்வாறு அந்தப் போதுமற்ற நிலை எமது நிர்வாகத்தில் குறுக்கிடுகின்றது என்பதை உலகறியச் செய்வது சாலச் சிறந்த வெளிப்பாடு என்று நாம் கருதுகின்றோம்” எனத் தெரிவித்துள்ளார். இது கூட்டமைப்பின் ஆதரவாளர்களால் நெடுகிலும் சொல்லப்பட்ட ஒரு விடயம் தான். இவர்களின் கருத்துப்படி விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுதங்களை தூக்கியெறிந்து விட்டு ‘கினிப் பன்றிகளாக’ மாறியிருக்க வேண்டும்.

ஆகக்குறைந்தது அதிகாரப்பரவலாகத்தினை யாவது மாகாணசபைகளின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது என்பதனை நடைமுறை அனுபவத்தின் வாயிலாக உணரந்து கொண்ட தன் பின்னரும் அதனை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதில் என்ன பயன் ஏற்படுப் போகிறது என்பதனை கூட்டமைப்பினர் விளக்க வேண்டும். அல்லது பதின்மூன்றாவது திருத்தத்தை வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும். இவையிரண்டையும் செய்யாமல் கூட்டமைப்பு தொடர்ந்து வாக்கு அரசியல் செய்யுமானால், வரும் ஆண்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினைப் பலப்படுத்துவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழிவகைகள் கிடையாது.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ................. 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432
Best Food ............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434


Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
Laksiri Seva
Services We Offer;
• இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
• தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
• பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை
• உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்
• Sea Freight and Air Freight
• Full Container (20ft and 40 ft)
• Pick-up and Delivery Services in UK and EU
• House Removals with FREE Survey
இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள்
Laksri Seva Customs Bonded Warehouses
Collection from £ 10 within London *
Collection from your door point in any part of UK or Europe*
2 x Tea Carton for
£ 19.50 *
* Conditions Apply
Colombo Warehouse
Laksiri Seva Pvt Ltd.
66, New Nuge Road,
Peliyagoda, Colombo
+94 1129 177 29-31
Eastern Province Warehouse
Laksiri Seva Pvt Ltd.
26, Hmyl Lane, Main Street,
Addappallam, Ninthavur.
T: 0672 0510 50-51
அழையுங்கள் : 020 8743 7353
Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: 10:30am to 2:00pm
Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ


MERLYN
KUDOS
hansgrohe
JSN BATHROOMS
KUDOS
GROHE
GRUNDFOS
Hudson Reed
WIDE RANGE OF BATHROOMS & SHOWERS
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!.
மாபெரும் சிறப்பு மலிவு விற்பனையைத் தவறவிடாதீர்கள்
European Toilet & unit £180
European Single sink with tap 45cm £79 55cm £89
Hansgrohe mixer taps Start from £59
Thermostatic shower mixer Start from £49
European bathroom suite Start from £90
Sliding shower doors CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM MERLYN, KUDOS, & SANEUX SHOWERS
Thermostatic concealed shower mixer 1 option £150 2 option £170
ITALIAN FURNITURE Start from £256
FULL BATHROOM SUITE Start from £220
Free standing baths CALL FOR PRICES
SPECIAL DISCOUNTS FROM SANEUX
• BATHROOMS • SHOWERS • GRANITE TILES
• MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES
JSN HEAT SUPPLIES LTD
• PLUMBING • ELECTRICALS • BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES
WATER SOFTENERS AVAILABLE ALL BRANDS
Heated towel rails 600x1000 start from £49
DISCOUNTED PRICES ON BOILERS, RADIATORS & UNDERFLOOR HEATING
WIDE RANGE OF BOILERS & RADIATORS IN STOCK
WE STOCK ALL MAKES OF BOILER
ALL MEGAFLOW SYSTEM BOILERS SUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES
TEL: 020 8427 0553
Ideal Standard
Roca
GROHE
mira
MAIN
ARISTON
Vaillant
KESTON
AQUALISA
Glow-worm
WORCESTER
saneux
148 PINNER ROAD, HARROW HA1 4JE TEL: 020 8427 6969

# அஜீத்தின் பாதையில் செல்வாரா ரகுராம் ராஜன் ?



கடன் பெறுவதில், அஜித் நிவாட் கப்ரால் மற்றும் பி.பீ.ஜெயசுந்தரவின் குறுக்கு வழி முறைகளைப் பின்பற்றப்போகிறாரா ரகுராம் ராஜன் என்கிற உறுதியான சந்தேகம் எழுகின்றது.

சுப்பாராவிற்கு பின்னர் இந்தியன் ரிசேர்வ் வங்கியின் தலைவராக, ரகுராம் கோவிந்தா ராஜன் தெரிவு செய்யப்பட்டார். 50 வயதான போபாலின் மைந்தன், வீழ்ச்சியடையும் பொருளாதாரத்தையும், ரூபாய் நாணயத்தின் மதிப்பினையும் தூக்கி நிமிர்த்தி விடுவார் என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அவரோ, 2008 களில் ஏற்பட்ட பொருண்மிய நெருக்கடிகளை தணித்திட, தொழிற்துறைக்கு 3 ஊக்க உதவித் திட்டங்களை பிரணாப்முகர்ஜி முன்னெடுத்ததால், இப்போது பாரிய நெருக்கடிகளை தான் எதிர்கொள்வதாக கூறுகின்றார்.

இதன் விளைவாக, நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (current account deficit) அதிகரிப்பதால், செலவுகளைக் குறைக்கப்போகிறாராம். அதாவது இந்திய மக்கள் மீது வரிச் சுமை அதிகரிக்குமென்று சொல்லாமல் சொல்ல வருகிறார் ரகுராம் ராஜன்.

தேர்தல் நெருங்கும் காலத்தில், முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் மீது சுமத்தும் பழி, பல ‘டெல்லி சட்டசபை தேர்தல்’ முடிவுகளை ஆளும் தரப்பிற்கு அளித்துவிடும் ஆபத்தினை ஏற்படுத்தலாம்.

அது குறித்து ரகுராம் கவலை அடையவில்லை. வங்கிகளை சீரமைத்து, அதன் கட்டமைப்புகளை வலுப்படுத்தல், நிதிச் சந்தைகளை விரிவுபடுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் ஊடாக, நிதிக் கொள்கையினை (Fiscal Policy) வடிவமைக்கலாம் என்று திட்டமிடுகிறார் ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் கலாநிதி. ரகுராம் கோவிந்தா ராஜன்.

பணவீக்கம், வர்த்தகப் பற்றாக்குறை போன்ற விடயங்கள் அதிகரிக்கக்கூடாதென்று பொருண்மிய நிபுணர்கள் எதிர்பார்க்கின்றார்களோ, அவையெல்லாம் கடந்த 4 வருடங்களில் அதிகரித்துவிட்டதால், தற்போதுள்ள பொருளாதார மந்த நிலைக்கு தான் காரணம் இல்லை என்கிற தன்னிலை விளக்கத்தை, நியூயோர்க் நகரில் சிட்டி வங்கி நிறுவனம் நடாத்திய நிகழ்ச்சியில் முதலீட்டாளர்களிடையே பேசும்போது கலாநிதி ரகுராம் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமல்லாது மொத்த உற்பத்தி இலக்கான 4.8 சதவீதம் எட்டப்படலாம். ஆனால் ஏற்றுமதியைவிட இறக்குமதியின் அளவு அதிகரிப்பதால், நிதிப் பற்றாக்குறையின் அளவைப் பொறுத்து செலவுகளை குறைக்க வேண்டியிருக்கும் என்கிற கருத்தினையும் அவர் முன்வைக்கின்றார்.

வங்கிகளின் முக்கியத்துவம் குறித்து, இந்தியன் ரிசேர்வ் வங்கியின் ஆளுநர் வெளிப்படுத்தும் அக்கறை பற்றி விரிவாகப்பார்ப்பதற்கு அப்பால், பக்கத்து நாட்டிலுள்ள (இலங்கை) அபிவிருத்தி மற்றும் சேமிப்பு வங்கிகள், அதன் அரசிற்கு செய்யும் சேவகம் எந்தவகையில் அமைகிறது என்பதைத் தெரிந்து கொள்வது பொருத்தமானது.

அரசிறைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, முறிகளை ஏலம் விடும், ‘இலாப மீட்டும்’ இலங்கை வங்கிகளின் பங்களிப்பானது, ரகுராம் ராஜனின் சிந்தனையைக் கிளறியிருக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் 85 பில்லியன் டொலர்களை உட்செலுத்தி அரச முறிகளை மீளப் பெறும் திட்டத்தை, அமெரிக்கத் திறைசேரியானது 15 பில்லியன் டொலர் திட்டமாக மாற்றப் போவதை அறிந்த நிதி முதலீட்டாளர்கள் அல்லது முறிச் சந்தைப்பெருச்சாளிகள், ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் தாம் போட்ட முதலீடுகளை திரும்பப்பெற்று, மறுபடியும் அமெரிக்காவிற்கு இடம் மாறிய ‘இலாப ஓட்டம்’ பற்றி ஆளுநர் ராஜன் குறிப்படவில்லை.

அதேவேளை, இந்திய நாணயத்தின் மதிப்பிறக்கம் இந்த முதலீட்டுக்காவிகளால் உருவாக்கப்பட்டது என்கிற ஆய்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. அது குறித்தும் அவர் பேசவில்லை. அவர் பேச நினைப்பதெல்லாம், மக்கள் பேச நினைப்பதில்லை என்கிற யதார்த்தமும் உண்டு.

பொதுவாக, ஏற்றுமதியால் பெறப்படும் அன்னியசெலாவணியில் வீழ்ச்சி ஏற்பட்டால், கையிருப்பில் இருக்கும் டொலர்கள் யாவும் நாட்டின் அத்தியாவசிய (உதாரணம் மசகு எண்ணெய்) பண்டங்களின் இறக்குமதிக்கே செலவிடப்படும். அதிலும் பற்றாக்குறை ஏற்படும் போதே, அரச முறிகளின் (கடன் பத்திரங்கள் என்று சொல்வார்கள்) விற்பனை நிகழும். சிலவேளைகளில் இலாபத்தில் இயங்கும் தனியார் அபிவிருத்தி மற்றும் வர்த்தக வங்கிகளின் மூலமும் அரசு தனக்குத் தேவையான நிதியைத் திரட்டிக் கொள்ளும்.

அதாவது டொலர், யூரோ, யென், ஸ்டேர்லிங் பவுண்ஸ் போன்ற சர்வதேச வர்த்தகத்தில் பயன்படும் நாணயங்கள் மூலம் பெறப்படும் நிதி முதலீடுகள், அந்நிய செலாவணிக் கையிருப்பினை தற்காலிகமாக உயர்த்தி, நடப்புக் கணக்கின் பற்றாக்குறை பிரச்சினையை தீர்த்து வைக்கலாம்.

அதேவேளை சொகுசு வாகனங்கள், விலையுயர்ந்த ஆடம்பர நுகர்வுப்பண்டங்கள், தங்கம் போன்றவற்றின் இறக்குமதியை வெகுவாகக் குறைப்பதன் ஊடாக, அன்னியச் செலாவணியின் கையிருப்பு குறைவடையாமல் பார்த்துக்கொள்ளலாம் என்பதே வளர்முக நாடுகளின் பொருண்மிய உபாயமாக இருக்கிறது.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

தேசிய மொத்த உற்பத்தியின் அளவை, 8 சதவீதமாகத் தொட்டுவிடும் தூரம் அதிகமில்லை என்பதோடு, 2015 இல் தலைக்குரிய வருமானம் 4000 அமெரிக்க டொலராகும் என்று எதிர்வு கூறும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவர்கள், 6 சதவீதமாக இறங்கியுள்ள, இன்னும் அதைவிட கீழிறங்க நாள் பார்க்கும் மொத்த உற்பத்தி குறித்து பேசாமல், நாட்டின் பொருளாதாரக் கிரகம் வெள்ளிதிசையில் காலடி வைத்துவிட்டதென பரப்புரை செய்கின்றார்.

ஆனால், தமிழின அழிப்பு நிகழ்த்தப்பட்ட கையோடு, 2.6 பில்லியன் டொலர்களை குறைந்த வட்டியில் கடனாக வழங்கி, சேடமிழுத்த பொருளாதாரத்திற்கு பிராணவாயு கொடுத்த அனைத்துலக நாணய நிதியத்தின் (IMF) இலங்கை வதிவிடப்பிரதிநிதி கலாநிதி. கோஷிமத்தாய் அவர்கள், நாட்டைவிட்டுச் செல்லும் முன்னர் விடுத்த எச்சரிக்கை கவனத்தில் கொள்ளத்தக்கது.

அவருடைய கேள்வி இதுதான். அரசானது, முறிகளை (Sovereign Bond ) நேரடியாக விற்பனை செய்யாமல், அபிவிருத்தி வங்கிகள் ஊடாக முறிகளை ஏன் விற்கின்றது? அதாவது உலகின் முதன்மையான நிதி நிறுவனங்களில் ஒன்றான தம்மிடம் கடன்படாமல், வேறு வழி முறை ஊடாக நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதை நாணய நிதியம் விரும்பவில்லை என்பதை, மத்தாயின் கவலை வெளிப்படுத்துகிறது.

பல பாதைகள் ஊடாக கடன் பெறுவதால், நிதிக்கட்டமைப்பு சிக்கலுக்குள்ளாகும் என்பதே அவரின் பார்வை.

இவ்வருடம் அரச முறிகள் விற்பனை செய்யப்படவில்லை. இருப்பினும் அடுத்த வருடம் 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான அரச முறிகள் விற்பனைக்கு விடப்படும் என்கிறார் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.

2013 செப்டெம்பரில், சர்வதேச நிதி மூலதனச் சந்தையிலிருந்து, தேசிய சேமிப்பு வங்கி (NSB) ஊடாக, 8.875 சதவீத 5வருட டொலர் முறியூடாக $ 750 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளது. அக்டோபரில் டி.எவ்.சி.சி (Development Finance Corporation of Ceylon) என்கிற தனியார் வர்த்தக வங்கி மூலம், 9.625சதவீத வட்டியில் $100 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளது. இந்த வட்டியில், 250 மில்லியனை எதிர்பார்த்து 100 தான் கிடைத்தது.

ஆனாலும் ராஜேந்திரா. தியாகராஜா அவர்களை பிரதம நிறைவேற்று பணிப்பாளராகக் கொண்ட என்.டி.பி வங்கியானது (NDB) $250 மில்லியன் நிதிதிரட்டும் வேலையை ஒத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நிதித்துறை தலைவர்கள், மேற்குலகின் பொருளாதார நெருக்குதல்களை எதிர்கொள்ள, உடனடியாகவே இந் நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள்.

அதேவேளை அரசு எதிர்பார்த்தவாறு, சேமிப்பு வங்கியால் ஒரு பில்லியன் நிதியை திரட்ட முடியாமல் போனதையிட்டு, திறைசேரிச் செயலாளர் பி.பீ.ஜெயசுந்தர விசனமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாமல், அல்லது உத்தரவாதத்தினை அளிக்காமல் சர்வதேசச் சந்தையில் நிதிதிரட்டும் பணியில் தாம் ஈடுபட முடியாதென வங்கியின் தலைவர் காரியவாசம் தெரிவித்த விவகாரத்தை நினைவிற் கொள்ள வேண்டும். இதன் 72 சதவீதமான சேமிப்பு, அரச முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள விடயத்தை தவிர்த்து விட முடியாது.

மேலே விபரிக்கப்பட்ட பல விடயங்கள், இந்தியாவில் மேலெழும் வாய்ப்புக்கள் உள்ளது போல் தெரிகிறது.

வங்கிகளின் கையிருப்பு விகிதத்தை (Reserve Ratio) மேலும் குறைப்பாரா? புதிய ஆளுநர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார நிலை மேலும் சிக்கலடையும் வாய்ப்புக்களே அதிகம். உல்லாசப்பயணத்துறையை ஊக்குவிக்க இன்னும் பல நட்சத்திர விடுதி ஒன்றுகூடல்கள் இடம் பெறலாம். மிதக்கும் ஆயுதக் கப்பல்கள் வட-கிழக்குக் கடற்பிராந்தியத்திலும் வரலாம். வங்கிகளும் தனியார்மயமாகலாம். பொதுச் சேவைத்துறையும் பன்னாட்டுக் கம்பனிகளிடம் கையளிக்கப்படலாம். நிதி நிலைமை அப்படி இருக்கிறது.



# சீரோ மணித்தியால வேலை ஒப்பந்தத்தால் - இங்கு சீரழியும் எம் தமிழ் வேலையாட்கள்



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

பிஜித்தீவில் கரும்புத்தோட்டத்தில் எம் மக்கள் படும் துன்பம் கண்டு துடித்து கவிதை பாடினான் பாரதி. "கரும்புத் தோட்டத்திலே - அவர் கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றனரே, செக்கு மாடுகள் போலுழைத் தேங்குகின்றார்கள். நாட்டை நினைப்பாரோ, வீட்டை நினைப்பாரோ, அவர் விம்பி விம்பி அழும் குரல் கேட்டிருப்பாய் காற்றே அவர் விம்பி அழவும் திறங்கெட்டுப் போயினர்". இன்று அவன் இருந்திருந்திருந்தால் இந்த வெளிநாடுகளில் தொழில்சாலைகளிலும், உணவு சாலைகளிலும், எம்மக்கள் இந்த சீரோ மணித்தியால ஒப்பந்தத்தின் கீழ் படும் மனவேதனையைப் பார்த்து, எத்தனை பாட்டெழுதி இருப்பனோ தெரியாது.

சீரோ மணித்தியாலய ஒப்பந்தமாக இருந்தாலும் அது Employment rights Act 1996க்கீழ் உள்ள எழுதப்பட்ட வரைமுறைகளுக்கு அமையவே நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டும். அதன் பிரகாரம் தொலைபேசி அழைப்பு (On call) உடன் படிக்கைக்கு இணக்கம் பிறக்கிறது.

வேலை கொடுப்பவருக்கு இன்னாருக்குத் தான் வேலை கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை, அது போல வேலைக்கு அழைக்கப் படும் போது அதற்கு சம்மதிக்க வேண்டும் என்ற கடமைப்பாடும் வேலையாளிக்கு இல்லை

வேலையாளி எப்போது அழைக்கப்படுகிறாரோ, அப்பப்ப வேலைக்கு தயாராக இருக்க வேண்டும். அவர்கள் வேலை செய்யும் மணித்தியாலத்திற்கு மட்டுமே சம்பளம் கொடுக்கப்படும்.

இது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள், மற்றும் மாணவ மாணவிகளுக்கு மிகவும் பொருந்தமானது. அப்பப்ப கையில் காசு தேவைப்படும் போது, அல்லது விடுமுறை நாள்களில் விரும்பிய நேரம் வேலைக்கு போய்க் கொள்ளலாம். சில நேரங்களில் இப்படியாக உடன்படிக்கைகளில் எப்போது வேலை செய்ய வேண்டும் என்று குறிப்பிடா விட்டாலும், குறைந்தது இத்தனை மணித்தியாலங்கள் வேலை தரப்படும் என்பதை உறுதிப் படுத்துவார்கள். அது கூட ஒரு வாரத்தில் மிக அதிகமாகவும், அடுத்த வாரம் மிகக்குறைவாகவும் இருக்கலாம்.

சட்டப்படி சீரோ ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்யும் எல்லா தொழிலாளர்களுக்கும் எழுத்து மூலமாக ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். வேலை செய்யும் மணித்தியாலம், சராசரி ஒரு வாரத்திற்காக மணித்தியாலயம், (சிலவேளைகளில் மணித்தியாலம் குறிப்பிடப்படாமல் வாரத் திற்கு வாரம் வேறுபடும் என்று மட்டும் குறிப் பிடப்பட்டிருக்கும்) மேலதிக வேலை மணித் தியால வேண்டுகோள், ஒரு மணித்தியாலயத் திற்கு எவ்வளவு காசு? அதை எப்போது, எவ்வாறு தருவார்கள் என்பன போன்ற விபரங்கள் அவசியம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அவர்கள் கூப்பிடும் போது என்று போட்டிருந்தாலும், நடைமுறையில் நீங்கள் நீண்ட காலமாக ஒவ்வொரு வாரமும் ஒரே நேரம் வேலை செய்து வந்திருந்தால், அது மறைமுகமாக ஒரு குறிக்கப் பட்ட நேரமாக ஒப்பந்தத்தின் கீழ் வரலாம். திடிரென ஒருநாள் உங்களை வேலைக்கு அழைக் காமல் விட்டு, நீங்கள் வேலைக்கு வழமை போல ஆயத்தமாக இருந்தால், உங்களுக்கு உரிய சராசரி வேதனத்தை வழங்கும் கடப்பாடு அவர்களுக்கு இருக்கலாம். மேலதிக விபரத்திற்கு Citizens Advice Bureau வை நாடலாம் அல்லது கீழ் குறிந்த இணைத்தளத்திற்கும் போகலாம்.

http://www.adviceguide.org.uk/england/work_e/work_factsheets.htm

அத்தோடு வேலைக்காக அல்லது தொலைபேசி அழைப்புக்காக காத்திருக்கும் நேரத்திற்கு வேதனம் வழங்கப்பட மாட்டாது. ஆனாலும் வேலைத்தளத்திற்கு சென்று அங்கு வேலை தொடங்குவதற்காக காத்திருக்கும் படி பணிக்கப் பட்டால் சட்டப்படி அவர்கள் உங்களுக்கு குறைந்தது சராசரி அல்லது national minimum wage ஆவது தரவேண்டும் இல்லையெனில் தரப்பட மாட்டாது என்று உங்கள் ஒப்பந்தத்தில் சொல்லப் பட்டிருக்க வேண்டும்.

இவ் சீரோ மணித்தியாலய ஒப்பந்தத்தால் பாதிக் கப்படுபவர்கள் முக்கியமாக குடும்பத்தவர்கள் மற்றும் வீட்டு மோட்கேஜ் கட்ட வேண்டியவர்கள். தற்சமயம் பிரித்தானியாவில் மட்டும் ஒரு மில்லியன் தொழிலாளர்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்கிறார்கள். இதில் பல நுணுக் கங்களை அறிந்து கொள்ளாமலே எம்மில் பலர் இந்த ஒப்பத்தின் கீழ் வேலை செய்து மன உளைச்சலுக்கு உள்ளாகுகிறார்கள். **அநேகமான** இவ்வாறன ஒப்பந்தத்தின் கீழ் sick pay இல்லாதது, பல வருடம் வேலை செய்தாலும் வேலை நிறுத்தத் தொகை இல்லாதது. பாரபட்சமாக வேலையை விட்டு நிறுத்தினாலும், நிருபிக்க முடியாமல் இருப்பது, எந்த நேரமும் அழைப்பை எதிர்பார்த் திருக்கும் நிலமை, விடுமுறை வேதனம் இல் லாமை, போன்றவற்றோடு நித்தம் வரும் புது புது சக தொழிலாளர்களோடு வேலைக்கானநட்பை உருவாக்க முடியாமை என்ற அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதைவிட இப்போதுள்ள வேலைத்தட்டுப்பாடு சூழ்நிலையில் வேலைக்கு எடுக்கும் முகவர்களில் இருந்து, வேலை செய்யும் இடத்து மேற்பார்வையார் வரை இவர்களில் இந்த நிலையை தங்களுக்க சாதகமாக பயன்படுத்தி இவர்களை ஆடு மாடு போல் ஒரு எண்ணிக்கை போல பயன் படுத்துதல். சில தொழில் சாலைகளில் சிறுநீர் கழிக்கும் இடைவெளிக்கு கூட கேள்வி எழுப்புதல், ஒரு நிமிட ஓய்வின்றி வேலை வாங்குதல், வேலையில் இருந்து நிற்பாட்டி விடுவதாத மிரண்டுதல், மரியாதையின்றி நடத்துதல், விரும்பியபடி அவர்களின் பெயர்களை அவர்கள் விருப்பத்தை மதியாது சுருக்கியும், நீண்டியும் அழைத்தல், சக தொழிலாளர்கள் முன் மிக சத்தம் போட்டு அவமான படுத்தும் விதத்தில் அவர்களில் வேலை செய்யும் விதம் பற்றி விமர்சித்தல் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

## இவ் சீரோ மணித்தியாலய ஒப்பந்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் முக்கியமாக குடும்பத்தவர்கள் மற்றும் வீட்டு மோட்கேஜ் கட்ட வேண்டியவர்கள். தற்சமயம் பிரித்தானியாவில் மட்டும் ஒரு மில்லியன் தொழிலாளர்கள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்கிறார்கள்.

அதிலிலும் வெள்ளைகாரர் அல்லாத எம்மைப் போன்றவர்கள் மேற்பார்வையாளர்களாக இருக்கும் இடத்து இது இன்னம் ஒருபடி அதிகமாக இருப்பதாக தகவல்! இப்போ தொழில்நுட்பம் மலிந்த காலம் உங்களுக்கு நடக்கும் அநியாயமாக நடப்புக்களுக்கு தகுந்த சாட்சியும், ஆதாரங்களும் இருக்கும் இடத்து தகுந்த நிறுவனங்களின் உதவியுடன் சட்டநடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அது முழுக்க இலவசமாக இருக்கும் என்பதில்லை.

SCAN Electronics

Happy Merry Christmas & New Year



4 Camera CCTV System £ 499
* 4 N/V Cameras (600 TVL), 19" Monitor,
* 4 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

8 Camera CCTV System £ 749
* 8 N/V Cameras (600 TVL), 22" Monitor,
* 8 CHANNEL DVR (1 Month Rec + Mob View)





16 Camera CCTV System £ 1249
* 16 N/V Cameras (600 TVL), 32" Monitor,
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View)





EPOS System £ 1500
Wire Free Alarm £ 350
2 Door Contact, 2 PIR Sensor
1 Panic Button, Mobile Link

All the Prices Including Fitting and Transport

EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System



SCAN ELECTRONICS
UNIT - 06, Zeal House, 8, Deer Park Road,
London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com



OM GURU SHAKTHI ASTROLOGICAL CENTRE

GURUJI: KRISHNA SHASRI






இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்த்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.


உத்தியோக பிரச்சினை, வியாபார முன்னேற்றமின்மை, பில்லி சூனியம் மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களை உங்கள் கைநாடி மூலம் கண்டுபிடித்து போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்கு சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

21, LEE HIGH ROAD, LEWISHAM, SE13 5LD
Near: SIVAN TEMPLE, Opposite: KAVIAYA (SATHYAM) SUPER MARKET
Tel: 07404567306, 07506737606
Open - 7 Days a Week - 9.30am to 8.00pm

# Provincial Council Cannot be a Vehicle of Change for The Betterment of The Tamil

- C.V. Wigneswaran



*Following are the excerpts of the statement by C.V.Wigneswaran, Chief Minister while presenting the Annual Financial Statement and Appropriation Statute to the Council for the year 2014 on 10/12/2013.*

It was the political agitation by the minorities that resulted in the establishment of the Provincial Council. More specifically it was for the benefit of the Tamil speaking people of the North and East that Sri Lanka and India formulated the Provincial Council system which resulted in the Thirteenth Amendment to the Constitution.

In fact the political need to devolve power for the North and East was effectively scuttled.

But the then Government made the Provincial Council System applicable to the whole Island and thus stultified the whole concept of power sharing essential for the Tamil speaking Northern and Eastern Provinces. Thereby nothing was given specially for the Northern or Eastern Provinces when power sharing was urgently needed by them rather than the other Provinces. In fact the political need to devolve power for the North and East was effectively scuttled. The political needs, aspirations and the special interests of the people of the Northern and Eastern Provinces were thus overlooked.

The Provincial Council System, it must be noted has been identified by all as a means to devolve power to the periphery. But the Thirteenth Amendment in fact has strengthened the hands of the Executive President and widened his powers.

The Governor is the representative of the Executive President. No appointment is possible within the Province without the approval of the Governor. From the Secretary to the Minor Employees, it is the Governor who holds the whip hand. Even though the law says the appointment of the Chief Secretary shall be by the President with the concurrence of the Chief Minister, the present Chief Secretary was not appointed in conformity with the Law. She did not consider it necessary to resign when the new Administration came in. This applies to other Secretaries too.

In our Northern Provincial Council it is the former Jaffna Commander of the Armed Forces who has now taken on the mantle of the Governor. He naturally goes on unhindered as if the Army is administering the Northern Province. The officials of the Provincial Council therefore fear to cooperate with the Peoples' Representatives. They shudder to think of the consequences of displeasing a former Northern Commander of the Army and the present Governor.

Added to this we have not been able to present a single Statute to the Council as the Administration lacks the required high level human resources and institutional arrangements. It is by effluxion of time that our present cadre of senior officers got to where they are now. May be political patronage in the case of some cannot be over ruled. But we are unable to expect a high level of efficiency and proficiency in certain quarters. There is no system by which we can induct high level human resources.

Twenty odd years of Military Rule has trained our officers to act parrot like and to do things as they are told to do only. But I do not criticize them. I feel aggrieved. There is a gap in the capacity for governance and development inside and outside the Administration.

At this stage someone might pose the question as to why we decided to contest the Provincial Council Election if the Thirteenth Amendment lacked teeth and was insufficient. There were two important reasons. Only if we stood for election could we bring out to the notice of the world the feelings and aspirations of the people of the Northern Province and show that the Government was portraying a false picture. In fact at the last Election the people were able to loudly proclaim their disapproval to the Government in power and the presence of the military in the Northern Province.

Secondly without power, without authority in our hands to proclaim insufficiencies in the Thirteenth Amendment at Colloquiums and Seminars made no impact on the Government nor the International Community. But we felt it was better to get ourselves established in authority, experience the short comings in reality and thereafter tell the world what was happening. That exactly is what we are doing now. Rather than to merely say that Thirteenth Amendment is insufficient we feel exposing its shortcomings while established in office would be beneficial for future changes.

The objective of the 2012 UN Resolution was to bring about a change for the better, in the life of the people of the North and East and bring justice to them. But whether the Resolution has had the desired effect on our Government is no doubt debatable.

The Northern Provincial Council Elections took place entirely due to the pressure brought about by India. You cannot continue to keep the Military in the North and expect reconciliation and regeneration. The Joint Declaration by the President and the UN Secretary General in May 2009 has not been honored to say the least. The Foreign dignitaries who came over here publicly commended an immediate change in the life of the people of the North and East. They have urged the urgent need to devolve sufficient powers to the North and East.

It should be understood by all clearly that the present Provincial Council cannot be a vehicle of change for the betterment of the Tamil speaking people of the North and East. It could be converted into a transitional Administration. For 65 years since Independence the problem of the Tamil speaking people of this country have not been solved. Consecutive Governments of which ever hue were only interested in foisting more and more hardships and calumny on our people.

Thereby turning to the International community appears to be the only alternative open to us. The International community within the past two months has given us assurances that they could help us. We therefore must do everything on our part to accept their largesse. In 2012 the UN promised technical assistance by the mandate holders.

Unless there is immense pressure from the International Community our Government will not grant any form of power sharing to the Tamil speaking people of the North and East. The International Community should ensure that aid given to us reaches us. The Government should not be an obstacle to our receiving such aid. We must receive directly the largesse extended to us. Sometimes projects under taken in the Provinces grind to a halt prematurely since aid money gets stagnated at Central Government level.

It is also essential that our officers must receive technical assistance to draft appropriate Statutes and development projects and plans. We have very little human resources in these directions. There seems to have been a deliberate attempt at subversion of innovation so far.

What I see today in this country is the deterioration of democratic institutions and the rule of Law throughout the country. We argue about federalism, self determination, power sharing and what not while in the Northern Province if not the whole country foundations are being laid for a dictatorship. The Family Rule gives us the opportunity to question whether steps are being taken to pass on administration from one to the other, from Democracy to Dictatorship. When statements are being made five years after the war that the Military will not be withdrawn from the Northern Province at any cost, we must understand the unsaid thoughts of those who utter so.

Only if we stood for election could we bring out to the notice of the world the feelings and aspirations of the people of the Northern Province and show that the Government was portraying a false picture.

If we do not find solutions at the earliest for the problems of the Tamil Speaking people of the North and East the existing state of affairs would very definitely make a significant change in the demographic pattern of the North in favour of the majority community following what has taken place in the East. There are some pathetic Tamils who question "why not?" They must realise that it was after driving away violently the Tamil speaking people from the Southern seven Provinces between 1958 and 1983 that colonization of the Northern Province with the help of the Military is being undertaken now. Do not these brothers who ask such questions know that activities of successive Governments in this Country have bordered on genocide if not genocide or knowingly do they ask these questions for selfish reasons?

The finances we are to receive are negligible. Nevertheless it is our resolve that widows' families, women headed families, disabled and others affected by the war should be ameliorated with foreign help.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# Erasing the dead



Tamil Guardian

Sri Lanka announced a census to ascertain the number of war casualties; an attempt to counter increasingly insistent international demands for a credible accountability process at the next UN Human Rights Council session in March 2014. But Sri Lanka's intention is not to establish an accurate count of civilian casualties. The clue rests in census officials' assertions that only those cases where relatives can produce a death certificate will be counted as officially dead. Sri Lanka has however stalled and delayed certifying the deaths of large numbers of Tamil civilians, particularly from the final months of the war, a point repeatedly raised by international agencies, including the UN Expert Panel. The government's criteria of counting only death certificates, and even then only those provided in person by immediate family members, exposes a barefaced attempt to officially erase large numbers of Tamil deaths from the war record and thereby challenge the well researched international estimates of at least tens of thousands of Tamil civilian deaths in the final months of the war.

Having repeatedly insisted that no civilians died during the last phase of the war, the growing and insurmountable weight of evidence on the scale of casualties has forced Sri Lanka to shift from blanket denial to open confrontation. The report of the UN Internal Review Panel stated that up to 70,000 Tamil civilians could have been killed, while the World Bank notes that over 100,000 Tamil civilians remain unaccounted for, after the end of the fighting in May 2009. Sri Lanka will use the distorted figures from its own census to undermine the gravity of international evidence and provide its allies in the UN Human Rights Council with ammunition to head off 'western imperialism'.

The head of the Department for Census and Statistics DCA Gunawardena said that evidence by third parties and relatives will not be accepted. Furthermore, only those immediate family members with certificates or police documentation to prove death or disappearance will be able to submit their claim to the census. But the process to obtain death certificates is complex and has made it difficult for families to receive appropriate documentation.

> Kamalesh Sharma, the Commonwealth Secretary General and notorious friend of Sri Lanka, has so far been the lone but prompt voice in welcoming the census.

Reports also suggest that certificates are only issued once family members provide assurance that no further legal action will be taken, an option that many would be forced to take. The UN's Panel of Experts called on the government to not use the issuance of death certificates to preclude 'any further legal recourse in the future.'

The government has also said that those who have fled the country would not be able to file the names of their dead relatives and nor will the families with no survivors be counted. Census officials were careful to point out that the LTTE leader Velupillai Prabhakaran and his family will therefore not be counted as there was no one left in the family to submit the claim. In short while the Sri Lankan government acknowledges that the LTTE leader and his immediate family were killed in the war, with evidence suggesting that his young son was executed while in the hands of the Sri Lankan military, they will nevertheless not be counted as 'officially' dead. Equally, other Tamil families across the north-east, who have perished entirely or whose relatives have now fled abroad, will be erased off the record of war deaths.

The 16,000 employees of the Sri Lankan bureaucracy who will be deployed across the island to collect and record death certificates will establish an 'official' figure of civilian deaths which, Sri Lanka will petulantly insist, undermines established international estimates of tens of thousands of Tamil deaths, particularly those from the final months of the war. It is entirely predictable that Sri Lanka and its allies on the Human Rights Council will use the census to counter demands for a credible, independent investigation. Indeed Kamalesh Sharma, the Commonwealth Secretary General and notorious friend of Sri Lanka, has so far been the lone but prompt voice in welcoming the census.

> Sri Lanka will use the distorted figures from its own census to undermine the gravity of international evidence.

It is significant that having called for more time and space over the past four years to establish its own investigation into war crimes, Sri Lanka has now changed tack and is instead preparing to challenge the now established and painstakingly collected evidence of war crimes. The government's census will be far from credible, unlike the detailed reports by the UN and some NGOs and human rights organisations.

But this shift from delaying accountability and justice to challenging the very need for it arguably clears the way for a decisive move towards a credible investigation of Sri Lanka's crimes, an investigation that must undeniably be international. If left to its own devices, Sri Lanka will continue to create an alternative narrative of what occurred during the final months of the armed conflict, something it must not be allowed to do. An independent, international investigation is long overdue.













Lebara




# இலங்கையில்

# 100,000

## சிறுவர்களுக்கான லிபராவின் உதவித்திட்டம் - 2014

லிபரா அறக்கட்டளை இதுவரை €1,000,000வை உதவித்திட்டங்களிற்கு வழங்கியிருப்பதுடன், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட 30,000ற்கும் மேற்பட்ட தமிழ்ச் சிறுவர்களுக்கு உதவிகளை வழங்கியிருக்கின்றது. 2010ஆம் ஆண்டு முதல் கல்வி, சுகாதாரம், வீட்டுத்திட்டம் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்கள் பணியை விரிவாக்க உங்கள் உதவி தேவைப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது!**

நீங்கள் செய்யும் **€10*** அல்லது அதற்கு மேலான **Top Up** தொகைக்கு நாங்கள் **€1** ஐ எமது உதவித் திட்டத்திற்கு வழங்குவோம். இதில் பங்குபற்ற,

**ED** - கல்வி
**HC** - சுகாதாரம்
**OR** - விதவைகள் / சிறுவர்களுக்கான பராமரிப்புகள்

என்ற தலைப்புகளை குறிகாட்டும் ஆங்கில எழுத்துக்களை எமக்கு **SMS** மூலம் **34001** என்ற எண்ணுக்கு அனுப்புங்கள்.

நீங்கள் **Top Up** செய்யும்போது லிபராவே அன்பளிப்புத் தொகையை வழங்கும். **உங்களது நிலுவையில் இருந்து கழிக்கப்பட மாட்டாது.**

**Always by your side**

lebara.com

*கட்டண வரையறை, பாவனைக்கட்டுப்பாடுகளுக்கு lebara.com என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

# அரவிந்த் கெஜ்ரிவால்



## இந்திய அரசியலில் ஒரு புதிய துடைப்பம்

**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இந்தியாவின் நான்கு சட்டசபைக்கான தேர்தலில் காங்கிரசுக் கட்சி படுதோல்வி அடைந்தாலும் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி காத்திரமான வெற்றியை ஈட்டினாலும் தேர்தல் தொடர்பான செய்திகளில் இந்திய மக்களினதும் உலகத்தினதும் கவனத்தை ஈர்த்தவர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகும். இந்திய அரசியலைப் பொறுத்தவரை 45 வயதான இவர் ஒரு இளைஞரே. நன்கு படித்த ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த அரவிந்த் கெஜ்ரிவால் எந்திரவியலில் பட்டம் பெற்றபின்னர் இந்திய வருவாய்த் துறையில் ஒரு ஆணையாளராகக் கடமையாற்றியவர். அந்தப் பதவியில் இருக்கும் போதே மாற்றம் என்னும் அமைப்பை 1999-ம் ஆண்டு தொடங்க முன்னின்று உழைத்தார். இந்த அமைப்பு உணவுப் பங்கீட்டு அட்டை விநியோகத்தில் உள்ள ஊழல்களை அம்பலப் படுத்தியது.

**ஏற்கனவே மூன்று முறை முதல்வராக இருந்த ஷீலா டிக்சிற்றைத் தோற்கடித்த அரவிந்த் கெஜ்ரிவால் மீண்டு ஒரு மூன்று முறை முதல்வராகத் தெரிந்து எடுக்கப்பட்ட நரேந்திர மோடியை அவரது கோட்டையில் தோற்கடிப்பாரா?**

பின்னர் அரவிந்த் கெஜ்ரிவால் அரசபதவியில் இருந்து விலகி அனா கசாரேயின் ஊழலுக்கு எதிரான லோக்பால் அமைப்பில் இணைந்தார். அதில் ஒரு தீவிர செயற்பாட்டாளாகத் திகழ்ந்த அரவிந்த் கெஜ்ரிவால் இந்திய அரசில் ஊழல் ஒழிக்கப்படவேண்டும் என்ற பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பின்னர் இந்திய அரசு உழலுக்கு எதிரான ஜன் லோக்பால் எனப்படும் சட்ட மூலம் தயாரிக்க அமைத்த குழுவில் இவரும் ஒருவராக இணைக்கப்பட்டார். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சந்தோஷ் ஹெக்டே, பிரபல உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் ஆகியோருடன் இணைந்து ஊழலுக்கு எதிரான சட்டமூலமான ஜன் லோக்பாலை அரவிந்த் கெஜ்ரிவால் வரைந்தார். இந்தச் சட்டம் இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றாமல் இழுத்தடிக்கப்பட்டது. இதற்கு ஆளும் காங்கிரசுக் கட்சி திரைமறைவில் சதி செய்தது. இதனால் அனா கசாரே ஜன் லோக்பால் சட்டம் நிறைவேற்ற வேண்டி சாகும்வரை உண்ணா விரதம் இருந்தார். இறுதியில் நீண்ட இழுபறிக்குப் பின்னர் 17-12-2013-ம் திகதி ஜன் லோக்பால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஊழல் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அது தலைமை அமைச்சர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட உயர்பதவி வகிப்பவர்கள் அனைவரையும் விசாரிக்க வகை செய்யும், தேர்தல் ஆணையம் போன்ற ஒரு தன்னிச்சையான அமைப்பை ஏற்படுத்துவதற்கு வழி செய்வதுதான் ஜன் லோக்பால் சட்டம். பின்னர் 2012-ம் ஆண்டின் இறுதியில் பொது மகன் கட்சி என்ற பொருள்படும் ஆம் ஆத்மி கட்சியை ஆரம்பித்தார். இதனால் அன்னா கசாரேயிற்கும் அரவிந்த் கெஜ்ரிவாலிற்கும் இடையில் மோதல் ஏற்பட்டு இருவரும் பிரிந்தனர். பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் பிரபலமான ஐந்து இந்திய அரசியல்வாதிகளில் அரவிந்த் கெஜ்ரிவாலும் ஒருவராகும் அளவிற்கு இவரது செல்வாக்கு உயர்ந்தது. 2013-ம் ஆண்டு முதல்வாரம் நடந்த டில்லி சட்ட சபைக்கான தேர்தலில் இவரும் இவரது கட்சியினரும் ஊழல் ஒழிப்பை தமது கொள்கையாக முன்வைத்து போட்டியிட்டனர். மூன்று தடவை முதல்வராக இருந்த ஷீலா டிக்சிற்றுடன் போட்டியிட்டு அரவிந்த் கெஜ்ரிவால் வெற்றி பெற்றார்.

அரவிந்த் கெஜ்ரிவாலிற்கு என் ஜீ ஓ எனப்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் நிறையத் தொடர்பு இருக்கின்றது என்கின்றனர். இந்த தொண்டு நிறுவனங்களின் முக்கிய பணி வறுமை மிக்க இடங்களில் இடது சாரிக் கட்சிகளின் செல்வாக்குகள் பெருகி புரட்சி ஏற்படாமல் பாதுகாப்பதுதான் என்றும் இதற்கு இந்த நிறுவனங்கள் அரவிந்த் கெஜ்ரிவாலைப் பயன்படுத்துகின்றன என்ற குற்றச் சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

அன்னா கசாரே தன்னுடன் இருந்த அரவிந்த் கெஜ்ரிவால் தனக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொண்டார் எனக் குற்றம் சாட்டுகிறார். ஊழலுக்கு எதிரான லோக்பால் சட்ட மூலம் நிறைவேற்ற தாம் திரட்டிய மூன்று கோடி ரூபாவை அரவிந்த் கெஜ்ரிவால் தமது அரசியல் கட்சிக்காகப் பயன்படுத்துகிறார் எனக் குற்றம் சாட்டுகிறார். டில்லி சட்ட சபைத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி 32 தொகுதிகளிலும் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி 28 இடங்களிலும் காங்கிரசுக் கட்சி எட்டு இடங்களிலும் வெற்றி பெற்றன எழுபது தொகுதிகளைக் கொண்ட சட்ட சபையில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லை. இதனால் ஒரு கூட்டணி அரசு அமைய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியமைக்க தாம் உதவுவதாக காங்கிரசும் பாரதிய ஜனதாக் கட்சியினரும் அறிவித்தன. அரவிந்த் கெஜ்ரிவால் காங்கிரசுக் கட்சி சார்பானது என்று குற்றம் சாட்டுகின்றார் அனாஹசாரேயின் அமைப்பின் முன்னணி உறுப்பினரும் இந்தியாவின் முன்னாள் முப்படைத் தளபதியுமான வி கே சிங் அவர்கள். அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியினர் வி.கே.சிங் பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடத் துடிக்கின்றார் எனக் குற்ற, சாட்டுகின்றனர். மொத்தத்தில் ஊழலை ஒழித்துக் கட்ட என வந்தவர்களிடையே போட்டி தீவிரமடைந்துள்ளது.

### ◆ டில்லியில் யார் ஆட்சியமைப்பது?

டில்லி சட்ட சபையில் யார் ஆட்சி அமைப்பது என்பது தொடர்பாக இழுபறி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் இதை வாசிக்கும் போது இழுபறி முடிவிற்கு வந்திருக்கலாம். ஆளுனர் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற பாரதிய ஜனதாக் கட்சியினரை ஆட்சி அமைக்க அழைத்தார். அவர்கள் முடியாது என்று சொல்ல அரவிந்த் கெஜ்ரிவால் ஆட்சி அமைக்க அழைக்கப்பட்டார். அவர் தனக்கு பத்து நாள் அவகாசம் தரும்படி கேட்டார். பின்னர் தனது ஆம் ஆத்மி கட்சி காங்கிரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பது பற்றி மக்களின் கருத்துக்களை தான் எஸ்.எம்.எஸ் எனப்படும் கைப்பேசிக் குறுந்தகவல்கள் மூலம் அறியப் போவதாகத் தெரிவித்தார். பின்னர் தன்னுடன் இணைந்து ஆட்சி அமைக்க காங்கிரசுக்கு ஒரு 18 அம்சக் கோரிக்கையை மத்தியில் ஆளும் காங்கிரசுக்கு விடுத்தார். ஆனால் காங்கிரசு அதில் 16கோரிக்கைகளை மாநில அளவில் தீர்த்துக் கொள்ளலாம் என்கிறது. 18 அம்சக் கோரிக்கையின் விபரம்:

**01.** டெல்லியில் விஜபி கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் சிவப்பு சுழல் விளக்கு கார்களை பயன்படுத்தக் கூடாது, பகட்டான பங்களாக்களிலும் வாழக் கூடாது.

**02.** அண்ணா ஹசாரே வலியுறுத்துல் வலுவான லோக்பால் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்.

**03.** டெல்லிக்கு முழுமையான மாநில அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

**04.** டெல்லியில் மின்வாரியம் தனியார் மயமாக்கப்பட்ட நிலையில், அந்நிறுவனங்கள் தனிக்கைக்கு உட்படுத்த வேண்டும். அதற்கு மறுப்பு தெரிவிக்கும் நிறுவனங்கள் உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும்.

**05.** மின் மீட்டர்கள் சோதனை செய்யப்பட வேண்டும்.

**06.** டெல்லியில் ஒவ்வொரு நபருக்கும் நாள் ஒன்றுக்கு 220 லிட்டர் தண்ணீர் வழங்க முடியும். ஆனால் அந்த தண்ணீர் எங்கே?

**07.** டெல்லியில் உள்ள காலனி குடியிருப்புகள் சட்டப்பூர்வமாக்கப் படுவதோடு அவை முற்றிலுமாக சீரமைக்கப்பட வேண்டும்.

**08.** குடிசைகளில் வாழும் மக்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்

**09.** ஒப்பந்த அடிப்படையில் பணி செய்பவர்களுக்கு நிரந்தர வருமானம் தரும் வேலை உத்தரவாதம் அளித்திட வேண்டும்.

**10.** சாமான்ய வியாபாரிக்கு கூட அடிப்படை கட்டமைப்பு, சாலை, தண்ணீர், மின் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

**11.** சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு கூடாது.

**12.** கிராமப்புற விவசாயிகளுக்கு வசதிகளும், மான்யங்களும் தர வேண்டும்.

**13.** டெல்லியில் 500 அரசு பள்ளிகள் திறப்பது, தனியார் கல்வி நிறுவனங்களில் நண்கொடை வசூலிப்பதை தடுப்பது. இவற்றின் மீது காங், பாஜக தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்.

**14.** மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் மருத்துவமனைகள் திறக்க வேண்டும்.

**15.** மகளிர் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் 3 மாதங்களுக்குள் பைசல் செய்ய வேண்டும்.

**16.** அனைது வழக்கு விசாரணைகளும் 6 மாத காலத்துக்குள் முடித்து நீதி வழங்க கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும். கூடுதலாக நீதிபதிகளையும் நியமிக்க வேண்டும்.

**17.** டெல்லி முனிசிபல் அமைப்பு தங்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமா என்பது தெரிய வேண்டும்.

**18.** சில பிரச்சினைகளில் பொதுமக்களே கூடி முடிவெடுக்க அனுமதி அளிக்க வேண்டும்.

### ◆ அரவிந்தின் அடுத்த அதிரடி

வரவிருக்கும் இந்தியப் பாராளமன்றத்தின் லோக் சபா எனப்படும் மக்களவைக்கான தேர்தலில் அரவிந்த் கெஜ்ரிவால் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமை அமைச்சர் வேட்பாளர் நரேந்திர மோடியை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக அதிரடியாக அறிவித்துள்ளார். ஏற்கனவே மூன்று முறை முதல்வராக இருந்த ஷீலா டிக்சிற்றைத் தோற்கடித்த அரவிந்த் கெஜ்ரிவால் மீண்டு ஒரு மூன்று முறை முதல்வராகத் தெரிந்து எடுக்கப்பட்ட நரேந்திர மோடியை அவரது கோட்டையில் தோற்கடிப்பாரா?


**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
R3
ICAEW THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

# KIDS பேப்பர்

## Christmas Poem !

### When Santa Claus Comes...

A good time is coming,
I wish it were here,
The very best time in the
whole of the year;
I'm counting each day
on my fingers and thumbs -
the weeks that must pass
before Santa Claus comes.

Then when the first
snowflakes begin to come down,
And the wind whistles sharp and the
branches turn brown,
I'll not mind the cold,
though my fingers it numbs,
For it brings the time nearer
when Santa Claus comes.

### December

In December we're happy
Whatever the weather
For Christmas helps people
Be happy together.
A carpet of snow
Covers the ground,
The sweet sound of carols
Is heard all around.
Candles and stars
And Christmas tree lights
Twinkle and glow
In the velvet night.

December
brings us Christmas
With secrets big and small.
And sharingjoys with others;
Oh,
December's
best of all!

*- Jarushan*

## பழமொழிகள் சில

- அள்ளிக் கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்.
- அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.
- கண்டால் ஒரு பேச்சு, காணா விட்டால் ஒரு பேச்சு.
- கறையான் புற்று பாம்புக்கு உதவுகிறது.
- குடும்பத்தில் இளையவனும் கூத்தாடியில் கோமாளியும் ஆகாது.
- குரங்குக்குப் புத்திசொல்லித் தூக்கணாங்குருவி கூண்டு இழந்தது.
- சாட்சிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்.

## தினம் ஒரு குறள்

*களவின்கண் கன்றிய காதல் விளைவின்*
*கண் வீயா விழுமந் தரும்.*

களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் ஒருவனுக்கு உள்ள மிகுந்த விருப்பம், பயன் விளையும் போது தொலையாதத் துன்பத்தைத் தரும்.

## உண்மையான அன்பின் மதிப்பு



குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பல வித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகு தூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், "அரசே உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்' என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளிக்க அளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப்போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்து மாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

*- சுபாங்கன்*






*தம்பி, தங்கைகள் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக...*

## Little Girl's Christmas

It was Christmas Eve, and Little Girl had just hung up her stocking by the fireplace - right where it would be all ready for Santa when he slipped down the chimney. She knew he was coming, because - well, because it was Christmas Eve, and because he always had come to leave gifts for her on all the other Christmas Eves that she could remember, and because she had seen his pictures everywhere down town that afternoon when she was out with Mother.

Still, she wasn't JUST satisfied. 'Way down in her heart she was a little uncertain - you see, when you have never really and truly seen a person with your very own eyes, it's hard to feel as if you exactly believed in him - even though that person always has left beautiful gifts for you every time he has come.

"Oh, he'll come," said Little Girl; "I just know he will be here before morning, but somehow I wish - "

"Well, what do you wish?" said a Tiny Voice close by her - so close that Little Girl fairly jumped when she heard it.

"Why, I wish I could SEE Santa myself. I'd just like to go and see his house and his workshop, and ride in his sleigh, and know Mrs. Santa – it would be such fun, and then I'd KNOW for sure."

"Why don't you go, then?" said Tiny Voice. "It's easy enough. Just try on these Shoes, and take this Light in your hand, and you'll find your way all right."

So Little Girl looked down on the hearth, and there were two cunning little Shoes side by side, and a little Spark of a Light close to them - just as if they were all made out of one of the glowing coals of the wood fire.

*- Keeshan*

## Colouring - 208



### Dear Kids...



Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

***Visit our Web: www.facebook.com/ orupaper***



**Issue 207 Winner**
**Kavinuki - T**



Kavinuki Thevdas



Arushja Linga



Manasvi

## Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.tamilweb.do.am என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பார்ப்பமேன். இத்தளம் Online Game, Music, Stories, worksheet, news சிறுவர் கதைகள் என சிறுவர்களுக்கு பிடித்த பல பயனுள்ள தகவல்களை கொண்டமைந்துள்ளது இந்தத் தளம். வாங்க குட்டீஸ் பழகலாம்..... உங்களுக்குத் தெரிந்த தளங்களையும் சொல்லுங்கள் மற்ற சிறுவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவோம்.

**Web Address : http://tamilweb.do.am/publ/15**

### தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் உங்கள் நிழற்படத்தையும் அனுப்புங்கள்.



அனைவருக்கும் எமது நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்
www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com





அனைவருக்கும் இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்
sarasas
SOUTH INDIAN RESTAURANT
• தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
• உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
• சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
• நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே
* Outdoor catering * Function hall * Party orders
புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது
SARASAS CATERING
We make 30 different Types of Dosa
எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்
630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com
FREE CAR PARKING UPTO 100 CARS
Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம்
கனிந்த நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்கள்!!!
SRI VENILALS
SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES
DESIGNER
LEHNGA
SUITS
DESIGNER
PAVADAI & HALF
SAREES
DESIGNER
SALWAR
SUITS
DESIGNER
COSTUME
JEWELLERY
EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES
Christmas and
Boxing Day Sale !
அனைத்து வித ஆடைகளும்
25%
விலைக் கழிவில்
21/12 முதல் 02/01 வரை
ராசியான கூறைப்புடவைகள் அனைத்து வகையான
சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான உடைகளைத்
தரமாகப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்
Sri Venilals
115-117 Ealing Road
Wembley, Middlesex, HA0 4BP.
Tel: 020 8903 3144
Celebrations By Sri Venilals
99-103 Ealing Road
Wembley, Middlesex, HA0 4BP
Tel: 020 8795 3051
விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!

# நெல்சன் மண்டேலா காட்டிய பாதை



இக்கட்டுரை எழுதும் போது மறைந்த மாமனிதர் நெல்சன் மண்டேலாவின் பூதவுடல் பூரண அரச மரியாதைகளுடன், இறுதிக்கிரிகைகள் நிறைவேற்றப்பட்டு, அவர் பிறந்த மண்ணில் நல்லடக்கம் முடிவடைந்திருக்கும் அவர் உயிருடன் வாழ்ந்த 95 வருடங்களில் பொன்னான இளமைப் பருவமான 27 வருடங்களை தான் பிறந்த மண்ணுக்காகவும், இனத்துக்காகவும், உரிமைக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டு அனுபவித்த சோகக் கதைகள் இன்று பரவலாக பல ஊடகங்களிலும் வெளிவந்துள்ளது. எனவே, அதைத் திரும்பத் திரும்பக் கூறாமல் வேறொரு கோணத்தில் அணுகுவதே எனது நோக்கமாகும்.

27 வருடங்களாக சிறையில் வாடிய இப்பெருமகனை விடுவிக்க, அயராது போராடிய கறுப்பின மக்களோடு, கைகொடுத்த பிற இன மக்களும் உலகின் வல்லரசுகளும், காலம் தாழ்த்தியாவது தமது உறுதியான நடவடிக்கைகளை தென்ஆபிரிக்காவின் நிறவெறி பிடித்த அரசுக்கு எதிராக உண்மையான விசுவாசத்துடன் பிரயோகித்ததின் பலனாகவே நெல்சன் மண்டேலாவின் விடுதலை மட்டுமல்ல, 53 மில்லியனுக்கும் அதிகமான கறுப்பின மக்களுக்கும் விடிவு கிடைத்தது.

பொன் விளையும் பூமியாகிய தென் ஆபிரிக்காவை மட்டுமல்ல நிலவளம், நீர்வளம், கனிவளம், வாசனைத் திரவியங்கள் கிடைக்கும் நாடுகளாலும் பணபலத்தாலும், படை பலத்தாலும் ஆக்கிரமித்து அரசு செய்து சகல வளங்களையும் அடியோடு சுறண்டி எடுத்தபின், தமக்கு எதுவித பாதகமும் மூளைக்கு முன்னர் கௌரவமாக விலகிய வெள்ளை இனம், அவர்கள் விலகிச் சென்ற நாடுகளில் எல்லாம் விதைத்து விட்டுச் சென்ற இனப்பாகுபாடு, இனக்குரோதம் தொடர்ந்தும் களைகட்டி நிற்பதற்கு தென்ஆபிரிக்காவுடன், பாலஸ்தீனம், இலங்கை போன்ற நாடுகள் சிறந்த உதாரணம்.

நெல்சன் மண்டேலாவின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கும் நாடுகளில் இந்தியாவும், இலங்கையும் முந்தி நிற்பது வெட்கத்தோடு தனது இனத்தின் உரிமைக்காக அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிரைத் தியாகம் செய்த திலீபன் என்ற ஈழம் போராளியை எட்டியும் பார்க்க நினைக்காத இந்த நாடுகளின் அரசுகள் மறைந்த மாமனிதர் நெல்சன் மண்டேலாவை புகழின் உச்சியில் வைத்து நீலிக் கண்ணீர் வடிப்பது நாமறிந்த பாடங்களில் ஒன்று.

# வீணாகும் சூட்டைப் பாவித்து வீடுகளை வெப்பமூட்டலாம்

பொதுமக்களால் அன்றாடம் பயன்படுத்தப்படும் தொடரூந்துகள், பேரூந்துகள், ஏறி இறங்கும் படிகள் (Escalators) ஒவ்வொன்றும் இயங்கும் போது, அவை வெளியேற்றும் சூடான காற்று எதுவிதமான பயனுமின்றி வாயு மண்டலத்தை அசுத்தமாக்குவதாக அவதானித்த விஞ்ஞானிகள், இந்தக் கழிவைச் சேகரித்து, மனிதருக்கு பயன்படும் விதத்தில் வீடுகளுக்கு தேவையான வெப்பத்தைத் தரக் கூடிய புதிய பொறிமுறையைக் கையாள ஐரோப்பிய ஒன்றியம் (EU) தீர்மானித்துள்ளது.

இப்பாரிய குறிக்கோளை அமுலாக்கும் வகையில் செல்சியஸ் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்திற்கு 25,000 மில்லியன் யுரோ நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கடந்த மாதம் வெளிவந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. டென்மார்க்கில் ஆல்பேர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் ஆய்வின் படி, வீடுகளுக்குத் தேவைப்படும் வெப்பத்தை விடக் கூடுதலாக வீணாகப் போகும் உஷ்ணக் காற்று அதிகமாகக் காணப்படுவதாக நிரூபித்துள்ளனர்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

இலண்டனில் இயங்கும் மின்சார உப நிலையங்கள், சுரங்கப்பாதை, தொடரூந்துகள், தொழிற்சாலைகள் வெளியேற்றும் சூடான காற்று, இவற்றை விட அன்றாடம் எரிமூட்டப்படும் கழிவுகளிலிருந்து வெளியேறும் உஷ்ணம் அனைத்தையும் தகுந்த முறையில் சேகரித்து பக்குவமாக பயன்படுத்த முடியுமென சுவீடன் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளரும், ஐரோப்பிய ஒன்றியத்தினுள் 50 நகரங்களில் வீடுகளுக்கு வெப்பந்தர புதிய பொறிமுறை தயாராகி விட்டதாக பொறியியலாளர்கள் பூரிப்படைகின்றனர்.

# ஞயம் பட உரை

நயம் என்ற சொல்தான் ஞயம் ஆக மருகி விட்டதாக அறிகிறோம். இதன் பொருள், இன்பம் எனப்படுவதால் கேட்பவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய சொற்களை பிரயோகித்து உரையாடு என்பதே ஔவையாரின் அறிவுரையாக ஞயம் பட உரை என உதித்துள்ளது. உரையாடுதல் மனிதவர்க்கத்தின் அளப்பரிய வரப்பிரசாதம், இயற்கை அளித்த இந்த நன்கொடையை, ஒருவருக்கொருவர் உரையாடும் போது கேட்பவர்க்கு இன்பம் அளிக்கக்கூடிய வகையில் அமைந்துவிட்டால் அதைவிட இன்பம் வேறு எதுவுமிராது என்பதே ஔவையாரின் அன்புக் கட்டளையாகும்.

ஒரு வீட்டின் அங்கத்தவர்களான கணவன், மனைவி, மூத்தவர், இளையவர், சகோதரர், சகோதரியர், குழந்தைகள் ஒருவருக்கொருவர் உரையாடும்போது கனியான சொற்களைக் கையாண்டு கருமங்களை ஆற்றும்போது எத்தனையோ பிரச்சனைகள் உருவாகாமலே தவிர்க்க முடியும். அனேக குடும்பங்களில் உருவாகும் பிரச்சினைகள் ஒருவர் மீது மற்றவர் பிரயோகிக்கும் வார்த்தைகளின் கடுமையான தொனிதான் மூலகாரணமாக அமைந்துள்ளதாக மனோதத்துவ நிபுணர்கள் தமது ஆய்வில் நிரூபித்துள்ளனர். இந்த உண்மையை எப்போதோ உணர்ந்து கொண்ட ஔவையார் ஞயம்பட உரை என ஞாபகப்படுத்தியுள்ளார்.

மேற்கு நாடுகளிலும் சரி, கிழக்கு நாடுகளிலும் சரி, ஒலி, ஒளி பரப்பாகும் நிகழ்ச்சிகளில் அதிகபட்சமான ஆதரவைப் பெறும் நிகழ்ச்சிகளாக நகைச்சுவை நிரம்பிய நாடகங்களையும், சினிமா காட்சிகளையும் தான் கூடியளவு ரசிகர்கள் விரும்புவதாக (TRP) தரவுகள் கிடைக்கின்றன. ஏனெனில் இந்நிகழ்ச்சிகளில் கையாளப்படும் இன்பம் தரக்கூடிய உரையாடல் என்பதே உண்மை.

மக்கள் அதிகமாகக்கூடும் வரவேற்பு நிகழ்ச்சிகளிலும், பிரசாரக் கூட்டங்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும், அதிக கரகோஷசத்தை பெறும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால், அதில் பங்குபற்றும் பேச்சாளர்கள், நடிகர்கள், கலைஞர்கள் கையாளும் இனிமையான கனிவான உரைகள் தான் என்பதே நாம் கண்டும், கேட்டும் அறிந்த உண்மை. எனவே, எமக்கு எப்போது சந்தர்ப்பம் கிடைத்தாலும் ஞயம்பட உரைப்பது நன்மையே தரும்.









# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் : ஜனநாயகம் கிலோ என்ன விலை ?



உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஜெர்மனியில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் என்ன முடிவை அறிவிக்கப்போகிறது என்று ஆவலாகப் பார்த்துக்கொண்டிருந்த சமகாலத்தில் அமெரிக்காவில் நாடுகடந்த அரசு கூடி தமக்குள் பதவிகளை பங்கிட்டுக்கொண்டிருந்தது. அவர்களது பதவிகளை அவர்கள் பங்கிட்டு கொள்ளட்டும். இதற்குள் நாம் தலையிடுவது அறமல்ல. இருந்தாலும், இன அழிப்பிற்கு நீதி கேட்கப் போவதாக புறப்பட்ட ஒரு அமைப்பு ஒரு அனைத்துலக கவனத்தை ஈர்த்து தமிழர் தலைவிதியை மாற்றப்போகும் ஒரு தீர்ப்பு குறித்து விவாதித்து கொண்டிருந்த நாட்களில் அந்த தீர்ப்பாயத்துடன் இணைந்து ஆதாரங்களை சமர்ப்பித்து நீதிக்காக போராடாமல் கதிரைகளுக்காக 'போராடு'கிறதே என்ற கவலைதான் இதை எழுத வைத்தது.

**'நாடு கடந்த அரசு' என்ற பெயருக்கு பின்னால் சாத்தியமான எதிர்ப்பு அரசியல் வடிவங்கள் இருக்கிறது என்று நாம் இன்னும் நம்புகிறோம்.**

நாடு கடந்த அரசு. இந்த பெயரை கேட்டாலே இந்த பத்தியைத் தொடர்ந்து யாரும் வாசிக்க மாட்டார்கள் என்பதே இன்றைய யதார்த்தம். இருந்தாலும் வரலாற்றை பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக இந்த சிறு பதிவு.

நாடுகடந்த அரசிற்காக தேர்தல் அறிவிக்கப்பட்டதும், தேர்தல் நடக்காமலேயே வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டதும், தற்போது கூடி கதிரைகளை பங்கிட்டு கொண்டதும் இங்கு பலருக்கு தெரியாது. ஏன் எமக்கு கூட தெரியாது. என்னதான் நடக்கிறது என்று விசாரித்த போது பலர், 'என்ன சிவாஜி செத்திட்டாரா?' என்ற ரேஞ்சிற்கு வியப்பை வெளியிட்டதுதான் மிச்சம்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள, நீங்கள் திரிஷா குளித்த வீடியோவையும், 'தேங்காய் போடாமல் புட்டு அவிப்பது எப்படி?' என்ற தகவலையும், கூடவே சில அரசியல் செய்திகளையும் 'பிட்' டாக போடும் சில இணையங்களை கண்வெட்டாமல் பார்த்து கொண்டிருக்க பயிற்சி எடுக்க வேண்டும். ஏனென்றால் மற்றவர்களுக்கு இந்த தகவல்கள் தெரிய வாய்ப்பில்லை. இருந்தாலும் சேகரித்த தகவல்களை வைத்து அலசுவது நமது கடமை.

### ◆ என்னதான் நடந்தது?

தேர்தலில் மக்கள் வாக்களிக்காமல் புறக்கணித்த வரலாறு உலகெங்கும் உண்டு. தேர்தல் அறிவித்த பின்பும் போட்டியிட ஆள் வராத வரலாற்று சாதனையை நாடுகடந்த அரசு தட்டிச் சென்றிருக்கிறது.

விளைவு 'ஜனநாயகப்படி' வெற்றியாளர்களை அவர்களே அறிவித்து விட்டார்கள். கேட்கும் உங்களுக்கே புல்லரித்தால் இதையெல்லாம் தேடித்தேடி கேட்ட நமக்கு எப்படி இருந்திருக்கும். பல நாடுகளில் பலவந்தமாக, பணம் கொடுத்தெல்லாம் வேட்பாளர்களை களமிறக்கும் நிகழ்வுகள் நடந்ததாக சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கும் மக்கள் மசியவில்லை. அப்படி மக்களுக்கு இந்த அமைப்பின் மீது என்னதான் கொலைவெறி?

தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும் கதை எமக்கு தெரியும். இங்கு வேட்பாளர்களுக்கு அது நடந்திருக்கிறது. பல சாதனைகளை படைத்து தமிழீழ விடுதலையை சாத்தியப்படுத்தும் என்று நம்பப்பட்ட ஒரு அமைப்பு இன்று வேறொரு கோணத்தில் பல கின்னஸ் சாதனைகளை படைக்க புறப்பட்டிருக்கிறது. இப்பவே கண்ணைக் கட்டுது. இனி என்னவெல்லாம் சாதனை புரியப்போகிறார்களோ தெரியாது.

சரி எந்த இடத்தில் இந்த அமைப்பு சறுக்கியது என்று பார்க்கலாம் என்றால் அது ஒன்றால்ல இரண்டல்ல பல்லாயிரம் பக்கங்களில் எழுதப்பட வேண்டிய வரலாறு அது. அந்த அவலத்தை உங்கள் மீது நாம் திணிக்க விரும்பவில்லை.

நாடுகடந்த அரசு தன்னை சுயவிமர்சனம் செய்யாததும் ஆரோக்கியமான விமர்சனங்களை உள்வாங்கி தம்மை மீளமைத்துக் கொள்ளாததாலும் வந்த வினை இது. வேட்பாளர்கள் களமிறங்க மறுத்த அடுத்த கணமே மக்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்பதும் தெரிந்து விட்டது. ஒரு கட்டமைப்புக்கு ஒட்டு மொத்தமாக மக்கள் சேர்ந்து அடித்த சாவுமணி அது. மறுகணமே நாடுகடந்த அரசை கலைத்து விட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். யாராவது அதை எடுத்து நடத்த வருமாறும் பகிரங்க அழைப்பு விடுத்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது எல்லாம் தலைகீழ். மீண்டும் அதே பல்லவி . மெகாசீரியலின் அடுத்த காட்சிகள்.

இதற்கு பின்பும் அவர்களது அறிக்கைகளில் இது 'ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி, மக்களின் ஏகோபித்த ஆதரவு' என்று உங்களுக்கு வாந்திபேதியுடன் கூடிய மாரடைப்பு வரக்கூடிய அனைத்து அறிகுறிகளும் உள்ளன. எனவே அவற்றை வாசிப்பது இனி உங்கள் பொறுப்பு.

உண்மையில் மே 18 இற்கு பின்னர் திசை தெரியாமல் நின்ற இனத்திற்கு நம்பிக்கை வெளிச்சம் பாய்ச்சிய ஒரு கட்டமைப்பு நாடு கடந்த அரசு என்றால் அது மிகையல்ல. பலர் நம்பிக்கையுடன் அதை கட்டியெழுப்ப களமிறங்கினார்கள் என்பதும் உண்மைதான். இந்த கட்டமைப்பை உடைக்க பல சதிகள் நடந்ததும் உண்மைதான். ஆனால் அது ஒரு சூழலின் விளைவு. ஒரு இனத்தின் பேரழிவுக்கு பின்பு நடந்த குழப்பங்களினதும் உளவியற் சிக்கல்களினதும் விளைவு.

இந்த குழப்பமான சூழலினூடாகத்தான் தமது பயணம் இருக்கும் என்பதை தெரிந்து தம்மை தயார் படுத்தியிருக்க வேண்டும். ஆனால் மாறாக வெளிப்படைத்தன்மையற்ற கட்டப்பஞ்சாயத்து, மாபியா கும்பல்களைப் போல் உள்முகமாக சுருண்டு மடிந்ததன் விளைவுதான் மக்களிடமிருந்து அன்னியப்பட்டு இன்று ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்தக்கூட முடியாத நிலைக்கு தள்ளப்படும் அவலம் நிகழ்ந்திருக்கிறது.

பலர் திட்டமிட்டே இந்த அமைப்பை உடைக்க முற்பட்டார்கள் என்பதற்காக மக்களது சந்தேகங்களிற்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்காமல் நழுவ முடியாது. உதரணத்திற்கு ஒன்று.

கே.பி என்பவர் இந்த கட்டமைப்பை நிறுவ முயற்சித்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். அனால் அவர் இனத்தை கூண்டோடு காட்டிக் கொடுத்தவர் என்பது பிற்பாடு அனைவருக்கும் தெரிந்தும் விட்டது. சிலர் குழப்புவதற்காக இந்த விடயத்தை தூக்கி பிடிக்கிறார்கள் என்பதற்காக மக்களுக்கு பதில் சொல்லாமல் தப்ப முடியாது. 'எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்' என்ற கள யதார்த்த்தில் வளர்ந்த மக்களுக்கு இதை தெளிவு படுத்த வேண்டும்.

மாறாக நாடுகடந்த அரசின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்று நம்பப்படுகிறவர்கள் வெளிப்படையாகவே கேபியை ஆதரிப்பதும் நாடு கடந்த அரசில் அங்கம் வகித்ததும் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பில் இணைந்தவர்களே இன்னும் களி தின்னும்போது கேபியின் சுதந்திரமான நடமாட்டம் மக்களிடம் ஒரு தெளிவான சிந்தனையை கொடுத்துவிட்டது. எனவே மக்களை பல நாடுகடந்த அரசின் உறுப்பினர்கள் முட்டாளாக்க முற்பட்டார்கள். விளைவு தேர்தல்கூட நடத்த முடியாமல் தூக்கியெறியும் நிலைக்கு மக்களால் தள்ளப்பட்டு விட்டது நாடுகடந்த அரசு.

இது ஒரு உதாரணம். இப்படி வெளிப்படைத்தன்மைக்கும் ஜனநாயகத்திற்கும் ஊறு விளைவிக்கும் பல நூறு காரணங்களை நாடு கடந்த அரசின் கட்டமைப்புக்குள் மக்கள் கண்டடைந்ததன் விளைவுதான் இந்த இழி நிலை.

**தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும் கதை எமக்கு தெரியும். இங்கு வேட்பாளர்களுக்கு அது நடந்திருக்கிறது. பல சாதனைகளை படைத்து தமிழீழ விடுதலையை சாத்தியப்படுத்தும் என்று நம்பப்பட்ட ஒரு அமைப்பு இன்று வேறொரு கோணத்தில் பல கின்னஸ் சாதனைகளை படைக்க புறப்பட்டிருக்கிறது. இப்பவே கண்ணைக் கட்டுது. இனி என்னவெல்லாம் சாதனை புரியப்போகிறார்களோ தெரியாது.**

இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. தாங்களே தங்களுக்குள் உருவாக்கிய அவையை கலைத்துவிட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். யாராவது வெளித்தரப்பின் ஊடாக மறுதேர்தலை நடத்தி ஜனநாயகத்தையும் வெளிப்படைத்தன்மையையும் நிலை நிறுத்த வேண்டும்.

ஏனென்றால் 'நாடு கடந்த அரசு' என்ற பெயருக்கு பின்னால் சாத்தியமான எதிர்ப்பு அரசியல் வடிவங்கள் இருக்கிறது என்று நாம் இன்னும் நம்புகிறோம். தமிழீழ விடுதலை தொடர்பான சாத்தியமான பொறிமுறைகளை நாடுகடந்த அரசினூடாக உருவாக்கலாம் என்றும் நம்புகிறோம்.

ஆனால் அதற்கு அந்த அமைப்பு வெளிப்படைத்தன்மையையும் ஜனநாயகத்தையும் பேண வேண்டும். அல்லது தமிழின வரலாற்றில் காணாமல்போன அமைப்புக்களின் பட்டியலில் விரைவில் அது சேரும்.

*- நன்றி : ஈழம் ஈ நியூஸ்*

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட...

Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# சிவசேனை - விமர்சனம்



ராகம் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பாக N.ராதா தயாரித்து இயக்கியிருக்கும் திரைப் படம் 'சிவசேனை', இத்திரைப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு கடந்த 6ம் திகதி இடம்பெற்றது. தயாரிப்பாளர் - இயக்குனர் N.ராதா, கிரியேட்டிவ்டைரக்டர் ஹக்கீம், நடிகை இந்து மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன பங்கேற்பாளர் செல்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ◆ சிவசேனையின் கதை

வெளி நாட்டிற்குச் சென்று பொருளீட்டுவது முக்கியமல்ல, ஈட்டிய பொருளைப் பாதுகாப் பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என் னும் கருத்தைச் சொல்கிறது 'சிவசேனை'.

படத்தின் தலைப்பிற்கேற்ற மாதிரியே கதா நாயகன் சிவாவும் அவரது சேனையாக அவரது நண்பர்களும் சேர்ந்து தங்களைச் சுற்றி நடக்கும் களவு மற்றும் அநியாயங் களை எப்படி முறியடிக்கிறார்கள், சம்பந்தப்பட் டவர்களை எப்படி அழிக்கிறார்கள் என்பதை குடும்பப் பாங்கான கதையுடன் கொஞ்சம் சஸ் பென்ஸ் திரில்லையும் சேர்த்து விறுவிறுப்பாகக் கொடுத்திருக்கிறார் இயக்குனர்.

### ◆ நடிகர்கள்

முழுக்க முழுக்க ஐரோப்பா குறிப்பாக லண்டன் நகரிலேயே படமாக்கப்பட்ட இந்தப் படத்தில் நடித்த கதாநாயகன் சுஜித், கதாநாயகி தர்ஷியா, இன்னொரு கதாநாயகி அனுசுயா ஆகியோருடன் ஜூட் தர்ஷன், அகிலா, இந்து, ஜான்சன், ராஜமோகன், ஜெய், ஜூதன் ஸ்ரீ, கிருஷாந்தி, ரோகினி ஆகியோரும் நடித்திருக்கி றார்கள். இவர்களுடன் சிவ சேனையின் தயா ரிப்பாளர் மற்றும் இயக்குனர் என்.ராதாவும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

படத்தில் நடித்த அனைவரும் புதுமுகங்கள் மட்டுமல்லாது அவர்கள் அனைவருமே புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்களுக்குத் தமிழ்ப்படங்களைப் போட்டுக் காட்டியும், ஒத்திகை பார்த்தும் நடிப்புப் பயிற்சி அளித்துள்ளார் இயக்குனர் ராதா.

### ◆ பாடல்கள் மற்றும் இசை

படத்தில் டூயட் பாடல் என்று எதுவும் இல்லையெனினும், சூழ் நிலைக்கேற்றவாறு ஐந்து பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. தென்றல் சானிய, இளங்கவி, பிரபாளினி பிரபாகரன், ஜூதன் ஸ்ரீ ஆகிய புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தமிழ்க் கவிஞர்களும் இயக்குனர் நாகரத்தினம் ராதாவும் பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

பாடல்களைப் பாடியவர்களும் வெளி நாடு வாழ்த்தமிழ்ப் பாடகர்களே! பாடல்களுக்கான இசையை வர்ணன் ஜி சேகரன் (4 பாடல்கள்) மற்றும் பிரபாளினி பிரபாகரன் (1 பாடல்) அமைக்க விறுவிறுப்பான திரைக்கதைக்கு பின்னணி இசையமைத்திருக்கிறார் நம்ம ஊர் இசையமைப்பாளர் தினா.

### ◆ இயக்குனர் குறிப்பு

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் ஒருவரான N.ராதா என்று அழைக்கப்படும் நாகரத்தினம் ராதா ஐரோப்பிய நாடுகளில் ஒளிபரப்பாகும் தீபம் தொலைக்காட்சியில் சித்ரா என்கிற தொலைக்காட்சித் தொடரை 176 எபிசோடுகளுக்கும் மேலாக எழுதி இயக்கி தயாரித்து அனுபவம் பெற்றவர்.

சிவ சேனையைப் பற்றி இயக்குனர் என் ராதா கூறும் போது, "இன்னும் வெளிநாடு வாழ் தமி ழர்களுக்கென முழு நேரத்தொழிலாக திரைப் படத்துறை ஏதும் அமைக்கப்படாத நிலையில், எங்கள் வாழ்வாதாரத்திற்காக வேறு ஏதேனும் பணிகளில் இருந்து கொண்டே திரைப்படத் துறையின் மீது கொண்ட ஆர்வத்தால் வார இறுதி நாட்கள், விடுமுறை தினங்கள் என்று நடிகர்களையும் தொழில் நுட்பக் கலைஞர் களையும் ஒருங்கிணைத்து, மைனஸ் 3 டிகிரி தட்பவெட்ப நிலையிலும் பெரும் சிரமங்களுக் கிடையில் இந்தப் படத்தினைத் தயாரித்து இயக்கியிருக்கிறோம்.

நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் தமிழ் சினிமாவின் முன் நாங்கள் ஒன்று மேயில்லைதான் எனினும், நல்ல ஒரு முதல் அடி எடுத்து வைத்த திருப்தி எங்களுக்கு இருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியினைப் பயன் படுத்தி எப்படியெல்லாம் களவு செய்கிறார்கள் என்பதைப் பற்றிய விழிப்புணர்ச்சி படமாக



சிவ சேனை வளர்ந்திருக்கிறது இது போன்ற களவுகள் உலக முழுவதும் நடை பெற்றுக் கொண்டு தான் இருக்கிறது.

**"நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் தமிழ்சினிமாவின் முன் நாங்கள் ஒன்றுமேயில்லைதான் எனினும், நல்ல ஒரு முதல் அடி எடுத்து வைத்த திருப்தி எங்களுக்கு இருக்கிறது"**

இந்தப் படத்தினை ஐங்கரன் இண்டெர் நேஷனல் நிறுவனம் வரும் ஜனவரி 31 ஆம் திகதி இந்தியா உட்பட உலகம் முழுவதும் வெளி யிட இருக்கிறார்கள்" என்றார்.

FRIDGE FREEZER DIRECT
5% OFF OF ANY ORDER
OFFER ENDS 31st JANUARY 2014



REFRIGERATIONS

Get 5% off your order when you quote the code above. Call now on 08456800695 or Email sales@fridgefreezerdirect.co.uk




Group Holiday & Tour Services - Tours for 2014
We would like to take this opportunity to thank all our guests from over the last 30 years and to wish you all a Happy New Year!

March 2014
Bangkok ,Chaing Mai, Malayasi & Bali (£1999)

March 2014
Vietnam,Cambodia & YANGON (£2399.00)

April 19th 2014
Bulb Fields Holland Two Nights £245.00

4th April Garabandal 3 nights £390.00

May 2014
3 days 2 nights Landsend, cornwall outing 2 nights half board £270.00

May 2014 (24th to 26th)
one day trip to Benneux, Belgium £60.00

July 2014
Lourdes 24th - 29th 3 nights (£280) (BY Coach)

9th June 2014:
China Beijing & Xian

Sep/Nov2014
Main Jothylinga Program 18 Days £2450.00

September 19th 2014
North India (£1450)Varnasi

7th - 10th Sep 2014 (by air)
Lourdes (£360) 3 nights

May SRI LANKA 10 Days Habarana , Sigiriya, Polonaruwa Minneriya National Park, Dumbulla cave Temple, Temple of tooth,Yala National Park

A.E.Joseph 62, Canadian Avenue, Catford, London, SE6 3BP.
Tel/Fax: 020 8697 1608 Mobile: 07940782282 Email: aejoseph90@hotmail.com

Lady Care Worker Wanted

An un-well South Asian lady requires female live-in carer, preferably with nursing or health care work experience, who can be of assistance at her home in West London.


Domestic cores include cooking (totally vegetarian food), washing, cleaning, ironing, and shopping.

A person who can drive a car and is computer literate would be advantageous. The carer could possibly go out during day time for few hours but should stay at home at night time every day of the week. The carer should be a vegetarian, non-smoker, and teetotaller.

Any interested female should contact Ajitha at mohanaji@ymail.com or

Contact Us - 07591540816

# யஸ்வந்த் சின்ஹா ஏன் தமிழீழம் வெகு தொலைவில் இல்லை என்றார்?



யஸ்வந்த் சிங்



யஸ்வந்த் சின்ஹா

**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

சென்னையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாரதிய ஜனதா கட்சியின் கூட்டமொன்றில் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா, தமிழீழம் அமைவது வெகு தூரத்தில் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தாராம். இப்படி ஒரு செய்தி 14-12-2013இல் இருந்து அடிபடுகின்றது. இதைப் பார்த்தவுடன் ஈழ விடிவிற்காக ஏங்கிக் கொண்டிருப்பவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

மேற்படி செய்தி டிசம்பர் 14-ம் திகதி ஒரு ஆங்கில இணையத் தளத்தில் வெளிவந்திருந்தது. இதைத் தொடர்ந்து பல இணையத் தளங்களில் அது வந்தது. பின்னர் அதன் தமிழாக்கம் ஒரு தமிழ் இணையத் தளத்தில் வந்தது. வழமை போல பல இணையத் தளங்கள் அதை பிரதி பண்ணி விட்டன. வாழ்க கொப்பி அண்ட் பேஸ்ட். பல சமூக வலைத்தளங்களில் இந்தச் செய்தி பகிரப்பட்டது. பல தமிழர்கள் இந்தச் செய்தியைப் பார்த்து தமிழீழப் போராட்டத்திற்கு இது ஒரு பெரு வெற்றி என்றும் கூறினார்கள்.

இந்தச் செய்தியின் மூலத்தைத் தேடிப் போவது நதி மூலத்தைத் தேடிப்போவது போல இருந்தது. ஒரு இணையத்தளம் செய்தி மூலம் டெக்கான் ஹேரால்ட் எனச் செய்தியின் அடியில் போட்டிருந்தது. பொதுவாக பல இணையத் தளங்கள் இப்படிச் செய்வதில்லை. ஏதோ தாமே நேரில் நின்று பார்த்து அறிக்கை கொடுப்பது போல எழுதுவார்கள்.

ஜஸ்வந்த் சிங் புதன்கிழமை இப்படித் தெரிவித்திருந்தார் என்று இணையத் தளங்கள் செய்தி போட்டிருந்தன. அது எந்தப் புதன் கிழமை என்பது பிள்ளையாருக்கு நாளைக்கு திருமணம் என்பது போல். அச்சு ஊடகங்கள் செய்தி வெளியிடும் போது செய்தித் தலைப்பின் கீழ் திகதியையும் செய்தி கிடைத்த இடத்தையும் முதல் போடுவார்கள். செய்திக்குள் நேற்று சொன்னார் என்று இருந்தால் நீங்கள் வாசிக்கும் திகதிக்கு முதல் நாள் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. செய்தித் தலைப்பின் கீழ் உள்ள திகதிக்கு முதல் நாள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இது அச்சு ஊடகங்களில் ஒரு அடிப்படை விதி. ஜஸ்வந்த் சிங் சொன்ன செய்தியை மொழி பெயர்த்து வெளிவிட்ட ஊடகங்கள் செய்தி மூலத்தின் திகதியை வெளிவிடவில்லை. சில இணையத் தளங்கள் ஜஸ்வந்த் சிங் என்றும் குறிப்பிட்டிருந்தன. சில ஜஸ்வந்த் சின்ஹா என்றன.

முதலில் ஒன்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஜஸ்வந் சிங் என்பதும் ஜஸ்வந் சின்ஹா என்பதும் இரு வேறு நபர்கள். அடல் பிஹாரி வாஜ்பேயின் ஆட்சிக்காலத்தில் 1998 டிசம்பரிலிருந்த 2002 ஜூன் வரை இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் ஜஸ்வந் சிங். 2002 ஜூலையிலிருந்த 2004 மே மாதம் வரை இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் ஜஸ்வந் சின்ஹா. டெக்கான் ஹெரால்டில் தேடிப்போனால் சென்னையில் ஒரு திருமண மண்டபத்தில் 2013 ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாம் திகதி புதன்கிழமை நடந்த கூட்டத்தில் இப்படிப் பேசியிருந்தார் யஸ்வந்த் சிங்ஹா. தமிழ் ஈழம் தொலைவில் இல்லை எனக் கூறியவர் இரண்டாமவரான யஸ்வந்த் சிங்ஹா.

பல பழைய தமிழ்ப்பாடல்களை மீள்கலவை (ரீமிக்ஸ்) என்று சொல்லி திரும்பவும் தமிழ்த் திரைப்படங்களில் இப்போது வெளிவிடுகின்றார்கள். அரசியலிலும் பழைய செய்திகளை மீள் பதிவு செய்து விடுகின்றார்களா? ஏப்ரல் மாதம் யஸ்வந்த் சின்ஹா ஆற்றிய உரை மீண்டும் இப்போது வெளிவிடுவது ஏன்? அதுவும் ஏதோ நேற்றுக் கூறிய மாதிரி செய்திகள் விடுவது ஏன்?

யஸ்வந்த் சின்ஹா இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போதுதான் விடுதலைப் புலிகளிடம் ரணில் விக்கிரமசிங்க இடைக்காலத் தன்னாட்சி சபையை வழங்கப் போகிறார் என்று கொழும்பிற்கு அப்போது இந்தியத் தூதுவராக இருந்த நிருபாமா ராவ் துரிதமாகச் செயற்பட்டு ரணிலின் அமைச்சரவையைக் கலைத்தார். சந்திரிகாவையும் ஜேவிபியையும் இணைத்து கூட்டணி அமைக்கப்பட்டது. இதற்கு முன்னின்று உழைத்தவர் நிருபாமா என்று சொல்லப்பட்டது. 2004இல் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையையே தமிழர்களுக்கு கொடுக்கக் கூடாது என வரிந்து கட்டிக் கொண்டு நின்றவர்கள் இப்போது தமிழீழம் பற்றிக் கதைத்ததை மீண்டும் செய்திப் படுத்துவது ஏன்?

### ◆ தேர்தல் வெகு தொலைவில் இல்லை

இந்தியப் பாராளுமன்றத்தின் மக்களவைக்கான தேர்தல் வெகு தொலைவில் இல்லை என்பதால்தான் இப்படிப் பட்ட செய்திகள் மீளப் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இது ஒரு முன்னோட்டம் மட்டுமே. இன்னும் பல இணைய வெளித் தாக்குதல்கள் தமிழர்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் நடத்தப் படலாம். இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தலில் பாரத ஜனதாக் கட்சியினரின் தலைமை அமைச்சர் வேட்பாளரான நரேந்திர மோடி தனக்கு ஆதரவான பிரச்சாரத்திற்கு என ஓர் இணைய வெளிப்படையை உருவாக்கியுள்ளார்.

இருபதிற்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட தகவற் தொழில் நுட்பம் படித்த இளைஞர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளனர். இணைய வெளி இந்துக்கள் அதாவது சைபர் ஹண்டூஸ் என்றழைக்கப்படும் இவர்கள் சமூக வலைத் தளங்களான டுவிட்டர் பேஸ்புக் மூலம் திரட்டப் படுகின்றனர். இவர்கள் மாதம் ஒரு முறை ஒன்று கூடி அடுத்த தேர்தலில் செய்ய வேண்டியவை இந்துத்துவக் கொள்கையை எப்படி நிலை நிறுத்துதல், இந்தியாவின் தற்போதைய நிலைமை, இந்தியாவின் எதிர்காலம், போன்றவற்றைப்பற்றி கலந்து உரையாடுகின்றார்கள். உள்ளூரிலும் இவர்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள்.

இணைய வெளி இந்துக்கள் பாரதிய ஜனதாக் கட்சி சார்பாகச் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் குஜராத்தில் மோடியின் ஆட்சியைப் பற்றி மிகைப்படுத்தப் பட்ட தகவல்களைப்பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். மோடியின் பொதுமக்கள் தொடர்புக் கட்டமைப்பு என்றும் உறங்குவதில்லை அது தேர்தல் நெருங்க நெருங்க மிகவும் அதிகமாகச் செயற்படுகின்றது என்பதை காங்கிரசுக் கட்சியினரும் உணர்ந்துள்ளனர்.

இமயமலையை ஒட்டிய உத்தரகாண்ட் மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கி இருந்த பதினையாயிரம் குஜராத்தியர்களை மோடி போய் மீட்டுக் கொண்டு வந்தார் என்ற பொய்ச் செய்தி கூட திட்டமிடப்பட்டுப் பரவ விடப்பட்டது. ஆனால் இந்தியத் தேர்தலில் பொய்யான செய்திகள் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் என்பதை 2009-ம் ஆண்டு நடந்த தேர்தலில் கருணாநிதியின் உண்ணாவிரத நாடகத்தின் மூலம் நாம் நன்கு அறிந்து கொண்டோம். பாரதிய ஜனதாக் கட்சியினரும் தமிழர்களை நோக்கி பல உணர்ச்சி மிக்க பொய்ச் செய்திகளை பரப்பலாம்.

2013 ஏப்ரல் மாதம் சென்னையில் உரையாற்றிய யஸ்வந்த் சின்ஹா தனிய ஈழத்துடன் மட்டும் நின்று விடவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காங்கிரசுக் கட்சியின் மேலும் இரு பலவீன மையங்களான கச்சதிவையும் மீனவர் பிரச்சனையையும் பற்றியும் கருத்துத் தெரிவித்திருந்தார். கச்சதீவை இந்தியா மீட்க வேணும் என்றார். "கச்சதீவை நாம் மீளப் பெற்றால் எமது மீனவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். இதன் மூலம் இந்தியக் கடற்பரப்பை நாங்கள் கட்டுப்படுத்த முடியும்" இப்படிப்பட்ட வாசகங்களை இவர்கள் தமிழ் நாட்டில் மட்டும்தான் கூறுவார்கள். ஆனால் இந்துத்துவாக் கொள்கைப்படி சிங்களமும் தமிழும் சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்த மொழிகள். இரண்டையும் நாம் எம் பிள்ளைகள் போல் பார்க்க வேண்டும். தமிழர்கள் இராவணனின் வழித்தோன்றல்கள். சிங்களவர் இராமருக்கு உதவிய வானரங்களின் வழித் தோன்றல்கள்.

> **நெடுமாறன் ஐயா போல் ஒருவர் இந்தியாவின் உள்த்துறை அமைச்சராகவும் வைக்கோ ஐயா போன்ற ஒருவர் இந்திய வெளி நாட்டுத் துறை அமைச்சராகவும் தோழர் சீமான் அல்லது தோழர் திருமுருகன் காந்தி போன்ற ஒருவர் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் வந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் தான் தமிழர்களுக்கு சார்ப்பாக் இந்தியா செயற்படும். அதுவரை இந்திய அள்ளி வைப்புக்கள் தொடரும்.**

சென்னைக்கு 2013 ஏப்ரலில் பயணம் மேற்கொண்ட யஸ்வந்த் சின்ஹா தனி ஈழத்துடன் நிற்கவில்லை. இலங்கை தொடர்பாக பாரதிய ஜனதாக் கட்சி தனது கொள்கையை மாற்றும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் கட்சியின் உயர் பீடம் கூடி இது வரை எந்த முடிவும் எடுக்கவில்லை. ஈழம் தொலைவில் இல்லை என்று சொல்வதில் இருந்து தெரிவது தேர்தல் தொலைவில் இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. நெடு மாறன் ஐயா போல் ஒருவர் இந்தியாவின் உள்த்துறை அமைச்சராகவும் வைக்கோ ஐயா போன்ற ஒருவர் இந்திய வெளிநாட்டுத் துறை அமைச்சராகவும் தோழர் சீமான் அல்லது தோழர் திருமுருகன் காந்தி போன்ற ஒருவர் இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் வந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் தான் தமிழர்களுக்கு சார்ப்பாக் இந்தியா செயற்படும். அது வரை இந்திய அள்ளி வைப்புக்கள் தொடரும்.

2014இல் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்து அதில் சுப்பிர மணிய சுவாமி என்னும் தமிழின விரோதி வெளிநாட்டமைச்சில் ஏதாவது பதவி பெற்றால் ஈழத்தில் தமிழர்களை இந்தியா முற்றாக அழித்துவிடும்.

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து SKY சனல்களும் £ 200 இருந்து

079 4715 9598 - 074 2472 6790

KATPY SATELLITE கற்பி சட்ரலைற்

Satellite & Communication Experts, Satellite Dishes, Satellite Receivers, New Installation, Troubleshooting, Upgrades

Special Offer £100

சட்டலைட் திருத்த வேலைகள் சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெற் தொலைக்காட்சி (IP Tv) பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்

சகலவிதமான சட்டலைட் தொலைக்காட்சி இணைப்புக்களையும் சட்டலைட் ரிசீவர்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# எந்த யதார்த்தங்களாலும் இலட்சியத் தீ அணையாது

பாகம் 144

“யதார்த்தங்களை கணக்கிலெடுத்து இலட்சியங்கள் அமைந்தால் பாதிப்புக்கள் குறையும்!”

மேற்கண்ட வசனத்தை சமீபத்தில் நமது வடமாகாண முதலமைச்சர் கூறியிருக்கிறார். நமது தமிழீழ இலட்சியத்திற்கும் இன்றைய யதார்த்த நிலைக்குமிடையிலுள்ள இடைவெளியை நன்கு கணக்கிட்டு அதற்கேற்ப எமது இலட்சியத்தில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்பது அவரது வாதம். அதற்கு உறுதுணையாக “மாற்றமொன்றே இந்த மாற்றமுறும் மாநிலத்தில் மாறாத ஒன்று” என்னும் புத்தரின் வார்த்தைகளையும் மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆக, நாம் யதார்த்தைப் புரிந்துகொண்டு எமது இலட்சியத்திலிருந்து மாறித்தானாக வேண்டுமென்றாகிறது. எம்மைப் பொறுத்த அளவில் இது எந்த அளவுக்கு யதார்த்தமானது என்பது வேறு விடயம். எனினும் நன்கு எழுதி வாசிக்கப்பட்ட முதலமைச்சரின் உரையிலுள்ள அவரது தனிப்பட்ட கருத்துக்கள் தெளிவற்றதாகவே காணப்படுகின்றன.

***தந்தை செல்வா தனது சமஷ்டிக் கோட்பாட்டை முன்வைத்தபோது அதுவும் யதார்த்தத்திற்குப் புறம்பானதாகவே அன்றைய காலகட்டத்தில் பல புத்திஜீவிகளாலும் இடதுசாரி முற்போக்குச் சிந்தனையாளர்களாலும் கருதப்பட்டது.*** அப்படியிருந்தும், வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஒருபடி மேலே சென்று தனித் தமிழீழத்தை வலியுறுத்தியது. சட்டிக்குள் இருந்து அடுப்பிற்குள் விழுந்ததைப் போல ஓர் மிதவாதப் பிரிவினை வாதத்திற்குள்ளிருந்து ஆயுதவழித் தீவிரவாதப் பிரிவினைப் போராட்டத்திற்குள் தமிழினம் தள்ளப்பட்டது. ஆனாலும், இந்தியப் படை எம் மண்ணில் காலடி வைக்கும்வரை எமது இலட்சியத்தின் யதார்த்தப் போக்கு நேரானதாகவே இருந்தது. அதன் பின்னரும் பலபடிகள் முன்னேறித்தான் சென்றோம். நாம் விட்ட சில தவறுகளால் இந்தியா உட்படச் சர்வதேசத்தின் நெருக்குதல்களுக்குள்ளானோம். நமது இலட்சியம் படிப்படியாகப் பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கியது. லட்சியம் பின்னடைவைச் சந்தித்ததற்குரிய காரணம் லட்சியத்தின் குறைபாடல்ல, இலட்சியத்தை அடைவதற்காகப் பாவிக்கப்பட்ட மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும்தான். ***உபாயங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் இன்றுவரை எமது லட்சியம் அழிந்து விடாமல் நிலைத்து நிற்கிறது.*** இன்னும் சொல்லப் போனால் அது முன்பைவிட மேலும் வீறுகொண்டு கிட்டத்தட்ட எழுகோடிப் பேர் கொண்ட மொத்தத் தமிழர் தேசியத்தினதும் உயிர் மூச்சாக உயிர்ப்போடு நிற்கிறது. இதனையாரும் மறுப்பதற்கில்லை. இதுதான் தமிழர் தேசியத்தின் இன்றைய யதார்த்த நிலை.

இந்த யதார்த்திற்குப் புறம்பே இலங்கையரசின் கெடுபிடிக்குப் பயந்து அதுவே யதார்த்தமென்று முடிவெடுப்பதும் எமது லட்சியத்தை மாற்றியமைக்க முற்படுவதும் அல்லது அதற்கெதிராகக் கருத்துக்கூற முற்படுவதும் சரியான தலைமைக்குரிய லட்சணங்களாக இருக்கப் போவதில்லை. தந்தை செல்வாவும் அவரைச் சூழ்ந்திருந்த தமிழ் தேசியவாதிகளும் தமிழீழ லட்சியத்தை முன்வைத்த போது அந்த லட்சியத்தை அடைவது பெரியவொரு ‘வில்கண்டமான’ காரியமென்றுதான் செல்வா அதனைக் குறிப்பிட்டார். அதற்காக அந்த லடசியத்தை முன்னெடுக்க அவர்கள் பின் நிற்கவில்லை. லட்சியம் முன்னெடுக்கப்பட்டு இளைஞர்களின் உணர்ச்சிமிக்க ஆயுதவழிப் போராட்டமாகப் பரிணமித்துத் தனது எல்லைகளைத் தொட்டுவிட்டே தோற்றுப் போனது. உண்மையில் லட்சியம் தோற்கவில்லை எமது போராட்டம்தான் தோற்றது. இன்னும் சொல்லப் போனால், போராட்டம் கூடத் தோற்றுவிடவில்லை போராட்டத்தின் ஒரு பகுதியான ஆயுதவழிமுறைதான் தனது தோல்வியைத் தழுவியது. ஆனால் போராட்டம் விரிவுபட்டு இன்று சர்வதேசமயப்படுத்தப் பட்டிருக்கிறது.

எண்ணெய் திரண்டு வரக்கூடிய நேரத்தில் தாழியை உடைப்பது போலத்தான் எமது போராட்டம் சர்வதேசமயப்படுத்தப்பட்டு, தமிழகத்திலும் முழுமையான ஆதரவைப் பெற்று வரும்போது எமது இலட்சியத்திலிருந்து பின்வாங்குவதுமாகும். ஆரம்பத்தில் கூடக்கேட்டாற்தான் குறையவாவது பெறமுடியுமென்னும் நோக்கில் தமிழீழத்தைக் கேட்டு ஆகக் குறைந்தது சமஷ்டியையாவது பெற முயற்சிக்கப்பட்டது. ஆனால் சிங்கள அரசுகள் மாகாண சபைகளென்ன, மாவட்டசபைகளையே தரமறுத்துவிட்டன. இன்றும் 13வது திருத்தச் சட்டத்தை முடிந்தவரை இல்லாமற் செய்வது அல்லது மாகாணசபையின் செயற்பாடுகளை கவர்னரைக்கொண்டு முடக்குவது என்ற நோக்கத்தோடுதான் அரசு செயற்படுகிறது. ***சிங்களப் பேரினவாதத்தின் யதார்த்த நிலை இதுதான். அது நாம் குனியக் குனியக் குட்டுமேயொழிய கொஞ்சப் போவதில்லை. அனுபவமும் வரலாறும் நமக்கு அதைத்தான் படிப்பித்திருக்கிறது.*** இந்த நிலையில் நாம் எப்படி எமது தாயக லட்சியத்திலிருந்து விலக முடியும்?

“யதார்த்தவாதி வெகுஜன விரோதி” என்பார்கள். யதார்த்தத்தைக் கணக்கிலெடுக்கும் தலைவன் லட்சியத்தைக் கோட்டை விட்டுவிடுவான். எப்போதும் யதார்த்தம் அவனைச் செயற்படவிடாது தடுத்துக் கொண்டேயிருக்கும். முடிவு மக்களின் எதிர்ப்பலைக்கு முகம் கொடுப்பதாகவேயிருக்கும். தமிழீழ லட்சியத்தை உருவாக்கியவர்கள் மக்கள். இன்று நேற்றல்ல சுமார் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழரசுக் கோட்பாட்டுக்கு வித்திடப்பட்டுவிட்டது. மக்கள் ஆதரவு என்னும் சக்தியினால் அன்றிலிருந்து இன்றுவரை அக்கோட்பாடு வளர்த்தெடுக்கப்பட்டு தற்போது உலகத் தமிழர்கள் அனைவரதும் நெஞ்சங்களில் “தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்” என்னும் தாரக மந்திரம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் புதிதாக யதார்த்தங்களைக் கணக்கிலெடுத்து இலட்சியங்களை அமைக்க முடியுமா? எமது இலட்சியம் மாறப்போவதில்லை அதற்கேற்ற யதார்த்த சூழ்நிலைகளைத்தான் நாம் மாற்றியாகவேண்டும்.

இன்று தமிழீழ மக்களுக்கிருக்கும் பெரிய பிரச்சனைகள் மூன்றுதான். அவை: முழுமையான அதிகாரங்கள் கொண்ட அரசியற் தீர்வு கிடைக்காமலிருப்பது, அதிகரித்த ராணுவச் சூழலுக்குள் தமது வாழ்க்கையை நடாத்துவது, சிங்களப் பெரும்பான்மையினரால் எல்லைப்புறங்களில் நிலங்கள் அபகரிக்கப்படுவது. ***இதில் தமிழர்களுக்கு ஓர் அரசியற் தீர்வுகட்டாயம் கிடைக்கவேண்டுமென்பது ஐநா உட்படச் சர்வதேசத்தாலும் உணரப்பட்டிருக்கின்றது. இலங்கையரசும் அரசியற்தீர்வொன்றைக் கொண்டுவரத் தெரிவுக்குழுவொன்றை நியமித்துவிட்டுத் தமிழர்களுக்காகக் காத்திருக்கிறது. மொத்தத்தில் எமக்கோர் தீர்வு வேண்டுமென்பது எல்லோராலும் ஏற்கப்பட்ட வெளிப்படையான உண்மையாகிவிட்டது.*** இதுதான் இன்றைய யதார்த்த நிலை. எமது விடுதலைக்கான விட்டுக்கொடுக்காத இலட்சிய வேட்கைதான் இந்தச் சூழ்நிலக்குக் காரணம். எமது இலட்சியம் மாறும்போது அல்லது கீழிறங்கும்போது அதிகாரமற்ற தற்போதைய மாகாண சபையோடு நிற்க வேண்டித்தான் வருமேயொழிய வேறொன்றும் நடக்காது. நாம் அமைதியாகிவிட்டால் சர்வதேசமும் எமக்காகக் குரல் கொடுக்காது.

## அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ஆயுத வழிப் போராட்டமொன்றை நாம் நடத்தியபோது பயங்கரவாதிகளாகப் பச்சை குத்தப்பட்டோம். நமது பிரதேசங்களில் இராணுவம் குவிக்கப்பட்டு அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. சர்வதேசம் அதனைக் கண்டும் காணாததுபோல் இருந்தது. தற்போது ஆயதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதால் எவ்வளவுதான் இராணுவம் குவிக்கப்பட்டிருந்தாலும் அதன் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. உலகம் இலங்கையரசின் தமிழர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளை நோக்கத் தொடங்கிவிட்டது. யுத்தத்தின்போது நடந்த மனிதவுரிமை மீறல்கள் உட்படத் தற்போதைய நிலைமைகளையும் கண்காணிக்கும் பொறிமுறைகள் தோன்றிவிட்டன. இதுதான் இன்றைய யதார்த்த நிலை. ***அதிகரித்த இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராகத் தொடற்சியான எதிர்ப்புக் குரலை மக்களும் மாகாண அரசுகளும் எழுப்புவதுதான் இங்கு முக்கியமேயொழிய அடிப்படை இலட்சியத்தில் மாற்றஞ் செய்யவேண்டிய தேவை எதுவுமில்லை.***

இலங்கையரசுக்கு உள்ளேயும் வெளியேயுமிருக்கும் பெரும்பான்மைத் தீவிரவாதம் இலங்கையை ஓரின மேலாதிக்கம் கொண்டவோர் பௌத்த சிங்கள நாடாக மாற்றிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கின்றது. அதற்காக தமிழர்கள் செறிந்து வாழும் அவர்களது தாயகப் பிரதேசங்களை ஐதாக்கி கலப்பினப் பிரதேசங்களாக மாற்றி எமது தாயகக் கோரிக்கையை இல்லாதொழித்துவிட பேரினவாதிகள் பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபடுகிறார்கள். இந்தியா உட்படச் சர்வதேசங்களும் இலங்கையில் காட்டும் அக்கறையினால் பேரினவாத அரசுக்கு இதனைச் செயற்திட்டமாக்கி நடைமுறைப்படுத்தப் போதிளவு நிதியை ஒதுக்க முடியவில்லை. பொருளாதார ரீதியில் எனைய நாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையிலுள்ள இலங்கையால் வெளிப்படையாக இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாததால், அது மறைமுகமான ஆதரவைக் கொடுத்து சிங்களத் தீவிரவாத இயக்கங்களை இதற்காகத் தூண்டிவிடுகின்றது. இந்த யதார்த்த நிலையைச் சரியாகத் தமிழ் மக்கள் புரிந்துகொண்டு எமது நிலங்களை அபகரிக்க முயலும் தனிநபர் அல்லது நிறுவனங்களின் செயற்பாடுகளை மாகாண நிர்வாகத்தின் அனுசரணையோடு தடுத்து நிறுத்தவேண்டியதே அவசியமாகும். நாம் ***எமது தாயகக் கோட்பாட்டிலிருந்து பிறழ்ந்து விடுவோமாயின் அதாவது நமக்கென்றோர் தாயகம் தேவையில்லை என்ற நிலைக்கு வந்து விடுவோமாயின் இலங்கைப் பேரினவாதிகளின் ‘எல்லோரும் எங்கும் வாழலாமென்ற’ கோட்பாட்டிற்குள் அகப்பட்டவர்களாவோம்.*** என்பது வீதப்பெரும்பான்மையுடன் கரைந்து போவோம். ஆக, லட்சியம் அதாவது தமிழீழத் தாயகம் என்னும் எமது தாகம் மிக முக்கியமானது. அதனைப் படிப்படியாக அடையும் வழிமுறைகள்தான் மாறலாமேயொழிய அடிப்படை லட்சியத்திலிருந்து பிறழ முடியாது.

### உபாயங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் இன்றுவரை எமது லட்சியம் அழிந்து விடாமல் நிலைத்து நிற்கிறது.

ஆட்சியிலிருப்பவர்களுக்கு ஆயிரம் பிரச்சனைகளிருக்கும். அபிவிருத்திக்கான நிதியைப் பெறுவதிலிருந்து அதனைப் பயன்படுத்தித் திட்ங்களை நிறைவேற்றுவது வரை பேரினவாத அரசினாலும் அது நியமித்திருக்கும் கவர்னராலும் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்பட்டுத்தானாகும். அதற்கும் எமது இலட்சியத்திற்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இலட்சியம் மக்களால் உருவாக்கப்பட்டது, மக்களாலேயே வளர்த்தெடுக்கப்பட்டது. இன்றுள்ள வடமாகாண அரசை உருவாக்கியதே இந்த இலட்சியம்தான். இலட்சியம் கைவிடப்பட்டால், மக்களால் மறக்கப்பட்டால் நாளை சிங்களப் பெரும்மைக் கட்சிகள்தான்? வடமாணத்தில் ஆட்சியைப் பிடிக்கும். இதுதேவைதானா? எமது அடிப்படை இலட்சியத்தில் கைவைக்க அப்படி என்ன அவசியமும் அவசரமும் இருக்கிறது.

*வாலறுந்த நரிகளுக்கு வாழைப் பழத்தைப் போல்*
*ஈழப்பழம் புளிப்பாய் இருந்திடலாம்*
*ஆனாலும்*
*எட்டி எட்டிப் பார்த்து எட்டாது போயிடினும்*
*விட்டு விட்டுப் போகா வீரப் பரம்பரைக்கு*
*தூரவிலகிவிட தோற்றோடிப் போய் மறைய*
*ஈழப் பழமொன்றும் வாழைப் பழமல்ல*

*தொடருவம்...*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் | அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள் விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design


நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்
Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# அகங்காரமற்ற அடையாளம்

**தமிழ் அவைக் காற்றுக் கலைக் கழக 35 ஆம் ஆண்டு நாடக விழா குறித்து..**















**இளையதம்பி தயானந்தா**

'நடக்கக் கூடாது என்றுதான் நினைத்தேன் ஆனால் நடந்துவிட்டது' என்ற வரிதான் இதை எழுதுகிற போது தவிர்க்க முடியாமல் மனதில் வருகிறது. ஏனோ தெரியவில்லை எனக்கு எப்போதுமே இப்படித்தான் ஆகிறது. என்னால் முடியாத விசயங்களில் நான் இறங்குவது அல்லது இறக்கப்படுவது என்பது தொடர்ந்தும் நடந்தபடியே இருக்கிறது. அந்தக் கணக்கில் தான் நீங்கள் இந்த ஆக்கத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். நான் உங்களோடு பகிர வருவது இலண்டனில் நடைபெற்ற அவைக் காற்றுக் கலைக் கழகத்தின் 35 ஆவது நாடக விழா குறித்தது.

இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றின் மறக்க முடியாத அரங்காடிகளில் ஒருவராக அவைக் காற்றுக் கலைக் கழகத்தின் க.பாலேந்திராவை சொல்ல முடியும். ஈழத்து நவீன தமிழ் நாடக முயற்சிகளின் சங்கிலித் தொடரில் தனக்கான தனித்த அடையாளத்தை ஏற்படுத்தியவர் அவர். நவீன தமிழ் நாடக முயற்சிகளில் பிற மொழி ஆக்கங்களையும் தழுவல்களையும் எமக்கான வடிவமாக்கும் அயராத நெறியாள்கை முயற்சிகளில் அவர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார். 1990 ஆம் ஆண்டு முதல் லண்டன் அவைக் காற்றுக் கலைக் கழகத்தின் - தமிழ் நாடகப் பள்ளி செயற்பட்டு வருகிறது. புலம்பெயர் மண்ணில் எமது சுய அடையாளத்தை இனம் காணவும் அடுத்த தலைமுறைக்கான தன்னம்பிக்கைத் தளமாகவும் இப்பள்ளி மாணவர்களின் அரங்க முயற்சிகளைக் காண முடிகிறது.

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் 35 ஆவது ஆண்டு விழா இலண்டன், வட்ஃபோர்ட் இலுள்ள 'பம் ஹவுஸ்' அரங்கில் கடந்த நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றது. 'இளையவர்களே நமது எதிர்காலம்' என்ற மகுடத்தோடு செயற்படும் லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள் இதில் பங்கேற்றார்கள். பேராசிரியர் சி.சிவசேகரத்தின் பிரதியில் உருவான 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற நாடகமும், பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதியினால் பிரதியாக்கப்பட்ட சேக்ஸ்பியரின் நாடகமான Thetempest இன் தமிழ் வடிவமான 'சூறாவளி' நாடகத்தின் முதல் மேடையேற்றமும் அன்றைய விழாவில் அரங்கேறின.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' சின்னஞ் சிறார்களின் மகிழ்வூட்டும் மேடை நிகழ்வாக அமைந்தது. மழலை முற்றும் கலையாத அவர்களின் நடிப்பும் பேச்சும் இனித்தன. தங்களைத் தாக்க வரும் ஓநாய்களை கூட்டாக எதிர்த்து வெற்றி கொள்ளும் மாடுகள், நரியின் சூழ்ச்சியால் பிரிந்து தம்மை இழப்பதும், பிரிவுகளால் வரும் இழப்பை உணர்ந்து மீண்டும் இணைந்து வெற்றி கொள்வதுமாக அந்த நாடகம் அமைந்தது. ஓநாய்களின் வெற்றிக்காக சதி செய்யும் நரியாக நடித்த சிறுவனின் முகத்தில் தவிர்க்க முடியாமல் நோர்வே நாட்டின் சூல்கெய்மின் முகம் வந்து போயிற்று. அது எனது அரசியல் அறியாமையால் எழுந்த பிரச்சனையாக இருக்கலாம். பக்கத்தில் இருந்த நண்பனின் கண்களில் நரியின் முகத்தில் ஜி.எல்.பீரிஸ் தெரிந்ததாக சொன்னான். 'தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும்' என்ற மகுட வாசகத்தோடு செயற்படும் தமிழ் அவைக் காற்றுக் கலைக் கழகம். இதே சிறுவர் நாடகத்தை சிங்கள ரசிகர்கள் மத்தியில் அரங்கேற்றினால் நரியின் முகம் வேறாக தெரியும் வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

அன்றைய நாடக விழாவில் அதிக கவனத்தை ஈர்த்தது The tempest இன் தமிழ் வடிவமான 'சூறாவளி'. தனது சகோதரனின் துரோகத்தாலும், அதிகாரத்தாலும் முத்துத் தீவின் ஆட்சி இழந்து, நாடுகடத்தப்பட்ட நாயகன். நாகரிகம் அடையாத தீவொன்றில் 12 ஆண்டுகளாக தனது மகளோடு அவன் வாழ்கிறான். அறிவும், ஆழுமையும், மந்திர மாயங்களும் தெரிந்தவன். துர் தேவதையால் அந்தத் தீவில் சிறை வைக்கப்பட்ட மாய தேவதைகளை விடுவிக்கிறான். தனது மந்திர மாயங்களுக்கு அவற்றைப் பயன் படுத்துகிறான். தீவை முழுமையாக ஆக்கிரமித்து தனதாக்குகிறான். தனக்கு துரோகமிழைத்தவர்கள் பயணித்த கப்பலை மாயச் சூறாவளி ஒன்றின் மூலம் தாக்கி அழித்து, பயணித்தவர்களை தனது தீவிற்குக் கொண்டு வருகிறான். துரோகமிழைத்தோருக்கும் தீவு வாசிகளுக்கு மனக் கலக்கத்தை உண்டு பண்ணுகிறான். நிறைவாக தனது நீண்ட நாள் கனவை நடைமுறைப்படுத்தி அவலங்கள் ஏதுமின்றி மீண்டும் தனது தாயகம் திரும்புவதாக கதை அமைகிறது. மண் ஆக்கிரமிப்பு, நம்பிக்கைத் துரோகம், பழிக்குப் பழி, சுதந்திரம், அடிமைத்தனம், தோற்ற மயக்கங்கள் என இந்த நாடகம் தொட்டு சொல்கிற எல்லா விடயங்களும் தவிர்க்க முடியாமல் எங்களுக்கு மிக நெருக்கமானவையாக அமைகின்றன.

அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் நாடகப் பள்ளியில் போதுமான பயிற்சியும் மேடை அனுபவமும் கொண்ட பதின்ம வயதினரை சூறாவளி நாடக மேடையில் காண முடிந்தது. வில்லியம் சேக்ஸ்பியரின் The tempest நாடக பாத்திரங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக மாற்றப் பட்டிருந்தன. மூல நாடக பாத்திரங்களில் பதின்மூன்று பாத்திரங்களே சூறாவளியில் இடம்பெற்றன. The tempestஇன் பிரதான பாத்திரமான Prospero இன் கட்டளைக்கு செயற்படுவதான Ariel என்ற மாய தேவதை சூறாவளி நாடகத்தில் மாருதி- 1, மாருதி -2 என இரண்டாக்கப் பட்டிருந்தது. நாடகத்தின் நாயகன் முத்துவேலாகவும் அசுரனாகவும் தோன்றிய சந்தோஷ் ஆனந்தன், மாய தேவதைகளாக நடித்த மானசி பாலேந்திரா மற்றும் செல்வி சற்குணானந்தன், மண்மகளாக தோன்றி நடித்து நாட்டியமாடிய சிந்து பசுபதி ஆகியோரிடம் நடிப்புப் பயிற்சியின் முதிர்ச்சியைக் காணமுடிந்தது. ஏனைய நடிகர்களும் தங்கள் பங்களிப்பை சிறப்புறவே செய்திருந்தார்கள். முகமூடி தரித்த அனைத்து பாத்திரங்களுக்கும் பின்னணிக் குரலை க.பாலேந்திரா, ஆனந்தராணி பாலேந்திரா, சோ.குமரகுரு, நியூட்டன் ஜெராட் ஆகியோர் வழங்கினார்கள். பாத்திரங்களின் அங்க அசைவுகளுக்கும் பின்னணிக் குரல்களுக்கும் இடையே எந்த இடத்திலும் பிசிறு ஏற்படாத பாலேந்திராவின் நெறியாள்கைக்கு பாராட்டுகள். இந்த வேளையில் பாத்திரங்களின் குண நலனுக்கு ஏற்ற வகையில் முகமூடிகளை வடிவமைத்த தமிழகத்தின் ஆழி வெங்கடேசன் என்ற கலைஞனுக்கு தனித்த பாரட்டுக்களை தெரிவிக்க வேண்டும்.

அடையாளத்தை தேடுவது ஒருவித அகங்காரம்தான் என்ற வசனம் ஒன்று கதாநாயகன் பேசுவதாக நாடகத்தில் வருகிறது. புலம் பெயர் மண்ணில் அகங்காரமின்றி ஒரு அடையாளத்தை எட்டுகிற தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தை அதே வரிகளால் பாராட்டுவதே பொருத்தமானது. பல புலம்பெயர் படைப்பாளிகள் வாழ்ந்தாலும் க.பாலேந்திரா போன்ற ஒரு சிலரால் மட்டுமே தடைகளையும் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகிற மான அவமானங்களையும் தாண்டி துணிச்சலுடன் செயற்பட முடிகிறது. அதற்கு அவரது இணையாக செயற்படுகிற ஆனந்தராணி பாலேந்திராவுக்கும் கழகத்தின் முதுகெலும்பாக செயற்படுகிற மனோ மனுவேல்பிளை, வாசுதேவன், சத்தியேந்திரன் ஆகியோருக்கும் மனமுவந்த பாராட்டுக்களைக் கூறவேண்டும்.

தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகமும், அதன் ஆர்வலர்களும், பங்கேற்கின்ற இளம் தலைமுறையும் தங்கள் தளராத முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து மேலும் வெற்றி கொள்ள எம் வாழ்த்துக்கள்.




Merry Christmas and Best Wishes for a happy New Year...

✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

"We are specialised in **EVENTS & OUTDOOR CATERING**"

# Abi Fast Food

Events Specialist & Caterers

All Varieties of
HOPPERS,
DOSAS & KOTHU
served
HOT & FRESH
in our Restaurant
and at all
Outdoor Caterings

திருமணம், பிறந்த நாள்,
அரங்கேற்றம் மற்றும் அனைத்து
விதமான வைபவங்களுக்கும்,
மண்டப நிகழ்வுகளுக்கும்
சுவை மிகு
இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவு வகைகள்
பரிமாற நாட வேண்டிய
ஒரே இடம்.

**4th Year**
in Business

**Southall Branch**
233B, The Broadway
Southall
Middlesex UB1 1ND
T: 0208 813 9494

Successfully Celebrating

We Thank All Our Valued CUSTOMERS

**1st**
Anniversary

**South Harrow Branch**
282, Northolt Road
South Harrow
Middlesex HA2 8EB
T: 0208 422 9669

**ABI FAST FOOD Wishes MERRY CHRISTMAS & HAPPY NEW YEAR 2014**

Email: info@abifastfood.com
Web: www.abifastfood.com

Catering Hotline
0208 166 5569

# facebook, ஒரு மாணவன், ஒரு பெண் மற்றும் ஒரு பொய்....

முதலில் இதை சிறுகதையாகத் தான் எழுதலாம் என இருந்தேன். ஆனால் அனுபவங்களை அனுபவப்பதிவாக எழுதினால் அதன் தாக்கத்தின் வீச்சு அதிகம் என்பதால் உண்மையில் பொய்யைக் கலந்து புனைவாக்கும் எண்ணத்தை ஒதுக்கி விட்டு இதை அப்படியே உள்ளது உள்ள படியே எழுதுகின்றேன். நாம் ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ சிலரின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் விளையாடி விடுவோம். அந்த விளையாட்டுக்கள் சில சமயங்களில் நன்மையிலும் பல சமயங்களில் பகையிலும் முடியலாம். அடுத்தவரின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தைத் தரக் கூடிய விதியின் விளையாட்டுகளின் ஆட்டக்காரனாக அடிக்கடி நான் இடம் பெறுவதுண்டு. கல்லூரிக் காலங்களில் அவ்வகையான ஆட்டங்களை சாதுர்யமாக தெரிந்தே விளையாடி இருக்கின்றேன். கால ஓட்டத்தில் அறிவும் பக்குவமும் அதிகமாக அதிகமாக மற்றவர்களின் உணர்வுகளைப் பணயம் வைத்து ஆடும் ஆட்டம் அறவே மறந்து போய் விட்டது.

தமிழ், தெலுங்கு, இந்தி என இந்திய அளவிலேயே இருந்த அடுத்தவரின் வாழ்க்கையை திசைத் திருப்பும் ஆட்டங்கள் இன்று பன்னாட்டு அந்தஸ்தையும் அடைந்தது. ஒரு மாணவன், பேஸ்புக், ஒரு பெண் மற்றும் ஒரு பொய் ஆகியனவும் இவ்வாட்டத்தில் முக்கியமானவை. எனது துறையில் ஆராய்ச்சி மாணவனாக, பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவன், சென்ற ஆண்டு சேர்ந்தான். கடந்த ஜூன் மாதம், பாகிஸ்தானிற்கு சென்றவன், அங்கிருந்து துறைப் பேராசிரியருக்கு, தனது தந்தை உடல் நலம் சரியில்லாமல் இருப்பதாகவும், அதனால் ஆறு மாதங்கள் படிப்பில் விலக்கு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு மின்னஞ்சல் செய்து இருந்தான்.

மாணவர் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்ட எனது பேராசிரியரும், அதற்கான சாத்தியக் கூறுகளை பரிசீலித்து அதற்கான முன்னெடுப்புகளை எடுத்து இருந்தார். பல்கலை கழக விதிமுறைகளின் படி, மாணவர்களுக்கு உடல் நோவு வந்தால் மட்டுமே ஆறு மாதங்களோ ஒரு வருடமோ விலக்கு அளிக்கப்படும், ஆனாலும் பேராசிரியர் மிகவும் நல்லவர் என்பதால், இண்டு இடுக்கு விதி முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு நல்லது செய்வார் அடிக்கடி என்னிடமும் எனது சக மாணவனான மற்றொரு பாகிஸ்தானியனிடமும், விலக்கு கோரிய மாணவனைப் பற்றியும் அவனது தந்தையின் உடல் நலம் பற்றியும் விசாரிப்பார்.

இன்று மாலை, ஒரு சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானிய மாணவனைப் பற்றி பேச்சு வருகையில், அந்த மாணவனது பேஸ்புக்கில் ஏதேனும் தகவல் இருக்கின்றதா என எங்களிடம் கேட்டார். நீண்ட நாட்களுக்குப் பிறகு நேரம் இருந்ததால் இன்று தான் சிலப் பலப் புகைப்படங்கள் போட்டு சுயத்தம்பட்டம் அடித்துக் கொண்டு இருந்தேன். வாத்தியார்கள் எள் என்றால் எண்ணெய் ஆக மாறும் தமிழ் வழிப் படிப்புச் சூழலில் வளர்ந்ததால் உடனே, அவனது பேஸ்புக்கைப் பார்த்து, மாணவன் எதுவும் தகவல் பகிரவில்லை ஆனால், அவனது தோழி ஒருத்தி புகைப்படங்களில் அவனை இணைத்துள்ளதைக் காட்டுகின்றது என மட்டும் சொன்னேன். பேராசிரியர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, உடனே என் இருக்கைக்கு வந்து படங்களைப் பார்த்தார். மாணவனும் அவனது ஐரோப்பியத் தோழியும், ஜெர்மனியின் மியுனிக் நகரில் நடந்த ஒரு திருவிழாக் கொண்டாட்டத்தில் தங்களது நண்பர்களுடன் எடுத்துக் கொண்ட படங்கள் கடந்த செப்டம்பர் மாதம் தரவு ஏற்றப்பட்டிருந்தன. பேராசிரியரின் முகம் மாறியது. பயபுள்ள, அப்பாவிற்கு உடல் நலம் சரியில்லை என கூறி விட்டு, ஜெர்மனியில் ஆட்டம் போட்டுக் கொண்டு இருக்கின்றது என எனக்கு விளங்கியது.

அந்த மாணவனுக்கு ஆரம்பத்தில் இருந்தே இத்தாலியும் எங்களது துறையையும் பிடிக்கவில்லை. ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத் தொகையும் மிகவும் குறைவு என்ற மனக்குறையும் அவனுக்குண்டு.

'சார் ஒருவேளை, இந்தப் பெண் சென்ற வருடம் எடுத்த புகைப்படங்களை இப்பொழுது தரவேற்றி இருக்கலாம்' பொய்மையும் வாய்மை இடத்து என சமாளிக்க முயலுகையில்...... சமீபத்தில், அதே தோழி, மாணவனது சுவற்றில் 'இன்றிரவு சாக்லெட் காப்பி கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வருகின்றாயா' என எழுதி இருந்ததையும் பேராசிரியர் கவனித்து விட்டார்.

நான் படு சுமாராக ஆண்டிராய்டு நிரலி எழுதும் பொழுது கூட கோபப் படமாட்டார். தந்தைக்கு உடல் நலம் சரி இல்லை என சொல்லிவிட்டு, அதன் பொருட்டு சொந்த நாட்டில் இருப்பதாக விலக்கு கேட்டு, இங்கு குடியும் கும்மாளமுமாக இருப்பதைப் பார்த்த பேராசிரியரின் முகத்தில் அவ்வளவு கோபம் வெடித்தது. உடனடியாக அந்த மாணவனுக்கு மின்னஞ்சல் செய்துவிட்டு, அவனுக்காக எடுத்திருந்த முயற்சிகளை கைவிடுமாறு துறைத் தலைவருக்கும் தெரிவித்து விட்டார். மார்ச்சில் அவன் திரும்ப வந்தால், முதலில் பாஸ்போர்ட் இம்மிக்ரேஷன் முத்திரையை பார்க்க வேண்டும் என கோபமாக சொல்லிக் கொண்டு இருந்தார்.

ஐரோப்பா வரும் இந்தியத் துணைக்கண்ட மாணவர்களில் சிலர், ஒரு நாட்டில் படிப்பிற்கான அனுமதியை வாங்கிக் கொண்டு, அனுமதி பெற்ற படிப்பிற்கு போக்குக் காட்டிவிட்டு, மற்றொரு நாட்டிற்கு சென்று அங்கு படிப்பிற்கோ வேலைக்கோ பெண்களுக்கோ தூண்டில் போட்டுக் கொண்டு இருப்பார்கள். அந்த வகையில் இந்த பாகிஸ்தான் மாணவன் செயல்பட நினைத்து இருந்து இருக்கலாம். அதற்காக அப்பா உடல்நிலை என்ற திரைக்கதையை எழுதி இருக்கலாம். ஆறு மாதங்கள் வேறு நல்ல வாய்ப்பிற்காக காத்திருந்து ஒரு வேளை கிடைக்காவிட்டால், மீண்டும் இத்தாலிக்கே வந்துவிடலாம் என்பது மாணவனின் திட்டமாக இருந்து இருக்கும். திட்டமிட்டு எழுதப்பட்ட திரைக்கதையில் எழுதியவருக்கே ட்விஸ்ட் கொடுக்கும் விதமாக பேஸ்புக் அமைந்துவிட்டது. அவனது பெண் தோழி மட்டும் அந்தப் படங்களைப் பகிராமல் இருந்திருந்தாலோ அல்லது Tag செய்வதை இந்த மாணவன் எடுத்துவிட்டு இருந்தாலோ ஆப்பசைத்த குரங்காய் மாட்டாமல் இருந்து இருக்கலாம். அந்த மாணவன் நேர்மையாக இல்லை, பொய் சொன்னான் என்பதெல்லாம் ஒரு புறம் இருந்தாலும், நாளை என் பேஸ்புக் வழியாகத் தான் அவனது தகவல்களைப் பேராசிரியர் பார்த்தார் என அவனுக்கு தெரிய வரும் பொழுது, நான் அவனுக்கு வில்லன் ஆவேன்.

ஒரு நாயகனுக்குத்தான் எத்தனை வில்லன்கள்....

சமூக ஊடக உலகமானது, தகவல் பரிமாற்ற யுகம் மட்டுமல்ல, தகவல் கசிவு உலகமும் கூட... எத்தனை எச்சரிக்கையாக இருந்தாலும், மறைக்க வேண்டும் என நினைக்கும் விசயங்கள் சமூக ஊடகத் தொடர்பு சங்கிலியில் எங்கேயாவது ஓர் இணைப்பில் தெறித்து விழும்.

அதே போல, சொல்லப்பட்ட பொய், நீருக்குள் அமுக்கப்பட்ட காற்றடைத்தப் பந்து மேல் எழும்பி வருவதைப் போல என்றாவது ஒரு நாள் மேலே வரும்.

*- வினையூக்கி செல்வகுமார்*

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ இந்திய மனுதர்மம்.

அமெரிக்காவில் பணியாற்றிய தேவியானி கொப்ராகடே ஒரு பட்டம் பெற்ற மருத்துவர். தனது மாமனாரின் வழியில் இராசதந்திர சேவையில் இணைந்த இந்த அழகி இந்தியாவில் ஒரு வீடு ஒதுக்கீட்டு ஊழலில் சம்பந்தப்பட்டவர் எனச் சொல்லப்படுகிறது. தேவியானியைக் காப்பாற்ற அவரை ஐநா நிரந்தர தூதுவரகத்திற்கு இந்தியா மாற்றியுள்ளது.

சட்ட விரோதமாக மிகக் குறைந்த சம்பளத்தை தனது பணிப்பெண்ணிற்கு வழங்கியவருக்கு உரிய இடம் பான் கீ மூனின் கோட்டைதான். இனி இன்னர் சிற்றி பிரஸ் வறுத்தெடுக்கட்டும்.

பாதிக்கப்பட்ட தேவியானியின் பணிப்பெண்ணிற்கு எதிராக இந்திய அரசு குற்றம் சுமத்துகிறது. பதவியில் இருந்து நீக்கப்படவேண்டியவருக்கு பதவு உயர்வு! இதுதான் மனுதர்ம நீதியோ?

## ■ ரோமம் புடுங்கும் ராசதந்திரிகள்

இலங்கை அரசு கன்னா பின்னா என பல பேருக்கு இராசதந்திரக் கடவுச்சீட்டுக்களை வழங்குகிறது என ஒரு கொழும்பு ஊடகம். மஹிந்த ராஜபக்ச ஒரு வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டால் அவருடன் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்வார்கள். முக்கியமானவர்களின் மனைவிமாருக்கு திரெடிங் செய்பவர்களுக்கும் இராசதந்திர கடவுச் சீட்டாம்.

## ■ சொக்கத் தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்...

உண்ணாவிரதப் புகழ் கருணாநிதி வரும் இந்தியப் பாராளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போகிறாராம். அவரது சொக்கத் தங்கம் சோனியா காந்தியின் கட்சியுடன் இம்முறை கூட்டு இல்லை எனச் சொல்லிவிட்டார். பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர அதன் பேரப்பேச்சாளர் தமிழருவி மணியன் விடவில்லை.

தேர்தலில் வென்றபின் நீராரடியாவை வைத்து தேவையானவர்களுடன் கூட்டணி சேர்ந்து ஒன்றிரண்டு அமைச்சுப்பதவிகளை பெற்றுக் கொள்ளலாம் தானே! ! ! !

## ■ சாமி அருள்

சாமி அருளால் முதலமைச்சர் ஆகிய விக்கி ஐயா ஏதோ போராட்டம் நடாத்தி சாகப்போகிறேன் என்று அறிக்கை விட்டார். அடுத்த மாவீரர் தினத்திற்கு இன்னும் ஒரு விளக்குத் தேவைப்படும் என்றிருந்தன்.

பிறகு அப்பிடி ஒன்றையும் காணவில்லை இப்போது தான் பதவி விலகப் போவதாக ஒரு செய்தியைப் பரவ விட்டுள்ளார். சாமி அருள் ? ? ?

*- ஊருளவாளி*

## ஐ.நா. ஆயாவுக்கு ஒரு விளக்கம்...



ஒரு கோடி தொன் ஐஸ் ஆவியாகி
நாளும் கரைகிறது
ஆறும் கடலும் அளவிடமுடியா
அளவில் ஆவியாகி மறைகின்றது
ஒரு ஒன்றரை இலட்சம்
மக்களின் எலும்பும் சதையும்
வன்னி வெய்யிலில்
வற்றி ஆவியாகி விட்டது
இதிலென்ன அதிசயம்!
இதற்கேன் விளக்கம்
இயற்கையழிவிற்கு நாமென் செய்வோம்
ஐயாமாரே! இது தான் உண்மை!
இது தான் உண்மை! உண்மையைத்
தவிர வேறொன்றுமில்லை.

*-சு.சிவலடியான் [யாழ்ப்பாணம்]*


பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா


# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: **info@orumanam.com**




## மணமகள் தேவை

1. 41 வயது, 5'8" British citizen working in a IT department in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

2. 29 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195

3. 48 வயது, 5'8" Permanent residence divorced accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422

4. 33 வயது, 5'7" German citizen working as a health care assistant in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4757

5. 38 வயது, 5'9" work permit visa working as a cashier in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412

6. 47 வயது, 5'11" British citizen working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4755

7. 23 வயது, 5'5" Residence permit for 5 years self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4752

8. 32 வயது, 5'11" Permanent residence in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4746

9. 27 வயது, 5'5" Graduate student visa working as a web developer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4745

10. 26 வயது, 5'10" Graduate German citizen working in company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4744

11. 34 வயது, 5'1" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4733

12. 25 வயது, 6'0" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4743

13. 42 வயது, 5'7" Permanent residence shop keeper தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4742

14. 29 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4740

15. 33 வயது, 5'7" working in a company in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4737

16. 28 வயது, 5'5" Student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713

17. 31 வயது, 6'1" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4732

18. 40 வயது, 6'1" Divorced Graduate working in a Administrative service தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684

19. 26 வயது, 5'10" Permanent visa working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722

20. 42 வயது, 5'8" British citizen woking in Investment Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

21. 30 வயது, 5'6" British citizen doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272

22. 35 வயது, 5'4" PSW visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4730

23. 31 வயது, 5'6" Australia citizen working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4729

24. 26 வயது, 5'10" Permanent residence in uk working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722

25. 31 வயது, 5'7" Geman citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4615

26. 42 வயது, 5'8" British citizen working in investment banking தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

27. 33 வயது, 5'8" Permanent residence in uk software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503

28. 33 வயது, 5'8" divorced work permit visa graduate doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713

29. 30 வயது, 5'8" Born and brought up in uk working as a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710

30. 31 வயது, 6'3" Permanent residence in Singapore Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4708

31. 40 வயது, 5'3" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4706

32. 21 வயது, 5'5" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4701

33. 42 வயது, 5'8" British citizen working as a investement banking as accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

34. 45 வயது, 5'6" German citizen Living in UK, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

35. 26 வயது, 6'1" Born and brought up in uk working as a Software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4699

36. 41 வயது, 5'8" PR holder in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

37. 59 வயது, 5'4" British citizen handicap தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4697

38. 32 வயது, 5'5" Permanent residence in France working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4695

39. 28 வயது, 5'8" student visa in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4690

40. 34 வயது, 5'5" Canadian citizen working in a bank as a manager in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4724

41. 34 வயது, 5'6" Asylum seeker living in uk for 14 years தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4688

42. 29 வயது, 6'1" PSW visa working as a Electrical engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687

43. 32 வயது, 5'7" British citizen working as a Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4683

44. 33 வயது, 5'4" Asylum seeker Graduate in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4680

45. 29 வயது, 5'10" Student visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4679

46. 37 வயது, 5'8" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4678

47. 28 வயது, 5'7" British citizen graduate working in a bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4677

48. 27 வயது, 5'6" Tourist visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4675

49. 37 வயது, 5'6" PSW visa working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4674

50. 28 வயது, 6'0" HSMP visa graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4671

51. 34 வயது, 5'7" Italian visa living in uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4667

## மணமகன் தேவை

1. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770

2. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766

3. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756

4. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

5. 34 வயது, 5'0" Graduate working in a IT field in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4749

6. 24 வயது, 5'3" Graduate working in a Bank in uk French citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161

7. 43 வயது, 5'3" Graduate British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731

8. 38 வயது, 5'3" Graduate British citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4646

9. 43 வயது, 5'2" German citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4666

10. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4009

11. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519

12. 39 வயது, 5'2" Born and brought up in uk working as a Project manager in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4704

13. 35 வயது, 5'5" divorced british citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4709

14. 24 வயது, 5'8" German citizen graduate working in a private sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4702

15. 38 வயது, 5'3" German citizen working as a graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

16. 27 வயது, 5'2" Born and broughtup in uk nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681

17. 28 வயது, 5'6" PSW visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4673

18. 29 வயது, 5'6" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4659

19. 27 வயது, 5'1" medical student living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3350

20. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414

21. 27 வயது, 5'3" Permanent residence working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

22. 28 வயது, 5'3" British citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629

23. 21 வயது, 5'3" born and brought up in Norway student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4607

24. 35 வயது, 5'5" working as a manager in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

25. 39 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

26. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

27. 44 வயது, 5'2" divorced, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4576

28. 25 வயது, 5'3" Permanent residence working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

29. 30 வயது, 5'3" British citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4562

30. 32 வயது, 5'10" srilanka, graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4552

31. 32 வயது, 5'3" British citizen working in a company as a manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4539

32. 24 வயது, 5'4" born and brought up in uk working as a financial investment in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504

33. 33 வயது, 5'5" Accountant in Singapore தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3947

34. 40 வயது, 5'3" divorced German citizen living in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4542

35. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357

36. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527

37. 33 வயது, 5'2" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513

38. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102

39. 39 வயது, 5'3" widowed living with childrend in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511

40. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496

41. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491

42. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4489

43. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488

44. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4487

45. 27 வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485

46. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484

47. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483

48. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473

49. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481

50. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477

51. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471

52. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465

53. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455

54. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4398

55. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

56. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

57. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4373

58. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362

59. 24 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

60. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338

61. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348

62. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322

63. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# சாஸ்திரிமார்

காலம், நேரம் சரியில்லை, வியாழன் பகை, ஏழரைச் சனி நடக்கிறது, சுக்கிரனுக்கு அர்சனை செய்யவேண்டும் என்பது போன்ற உரையாடல்கள் இன்றும் எம்மத்தியில் அடிக்கடி ஒலிக்கிறது. நாள், நட்சத்திரம் பார்ப்பது, சாஸ்திரத்தில் காலம் காலமாக தொடரும் நம்பிக்கைகள் எள்ளளவும் குறையவில்லை, பிள்ளை பிறந்த உடனே குறிப்பு எழுதுவது எம்மவர்களின் வழக்கமாகி விடுகிறது. சுப நேரம் பார்த்து முகூர்த்த வைத்த கல்யாணம், வீடியோக்காரனால் தாமதமாவதும், மணமகளுக்கு இரண்டாம் கூறையை மாற்றி உடுக்காமல் மேலே கொளுவி உடுத்துக் கொண்டு தாலியை சுபநேரத்தில் கட்டுவதும் லண்டனில் கூட வழமையான நிகழ்வாகிவிட்டது.

நாள், திகதி, நேரத்தில் அவ்வளவு நம்பிக்கையை எம்மவர்கள் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நம்பிக்கை எங்களோடு எப்படி வளர்ந்தது என்று எண்ணிப் பார்த்தால், சூழல் சுற்றம், பரம்பரை என்று காலாகாலமாக சந்ததி வழி சாஸ்திர நம்பிக்கைகள் காவப்பட்டதை காணமுடிகிறது. அந்த நாட்களில் எங்கள் பன்னாலைப் பள்ளிக்கூடத்துக்கு அருகே சங்கக் கடைக்கு இடையே ஒரு கொட்டிலில் குடியிருந்தவர் சின்னத்தம்பிச் சாத்திரியார். குறிப்புப் பார்த்து பயன் சொல்வதில் திருமணப் பொருத்தம் பார்ப்பதில் இவர் வல்லவர். காலை நேரத்தில் வெற்றிலையில் இரண்டு அல்லது ஐந்து ரூபாவை எடுத்துக் கொண்டு அவரிடம் சாத்திரம் கேட்க, நாள் குறிக்க போவோர் அதிகம் எல்லோருக்கும் நல்ல பலன் பார்த்துச் சொன்ன போதும் அவர் இறுதி வரை ஏழ்மையோடு வாழ்ந்து இறந்தது அந்தப் பள்ளிக்கூட காணியில் தான். எமது தாய், தந்தையர்கள் இவரது சாஸ்திரத்தில் அதிக நம்பிக்கை இருந்ததும் அது மெய்க்கப்பட்டதும், காணாமல் போன பொருட்கள் கூட எடுக்கப்பட்டதும் எனக்கு நினைவிருக்கிறது.

ஏதாவது ஒரு பொருள் களவு போனால், அல்லது காணாமல் போனால் அந்தக் காலத்தில் எம்மவர்கள் ஓடுவது இன்னொரு சாஸ்திரியாரிடம் தான். சின்னத்தம்பிச் சாத்தியார் என்று பெயர். நினைத்த காரியம் வல்லவர். எங்கள் அயல் ஊர்வாசி. மடித்துக் கட்டிய ஊத்தை ஏறிய நாலுமுழமும் தோலில் துண்டுமாகத் திரிவார். பொக்குவாயை மென்றபடி கள்ளுக்குடித்த உசாரோடு தான் சின்னத்தம்பிச் சாத்திரியார் எந்த நேரமும் காணப்படுவர். கலகலப்பாகக் கதைப்பார். அதிகாலையில் விடிந்த கையோடு போனால் தான், வெறி ஏற முன்னம் அவரிடம் சாத்திரம் கேட்கலாம் என்பது ஊருக்குத் தெரியும். ஒரு பூவின் பெயர், பத்துக்குள் ஒரு தானம் எனக் கேட்டுக் கேட்டு பலன் சொல்லுவார். இவருடைய சாத்திரங்கள் மெய் என்று கூறுபவர்களும் அதிகம் இருந்தார்கள். பகையாளியுடைய கையில் பொருள் அகப்பட்டு விட்டது என்றோ, உள்வீட்டுக் களவு என்றோ இவர் சொன்ன சாத்திரத்தால் உறவுக்குள் சண்டை எழும்பி பொருளும் போய், நிம்மதியும் போன சங்கதிகளும் உண்டு.

அளவெட்டி விநாசித்தம்பிச் சாத்திரியார் அனைவரையும் கவர்ந்த ஒருவராக இருந்தார். நல்ல ஆசிரியர், அம்பாள் பக்தர், நினைத்தவுடன் கவிதை எழுதும் ஒரு மரக்கவி, இறுதிக் காலத்தில் ஒரு அம்பாள் ஆலயத்தைப் பராமரித்தவர். நல்ல சமயப் பிரசங்கியார். இத்தனையும் உள்ள இவர். நினைத்த காரியத்தை சிறப்பாகச் சொல்லக் கூடியவர் என்ற பெயரையும் பெற்றிருந்தார். அவர் காலைப் பூசையை முடித்து தியானத்தால் கண்முழித்துச் சொல்லும் பயன் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை என்று இன்றும் பலர் சொல்லக் கேட்டுள்ளேன். சீதேவி வாலாயத்தோடு பலன் சொல்பவர் இவர் என்று கூறுவார்கள். இவரைப் போல மூதேவி வாலாயத்தோடு பலன் சொன்ன கொடிகாமச் சாத்திரியாரும் அந்தக் காலத்தில் பெரியளவில் பேசப்பட்டவர்கள். களவுபோனதைப் பற்றிய சாத்திரம் தான் இவர் அதிகம் சொல்லியிருக்கிறார். சாராயம் குடித்தால் தான் அவருக்கு சாத்திரம் வாயால் வரும் பொருள் களவு கொடுத்தோர் போனதும், சாராயம் கொண்டு வா, கார் பிடித்துக் கொண்டு வா என்பாராம். காரில் பயணிக்கும் போதே பாதையைக் காட்டி களவு போன பொருள் இருக்கும் இடத்தைக் காட்டும் திறமை இவருக்கு இருந்ததாக அந்தக் காலத்தில் ஒரு கதை, அதற்கு அத்தாட்சியாக பல சம்பவங்களும், சொல்லப்படுவதுண்டு. ஊருக்கு ஊர் சில தமிழ் உபாத்தியார்களும், குறிப்புப் பார்த்து பலன் சொல்லும் திறமையைப் பெற்றிருந்தார்கள்.

விழிசிட்டி சின்னத்தம்பி மாஸ்டரும் இத்தகைய ஒருவர். கிளிநொச்சி அம்பாள் குளத்தில் இன்னொரு வித்தியாசமான இளம் சாத்திரியார் இருந்தார். அவருக்கு மனோகர் என்று பெயர் கொக்குவிலைச் சேர்ந்தவர். ஆனால், அவரை அல்லாத்தாத்தா என்ற பெயரில் தான் கிளிநொச்சியில் அனேகருக்குத் தெரியும். பயிர்ப் பச்சையுள்ள அந்த குடியிருப்புக் காணியில் ஒரு மண் வீடு, வளவு ஓரமாக சாத்திரம் சொல்லும் ஒரு குடில், அதில் பூசை அலங்காரங்கள், கொட்டகையில் அவர் முன்னால்

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சாத்திரம் கேட்பவர் இருப்பார். அமர்ந்ததும் கற்பூரம் கொளுத்தி அம்மனை அவர் தியானிப்பார். சிறிது நேரத்தில் பற்கள் நறநற எனக் கடிக்கப்படும், உடன் அவர் கிழவனாக மாறிவிடுவார். கேரளத்திலிருக்கும் அவருடைய குருநாதர் அந்த நேரத்தில் அவருக்குள் ஏறிவிடுவதாகக் கூறுவர். தமிழ் மாறி, கேரள பாசையில் ஒரு கிழவன் வாயால் வருவது போல தான் வரும், அவர் உடல் அசைவுகளும் கிழவன் போலவே மாறிவிடும். பக்கத்திலிருக்கின்ற, கம்பைதட்டித்தழுவிஎடுத்தபடிசாத்திரம்சொல்ல ஆரம்பிப்பார். அவர் நடந்ததைக் கூறுவதை, சரியாகக் கூறுவதை அவதானித்த அநுபவம் எனக்கும் உண்டு.

கேரளச் சாமியாரிடம் சிஸ்யனாகச் சேர்ந்த இவர், அவரிடம் மந்திரம் கற்று விட்டு, அவருக்குத் தெரியாமலே மந்திரப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு ஊருக்கு ஓடிவந்து விட்டாராம். இவருடைய மந்திரம் பலிக்காதபடி குரு கட்டுப் போட்டுவிட்டார். வறுமையில் வாடிய இவர். கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்டு குருவின் உத்தரவுடன், குரு தனக்குள் வந்து பலன் சொல்வதாக அவரே சொல்வார். நடந்ததை, நடப்பதை உள்ளபடியே சொல்லும் ஆற்றல் அவருக்கு இருந்ததாக அவரே கூறுவர். அண்மைக் காலமாக ஊரில் மட்டுமல்ல, லண்டன் மாநகரில் கூட பலரது ஆர்வத்தைப் பெற்ற முறை காண்டம் வாசிப்பு. காண்டக்காரருக்கு பெருவிரல் அடையாளப் பதிவை அனுப்பினால் அவருடைய விபரஏடு தன்னிடம் இருக்கிறதா என்பதை ஓரிரு நாட்களில் காண்டக்காரன் தெரியப்படுத்துவார். அவர் முன்னேற்பாட்டின்படி போனால் பிறந்த திகதி, நட்சத்திரத்தைக் கேட்டுவிட்டு பிறந்த குறிப்பை எழுதி தன்னிடமுள்ள பனை ஓலைச் சுவடியில் உள்ளபடி தாய், தந்தை பெயர், ஊர், பிறப்பு, நடப்பு என பக்கத்திலிருந்து பழகியவர் போல் விபரம் சொல்வார்.

இவர் சமஸ்திர மொழியில் ஓலை வாசித்து, அதை தமிழில் இன்னொருவர் மொழி பெயர்த்துக் கொண்டிருப்பர். பலன் என நாம் கூறுவதை தாமே ஒலி நாடாவை ஆரம்பம் முதல் இறுதிவரை தானே ஒலிப்பதிவு செய்து தருவார். அடிக்கடி லண்டன் வந்து போகும் சகோதரர்கள் காண்டம் வாசிப்பதில் வல்லவர்களாக இருந்தார்கள். முன்பிறப்பு முதலாக ஏழு காண்டங்களை விரும்பியதை அவர் கேட்டால் கூறுவர். காண்ட ஓலைகள் தன்னுடைய சந்ததியினருக்கு சனகர், சனாதரர், சனந்தரர், சனற்குமாரர் என்ற சந்தானக் குரவர்களால் ஒவ்வொரு ஆன்மாக்களுக்கும் எழுதப்பட்டதாக கூறுவர். தஞ்சைப் பெரிய கோவிலில் தன் பரம்பரையினரால் இந்த ஓலைச் சுவடுகள் ஏலத்தில் எடுக்கப்பட்டதாகவும் இவர் சொல்வர்.

இவர்களுடன் ஏற்பட்ட வியக்கத்தக்க அநுபவம் பற்றி, விடுதலைப் புலிகளின் கவிஞரான புதுவை ரத்தினதுரை அவர்களும் விபரித்திருந்தார். அதிக உண்மைகள் காணப்பட்டதாக அவர்களிடம் நம்பிக்கையும் நிலவியது. ஜோதிடம் என்ற வார இதழ் வந்து கொண்டு தான் இருக்கின்றது. ஜோதிட நம்பிக்கை எம்மவரை விட்டு அழியப் போவதில்லை.


# SARAH

## EVENT MANAGEMENT SERVICES

We provide event management and catering services to both corporate sector and to Individuals. We cater to a diverse range of clients - small to medium businesses.

*Our Services:*

- Corporate - Product Launch, Conference, Business reception or Annual Party
- Srilankan Wedding, Tamil wedding, Indian Wedding & Party services
- Birthday party, anniversary and other ethnic events
- Catering, Banqueting , Sound and Lights
- Stages , Manadaps and Bespoke Services
- Choice of Indian, Srilankan, South Asian and Chettinad menus
- Competitive rates and High Standards



*You can simply relax, as we provide complete service based on your specifications and requirements.*

Contact : Mr. Gurumoorthy Shanmugam / Mr. Kathirvel Sadayappan

Tel: 01189 3283313/ 0785 3831865 / 07404722729

GM SARAH LTD, 80 Watlinton street, Reading,RG1 4RT

Email: saraheventmanagement@gmail.com | Website: www.sarahevents.co.uk



## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் பத்திரிகை நிறுவனத்துக்கு Tooting மற்றும் Croydon பகுதிகளில் பத்திரிகை விநியோகஸ்த்தர்கள் உடன் தேவை !

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

Contact Number - 020 7043 4310



ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## தேசக்குரல் இன்றிருந்தால்....

மாவீரர் நாளில் கண்ணீர் சிந்தி
சிந்தை கலங்கி நாம்
நிற்கையிலே
தன் குத்து வசனங்களால்
எம்மைச் சிரிக்க வைத்து
சிந்திக்கவும் வைத்து
கொள்கை விளக்கம்
கொடுப்பார் எங்கள்
தேசத்தின் குரல் இன்றிருந்தால்

இரகசியமாய்
மரக் கன்று நடவும்
மாட்டுக்கு நலமடிக்கவும் தான்
மாகாணசபைக்கு
அதிகாரம் உண்டென்று
கொள்கை விளக்கம்
கொடுப்பார் எங்கள்
தேசக் குரல் இன்றிருந்தால்

குங்குமப் பொட்டுக்காரனை
குண்டம்மாவும் வரவேண்டாம்
என ஓதுக்கினாள்
எனக் கிண்டலடிப்பார்
எங்கள் தேசத்தின் குரல்
இன்றிருந்தால்

மக்களைக் கண்டதும் சம்பந்தரின்
கார் பின்னோக்கிப் போகின்றது
சம்பந்தரின் கார் மட்டுமல்ல
வுயேயும்தான் ரிவேர்ஸில் போகின்றது
இப்படியே சம்பந்தர் போனால்
சொப்பன சுந்தரியின் கார் போல்
ஆவார் சம்பந்தர்
TNA வைச்சிருந்த சம்பந்தரை
இப்ப ஆர் வைச்சிருக்கின என்ற
கேள்வி நாளைக்கு வரும்
எனக் கிண்டலடிப்பார்
எங்கள் தேசத்தின் குரல் இன்றிருந்தால்

குங்குமப் பொட்டுக்காரன்
சாப்பிட்ட கை கழுவப் போறதுக்கும்
சிங்களப் படை ஆளுனரின்
அனுமதிப் பெற்றுத்தான் கழுவ வேண்டும்
என நகைச்சுவையாகப் பேசுவார்
எங்கள் தேசத்தின் குரல் இன்றிருந்தால்

இத்தாலி அக்காவிற்கு ஏதோ வருத்தமாம்
அடிக்கடி அமெரிக்கா போறா
என்ன வருத்தம் என்று சொல்றா இல்லை
அது என்ன
சொல்லக் கூடாத வருத்தமா–இல்லை

சொல்லக் கூடாத இடத்தில் வருத்தமா
எனக் கேட்டுக் கிண்டலடிப்பார்
எங்கள் தேசத்தின் குரல் இன்றிருந்தால்

ஜெர்மனி பிறேமன் நகரில்
மக்களின் நிரந்தர தீர்ப்பாயம்
திரைப்படமல்ல திரைப்பட விளம்பரமே
உண்மையான திரைப்படம்
இனித்தான் வரும்
என்று இனிதாக விளக்கம் கொடுப்பார்
எங்கள் தேசத்தின் குரல் இன்றிருந்தால்

நெறிகாட்டி வழிகாட்டி
குறிகாட்டி குணம் காட்டி
அறிவூட்டி தலைவன் செயலிற்கு
பொருள் கூட்டிப் பரப்புரை செய்ததனால்
தேசக் குரலானார் எங்கள்
பாலா அண்ணா
அருமருந்தான கருத்துக்களை
நகைச்சுவைத் தேனூட்டி
எம் சிந்தனை நாவில் தடவும்
அறிவுப் பாட்டியாக் கிடைத்தவர்
எங்கள் தேசக் குரல் பாலா அண்ணா

*- வேல் தர்மா*

## கழுகிறங்கும் கடற்கரை....

கடல்தின்ற சோகத்திலிருந்து
மீளாதோர் முன்னே
ஆரம்பமானது
அரங்கேற்றமொன்று
ஒப்பனையிட்ட கட்டியக்காரன்
தருப்பாடியபடி சபைவந்துளான்
கூத்தின் நாமம்
"பேரிடர் உதவி"
என்பதாய் எழுதி
போர்க்கப்பலின்
அணியத்தில் ஒட்டியுள்ளது.
நங்கூரமிட்டகப்பலிருந்து
குளிருக்குப் போர்வையும்
கூடாரப் பொருட்களும்
இறக்கப்படுகின்றன.
இயல்பு மறைந்து
இறக்கைக்கு வர்ணம் தீட்டி
கூரிய கத்தி நகங்கள் தெரியா
வண்ணம்காலிற்
சப்பாத்துத் தரித்து
பட்டாளமுகத்தைத் தற்காலிகமாக
அப்பாவி முகமென்றாக்கி
எங்கள் மலைமீதும்
பனை மீதும்அழகிய வயல்மீதும்
நதிக்கரை மீதும்
வந்து இறங்குகின்றன
வல்லுறுகளும் பருந்துகளும்.
மலர் வளையங்களுடன்
இறக்கை மடித்தமர்கின்றன
எங்கள் இலுப்பைமரமீதும்

கழுகுகள்.
சுனாமியால்
புதையுண்டோருக்கு அழுவதாய்
தொப்பி கழற்றி அஞ்சலிவேறு.

வியட்நாம் வயல்களிலும்
ஒட்டகநாட்டின் ஈச்சைமரத்திலும்
இவை இப்படித்தான்
இறங்கின முன்னரும்.
உங்களுக்காக அழவும் ஆராதிக்கவுமே
வந்தோமெனும் வார்த்தைகளின் பின்னே
இனிவரும் நாளில்
இச்சிறுதேசம் சிந்தப்போகும்
கண்ணீரும் குருதியும் இருக்கலாம்.
வலசை போகும் வழியில்
வந்தனவல்ல இவை.
கூத்து ஆரம்பமானதைச் சொல்லி
அரங்கிற் கோமாளியே முதலில்.
கோமாளிகள் கொலையாளிகளாவதை
அறியாதஏமாளிகளல்ல நாம்.
கழுகிறங்கும் கடற்கரையில்
வண்ணத்துப் பூச்சிகளின் வடிவிருக்காது.
சின்னப்புட்கள் சீட்டியடிக்காது.
ஆமை புகுந்த வீடும் ......புகுந்த நாடும்
விளங்காதென்பது
அடிபட்ட ஒருவனின் அனுபவமொழி.
கழுகளுக்கு அப்படியென்ன
கரிசனை எம்மேல்?
இந்தச் சின்னமணித்தீவுமீதேன்
இத்தனை அன்பு?

வியட்நாம்.
ஒ... அந்த அழகிய வயல்கள்
இந்தக் கழுகுகளின் எச்சத்தால்
எத்தனை வருடங்கள் எரிந்தன.
இன்னுமொரு பாவப்பட்ட பாலைவனம்
இன்னும்தான் அழுதுகிடக்கிறது.
நெடுநாள் தவத்துக்குவரம்
கொடுத்தது சுவாமி.

சுனாமி
நீயாகவும் வந்தழித்தாய்
அழைத்துவந்தும்
அழச் செய்யப்போகிறாய்.
வரலாற்றுத் துயரம் தலைமுறை கடத்தும்
கடத்தப்படுமா எம் முதுகில்
சவாரி செய்பவர்களுக்கு எம்
கண்ணீரளவுஎப்படித் தெரியும்?
மௌனத்தைச் சம்மதமென்றாக்கும்
வழக்கொண்றுண்டு.
உரத்த குரலேதும் இல்லாமை
கழுகுகளுக்கே வாய்ப்பாகும்.
புல்வெளிச் சொந்தமான
வண்ணத்துப்பூச்சிகளே
வாய்திறவுங்கள்.
கடலுறவான ஆட்காட்டிப் பறவைகளே
அவலமுணர்த்திக் குரலிடுங்கள்.

*- புதுவை*

*ஆழிப்பேரலை ஏற்பட்ட 9ம் ஆண்டு நினைவாக கவிஞர் புதுவை இரத்தின துரை அவர்கள் எழுதிய கவிதையொன்று*

## கொக்குவில்,தாவடி,நந்தாவில் நலன் புரிச்சங்க ஒன்று கூடல்
















கொக்குவில், தாவடி, நந்தாவில் நலன் புரிச்சங்க ஒன்று கூடல் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்த ஒன்று கூடல் கலாநிதி ஆறுமுகராசா தலைமையில் 14-12-2013-ம் திகதி சனிக்கிழமை ஈஸ்ற்ஹமில் நடைபெற்றது. நிகழ்வினை செல்வி கோபிஜா நந்தகோபன் தொகுத்து வழங்கினார். பல கலை நிகழ்ச்சிகளுடன் விக்னேஸ் ராகாவின் மெல்லிசை விருந்தும் இடம் பெற்றது.

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகள்
எவையாயிருந்தாலும் பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்
Email: info@orupaper.com www.facebook.com/orupaper

**We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency**

- Residential Property and commercial property **(WE CAN ACT FOR ALL THE LENDERS)**
- Immigration Law
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- CRIME (Business Immigration and Regulatory)
- Outsourcing Law
- Partnership Law
- Contract Law
- Serious Fraud


Residential Property and Commercial Property

Immigration

Intellectual Property

Company Law

Landlord and Tenant

Outsourcing Law


Serious Fraud

Partnership Law

Contract Law

KTS LEGAL Solicitors & Advocates
**KTS Legal Solicitors & Advocates**
Tel:020 8367 0505
Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk

**பராமரிப்பாளர்கள் தேவை...**

தமிழ் பேசக்கூடிய
பராமரிப்பாளர்கள் தேவை.



- To look after an elderly woman in New Malden.
- Must be eligible to work in UK.
- Proof of identity required.
- Week days 9.00am to 3.00pm or 8.30am to 2.30pm.

**தொடர்புகளுக்கு : 07703065593**

# சினிமா

## திரை விமர்சனம்




அதாகப்பட்டது...

'பிரியாணியை விட ஆல் இன் ஆல் அழகுராஜா நன்றாக வந்திருப்பதால், அதை முதலில்விட முடிவு செய்திருக்கிறார்கள்' என்று ஒரு செய்தி அழகுராஜா ரிலீஸ் ஆகும் முன்பு மீடியாவில் வந்தது. அதைப் படித்த பின்னும், பிரியாணியை முதல் ஷோ பார்க்க நெஞ்சுரத்துடன் போனேன் என்றால் அது ஹன்சிகாவுக்காகவா! நோ..! உங்களுக்காக மக்களே, உங்களுக்காக!

ஒரு ஊர்ல..

பெரிய பிசினஸ்மேன் நாசர் காணாமல் போகிறார். (உண்மையில் கொலை செய்யப்படுறார்.) கடத்தல் பழி கார்த்தி மற்றும் பிரேம்ஜி மேல் விழுகிறது. அதில் இருந்து எப்படி மீண்டார்கள் என்பதே கதை.

படத்தோட ஆரம்பக்காட்சிகள் வெங்கட் பிரபுவின் ஏனைய படங்கள் மாதிரியே குடியோடு போகிறது. பிளேபாயாக கார்த்தியும், பிரேம்ஜியும் செய்யும் சில கூத்துகளோடு முதல் அரைமணி நேரம் நகர்கிறது. நாசர் வந்த பிறகு தான் கதை ஆரம்பிக்கிறது என்று நினைக்கிறோம். ஆனால் முதல் அரைமணியிலேயே கதைக்குத் தேவையான முக்கியமான சம்பவங்கள் நடந்திருப்பதை இரண்டாம்பாதியில் சஸ்பென்ஸ் உடையும்போதுதான் புரிந்து கொள்கிறோம்.

பிளே பாய் ஹிரோ என்று செய்திகளில் படித்தபோது 'இது எங்க உருப்படப்போகுது' என்று தான் நம் மனதில் தோன்றியது. ஆனால் ஏற்கனவே காதலியாக இருக்கும் ஹன்சிகாவிடம் நல்லபிள்ளை இமேஜை மெயிண்டெய்ன் செய்துகொண்டே கார்த்தி ஜொள்ளுவதும், மாட்டிக் கொண்டால் பிரேம்ஜி மேல் பழியைப் போடுவதுமாக ஜாலியாகவே சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாம்பாதியில் போலீஸ் துரத்த, அக்காவையும் வில்லன் குரூப் கடத்திக்கொண்டு போய்விட, நாசரின் பிணத்துடன் கார்த்தி ஓடுவதால் படம் வேகமாகவே நகர்கிறது. எதிர்பாராத அந்த கிளைமாக்ஸ் ட்விஸ்ட் அருமை. அதை இடையில் சம்பத் வசனத்தில் சொல்வதை தவிர்த்திருக்கலாம். முதல்பாதியில் சகஜமாக வந்த அந்த கடத்தல் காட்சியே போதுமானது.

மங்காத்தா பாணியில் முதல்பாதி முழுக்க நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் முடிச்சுகள் விழுந்துகொண்டே இருப்பதால், கொஞ்சம் மெதுவாக நகர்கிறது. போலீஸ் துரத்த ஆரம்பித்த பின்பே, படம் வேகம் எடுக்கிறது. அடுத்து உமா ரியாஸ் வந்ததும், இன்னும் வேகம். கொலையாளிகள் வேடத்தில் ஆண்களையே பார்த்துச் சலித்த நமக்கு, உமா ரியாஸ் பாத்திரமும், கார்த்தியுடன் அவர் போடும் சண்டையும் பெரிய மாறுதல். மௌன குரு படத்திற்குப் பிறகு இதில் உமா ரியாஸ்.

நாசரின் மருமகனாக ராம்கி வருகிறார். ரொம்ப நாளைக்கு அப்புறம் மனிதரின் ரீ-எண்ட்ரி. நன்றாகவே நடித்திருக்கிறார். கார்த்தியுடன் சண்டையிடும் போது, பழைய ராம்கியை பார்க்க முடிந்தது. ஜெயப்பிரகாஷ் ஒரு அற்புதமான நடிகர். இதில் அல்லக்கையாக வீணாக்கி விட்டார்கள். சம்பத் நிலைமையும் அப்படியே!

மிக மிக மெதுவான முதல்பாதி மெதுவாக சூடு பிடிக்கும் இரண்டாம்பாதி விறுவிறுப்பான கடைசி அரை மணி நேரம் என்று படம் போவதால், மொக்கை என்றோ சூப்பர் என்றோ ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாத நிலை.

ஒரு படத்தின் வெற்றிக்கு ஹிரோவின் வரலாறும் ஒரு காரணமாகவே இருக்கிறது. சகுனிக்கு முன்புவரை கார்த்திக்கு நல்ல பெயர் இருந்தது. சகுனியின் ஆரம்பித்த சரிவு, அலெக்ஸ் பாண்டியனில் ஆழமாகி, ஆல் இன் ஆல் அழகுராஜாவில் அதள பாதாளத்திற்குப் போய் விட்டது. இப்போது கார்த்தியின் படங்களை சந்தேகக்கண்ணோட்டத்துடனே எல்லோரும் பார்க்கும் அவலநிலை!

தொடர்ந்து வெற்றிப் படங்களைக் கொடுத்த நேரத்தில் வந்திருந்தால், இந்தப் படம் தப்பியிருக்கலாம். விஷால் மாதிரியே கார்த்திக்கும் வந்திருப்பது பெரும் வீழ்ச்சி. பாண்டிய நாடு மூலம் விஷால் உஷார் ஆனது போல், கார்த்தியும் ஆக வேண்டியது கட்டாயம். வழக்கம்போல் நடிப்பிலும், காமெடியிலு கார்த்தி இந்தப் படத்தில் கலக்கியிருக்கிறார். இந்த டான்ஸ் தான் வரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது...

கதைப்படியே ஹன்சிகா ஒரு துணைக் கேரக்டர் தான். எனவே பெரிதாகச் சொல்ல நிறைய இருந்தாலும், பெரிதாகச் சொல்ல ஏதுமில்லை. பாடல்களுக்கு ஆடுவது, ஹிரோவுடன் ஊடல் கொள்வது என கொடுத்த வேலையை நிறைவாகவே செய்திருக்கிறார்.

இசை யுவன் ஷங்கர் ராஜா, யுவனிற்கு இது நூறாவது படமாம். வாழ்த்துகள். வெங்கட் பிரபு படம் என்றாலே முக்கியமானது இசை தான். இதிலும் அப்படியே. வழக்கமான பல்லவி-சரணம் என்று போகாமல், சரணத்தில் புதிதாக சில விஷயங்களை முயற்சித்து இருக்கிறார். முதல் தடவை கேட்கும்போது ஒரு மாதிரி இருந்தாலும், படத்தில் பார்க்க நன்றாகவே இருக்கிறது.

பார்க்கலாமா ?

இது வெங்கட் பிரபுவின் மங்காத்தா அல்ல. . சரோஜா. உங்களுக்கு சரோஜா பிடிக்குமெண்டால் . . . .

ஒரு தடவை பார்த்துவிடுங்கள். . .

*- வாகீசன் - நிலாச்சாரல் வலைப்பதிவு*

## சினித்துளி


### அஜித், விஜயுடன் மோதும் வடிவேலு!



'ஜில்லா', 'வீரம்', 'கோச்சடையான்' படங்கள் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 'கோச்சடையான்' ரிலீஸ் தள்ளிப்போவது உறுதி செய்யப்பட்டதும், இரண்டு படங்கள் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கின்றன. இந்த சூழலில், வடிவேலுவின் 'ஜெகஜால புஜபல தெனாலிராமன்' படமும் அஜித், விஜய் படங்களோடு மோத இருக்கிறதாம். வடிவேலுவின் ரீஎன்ட்ரி பலமாக இருக்க வேண்டும் என்பதற்காக பொங்கலில் ரிலீஸ் செய்ய வேண்டும் என்று திட்டமிடுகிறார்களாம்.

விஜய், அஜித் படங்களுக்குத் தியேட்டர்கள் கைப்பற்றுவதைப்போல, வடிவேலு படத்துக்கும் தியேட்டர்களைக் கைப்பற்றும் முயற்சிகள் நடக்கின்றன. தியேட்டர்கள் கிடைக்கும் பட்சத்தில் தெனாலிராமனை வெளியிடுவார்களாம்.

### தலைமுறைகள்!



நீண்ட இடைவெளிக்குப்பின் மறுபடியும் கேமராவை கையில் எடுத்துள்ளார் இயக்குநர் பாலுமகேந்திரா 8 வருட இடைவெளிக்குப்பின் தலைமுறைகள் என்ற படத்தை இயக்கியுள்ள பாலுமகேந்திரா இப்படத்தில் முதல் முறையாக நடிக்கவும் செய்திருக்கிறார். தாத்தா-பேரன் இடையேயான உறவு பற்றிய மென்மையான கதைதான் இந்த தலைமுறைகள் என்று பாலுமகேந்திரா கூறியுள்ளார். இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார் இசைஞானி இளையராஜா.

சசிகுமார் தயாரித்திருக்கும் இந்த படத்தை வருகிற டிசம்பர் 20ம் தேதி ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

### சூர்யா -வெங்கட் பிரபுவின் புதிய படம்



தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத இயக்குநர்களில் ஒருவராகிப்போன வெங்கட் பிரபு அஜித்தை வைத்து மங்காத்தா என்று கொடுத்தபின் அவருடைய மார்கெட் 10 சூப்பர் ஸ்டார் படம் வெற்றி போல தாறுமாறாக எகிறிப்போயியுள்ளது. தற்போது கார்த்தியை வைத்து பிரியாணி ரெடி செய்துவிட்டு அதை விரைவில் திரையில் பரிமாற காத்துக்கொண்டிருக்கும் அவர் தனது அடுத்த பட அறிவிப்பையும் அதிகாரப்பூர்வமாக அறிவித்துவிட்டார்.

சூர்யா நடிக்கும் படத்தை இயக்கப் போகிறார் வெங்கட் பிரபு. படத்தின் நாயகன் சூர்யா என்று மட்டுமே தற்போது அறிவித்திருக்கிறார்கள். இந்த படத்திலும் பிரேம்ஜி இருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்ல.

### அழகான படங்கள்!



அழகான படங்களைக் கையில் வைத்திருக்கிறார் சிம்பு. கௌதம் மேனன் இயக்கும் படத்தில் மிகவும் புதுமையான வேடமாம். 'விண்ணைத் தாண்டி வருவாயா' படம் போல இந்தப் படமும் பெரிதாக பேசப்படும் என நம்புகிறார்.விரைவில் படபபிடிப்புத் தொடங்குமாம். அது தவிர பிப்ரவரியில் கௌதம் தொடங்கும் அஜித் படத்திலும், சிம்பு நடிக்கிறார். பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு முடிந்தது.

இப்போது செல்வராகவன் இயக்கும் புதிய படத்தில் சிம்பு நடிக்க இருக்கிறார்.

தமிழ்க் கல்விக்கூடம் - குறொய்டன்

தமிழ்வழி நூல்கள் மூலம்
GCSE "O" level – Tamil (Cambridge),
GCSE "A "level – Tamil (Cambridge)
இற்கு மாணவர்கள் தயார்படுத்தப்பட்டு அனுப்பப்படுகிறார்கள்



அத்துடன் நடனம், சங்கீதம்,
வயலின், வீணை,
சுரத்தட்டு (keyboard)
மிருதங்கம்
சைவ சமயம் என்பவையும்
கற்பிக்கப்படுகின்றன.

புதிய தவணை ஆரம்பிக்கும் நாள்
11.01.2014

இப்பள்ளி சனிக்கிழமைகளில் ( பள்ளித் தவணை நாட்களில் ) நடைபெறுகின்றன. நடைபெறும் நேரம் 13.15 மணி முதல் 17.30 மணி வரை

The Archbishop Lanfranc School Mitcham Road, Croydon, CR9 3AS
(On the left- 1st building up stairs)

தொடர்புகளுக்கு : 020 8676 1794 /
07506 770 566 / 07534 502 635

MercuryTalk

*Marry Christmas and Happy New Year*

# 020 3376 6000

sales@mercurytalk.net

**Excellence is more than a Goal. It's a Promise.**

## Connecting your business world with our hosted IP telephony system

From

# £ 8.99 per month



*One Company. One Bill. One Great Savings.*

**Mercury Talk offers a one-stop-shop for all of your telecom products that allows you to save time and money.**

We are delighted to introduce you to MercuryTalk, a leading provider of full range of telecom solutions to both business and residential customers in the UK and Powered by Mercury Group. With extensive experience in the telecommunications industry **MercuryTalk** would be a brilliant choice for the provision of telephone, Mobile and Internet services. We bring together proven and scalable products that effectively address the challenges around improved customer service and operational efficiency whilst simultaneously reducing costs.

## Choose your right package below

### Business line

**Only £2.99 a month**
*for first 6 months

- ✓ UK Local and National Landline calls 1p/min
- ✓ UK Mobile from 7p/min
- ✓ No call set up charge
- ✓ No upfront cost
- ✓ No hidden charges
- ✓ Quality telephone line
- ✓ UK based technical & customer support 24*7*365

### IP Telephony

**From £8.99 a month**

- ✓ No phone line required
- ✓ No upfront cost
- ✓ No hidden charges
- ✓ Cheaper call rates to Local,
- ✓ National & Mobiles
- ✓ Calls to Mobile from 3p/min
- ✓ UK based technical & customer support 24*7*365

### Business line & Unlimited Calls

**Only £19.49 a month**

- ✓ Unlimited Local & National Calls*
- ✓ UK Mobile from 7p/min
- ✓ No call set up charge
- ✓ No upfront cost
- ✓ No hidden charges
- ✓ Quality telephone line
- ✓ UK based technical & customer support 24*7*365

### Business line with Unlimited Calls & Broadband

**Only £29.90 a month**

- ✓ Unlimited Local & National Calls*
- ✓ Unlimited Broadband*
- ✓ No upfront cost
- ✓ No hidden charges
- ✓ Dedicated business broadband speed up to 24MB
- ✓ Quality telephone line
- ✓ UK based technical & Customer support 24*7*365

## Merchant Credit Card Processing

*Card Payment Processing for your Business*




**1.5% per** Credit Card transaction

**15p per** Debit Card transaction

MercuryTalk reserve the right to withdraw or amend this offer without prior notice. Rates may change during contract period. Calls to mobiles outside stanard UK networks may cost extra. *Unlimited calls to UK geographic land-line calls of up to an hour to 01, 02, 03 plus 0870 & 0845 numbers only excluding Channel Islands, indirect access & dial-up internet numbers. Other exclusions and *Fair usage policy applies. Prices shown exclude VAT, discounts, special offers, promotions, charges etc. For full terms & conditions please visit our website: www.mercurytalk.net

Landline | Mobile | Broadband | IP telephony

Follow us on :

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED